2015, April 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/125/News/2015

- உயர் நீதிமன்றத் தீர்ப்பு சர்வஜன வாக்கெடுப்பின்றி ஜனாதிபதிஆட்சி முறையை ஒழிக்க வழி திறந்துள்ளதா ?
- இலங்கையர்களை முட்டாள்களாக்கும் ஏப்ரில் 23
- கட்சிகளல்லாத கட்சிகளின் அரசியலல்லாத அரசியல்
- மத்திய கிழக்குப் போரொன்றின் முன்னரங்க நிலையாக யேமன் மாறியது எவ்வாறு?

## அரசியலமைப்பு சீர்திருத்த அரசியல்



| | |
|---|---|
| INDIA..............IN₹ | 50.00 |
| SRI LANKA....SLR | 100.00 |
| SINGAPORE...SG$ | 14.00 |
| CANADA........CAN$ | 10.00 |
| AUSTRALIA...AUS$ | 10.00 |
| SWISS..............CHF | 10.00 |
| USA...........US$ | 10.00 |
| UK.............GB£ | 5.00 |
| EUROPE..EU€ | 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS





**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாம் வெறுக்கிறவர்களுக்கும் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை என்றால் நாம் அந்த சுதந்திரத்தில் எந்த வகையிலும் நம்பிக்கையில்லாதவர்கள் என்பதே அர்த்தம்

- நோம் ஷோம்ஸ்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமகாலம்
2015, ஏப்ரில் 16 - 30
பக்கங்கள் - 68



09 'உயர் நீதிமன்றத் தீர்ப்பு; சர்வஜன வாக்கெடுப்பில்லாமல் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வழி திறந்துள்ளது'
13 அரசியலமைப்புச் சீர்திருத்த அரசியல்
16 கட்சிகளல்லாத கட்சிகளின் அரசியலல்லாத அரசியல்
22 இலங்கையரை முட்டாள்களாக்கும் ஏப்ரில் 23
24 தமிழ்நாட்டை 'எதிர்க்கும்' தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு?
29 நேதாஜி போஸை நேரு உளவு பார்த்தாரா?
33 பெற்றோர் இல்லாத பிறந்தநாள் கொண்டாட்டம்
36 ஜனதா கட்சியின் வழியில் ஆம் ஆத்மி கட்சி
38 ஜெ-சொத்துக்குவிப்பு வழக்கில் திடீர் திருப்பம்?
44 ஈரானுடனான மேற்குலகின் அணுசக்தி உடன்படிக்கை
48 மத்திய கிழக்கு போரொன்றின் முன்னரங்க நிலையாக யேமன் எவ்வாறு மாறியது?
55 சீன-ரஷ்ய உறவுகள் தேவை கருதிய நட்பும் கொண்டாட்டமும்
58 ஜெயகாந்தன்













*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# விசித்திரமான அரசியல் கோலம்

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்தே அதை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று குரலெழுப்பி வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதைச் சாதிப்பதற்கு தனது பாராளுமன்றப் பலத்தைப் பயன்படுத்தக்கூடிய தகுதியான நிலையில் இன்று இருக்கின்றது. ஆனால், ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு அல்லது குறைந்தபட்சம் ஜனாதிபதி க்கு இருக்கின்ற மட்டுமீறிய அதிகாரங்களைக்குறைப்பதற்குமுன்னெடுக்கப்படுகின்ற அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாக அக்கட்சி விளங்கும் விசித்திரமான ஒரு அரசியல் நிலைவரத்தை இன்று காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு என்ற சுலோகத்தை சுதந்திரக்கட்சியே முதன்முறையாக ஒரு தேர்தல் வாக்குறுதியாக நாட்டு மக்கள் முன் வைத்தது. 1994 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒரு வருடகாலத்திற்குள் அந்த வாக்குறுதியை நிறைவேற்று வதாகக் கூறிக்கொண்டே தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி யதிகாரத்துக்கு வந்தார். 11 வருடங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியில் இருந்த அவர் மேலும் ஒருவருடகாலத்துக்கு அதிகாரத்தில் தொடர்ந்து இருக்க முடியவில்லையே என்ற பெருங்கவலையுடன் தான் வீட்டு க்குப் போனார்.

அவருக்குப் பிறகு 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ தனது முதலாவது பதவிக்காலத்தின் முடிவில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) யுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உறுதியளித்திருந்தார் என்பதை இன்று எத்தனை பேர் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கையின் ஆட்சி நிறுவனக் கட்டமைப்பில் எதேச்சாதிகாரப் போக்கை படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது எனினும் அது ராஜபக்ஷவின் ஒருதசாப்த கால ஆட்சியிலேயே ஒரு உச்ச நிலைக்கு வந்தது. ஜனாதிபதிக்கு இருக்கின்ற மட்டுமீறிய அதிகாரங் கள் நாட்டு மக்களின் குடியியல் உரிமைகளுக்கும் சுதந்திரங் களுக்கும் பொதுவில் ஜனநாயகத்துக்கும் எத்தகைய பாரதூரமான அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கக்கூடியவை என்பதை ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே முழுமையாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி பால சிறிசேன வெற்றிபெற்றதற்கு அவருக்கு இருந்த ஆதரவல்ல, மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று நாட்டுமக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்ட ஓர்மமே காரணம் என்பதிற் சந்தேகமில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக ஆரம்பத்தில் கூறிய மைத்திரிபால சிறிசேனவும் பிறகு தனது நிலைப்பாட்டைத் தளர்த்தி ஜனாதிபதிக்கு இருக்கின்ற மட்டுமீறிய அதிகாரங்களில் குறைப்புச் செய்யப் போவதாகவே தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்தார். தேர்தலில் வெற்றிபெற்ற மறுநாளே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்த மைத்திரிபாலவின் 100 நாள் 'நல்லாட்சி' யில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கான அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகள் எந்த இலட்சணத்தில் கையாளப்பட்டு வந்திருக்கின்றன என்பதை முழு நாடுமே அறியும்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சுதந்திரக்கட்சியே அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளுக்கு பெரிய முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. பாராளு மன்றத்தில் 126 உறுப்பினர்களைக் கொண்ட சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தத்தையும் நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை அரசாங்கத்தினால் பெற முடியாது.

ஜனாதிபதியின் அதிகாரங்களில் பெரிதாக எந்தக் குறைப்பையும் செய்யாத அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் கூட நிறைவேறாமல் தடுக்கும் கைங்கரியங்களிலேயே சுதந்திரக்கட்சி தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

19ஆவது திருத்தத்தையும் தேர்தல் முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான திருத்தத்தையும் ஏககாலத்தில் நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி இணங்கினால் மாத்திரமே தங்களது ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்கள் இடையறாது கூறிக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல்முறை மாற்றத்துக்கான 20ஆவது அரசியலமைப்புத் திருத்த யோசனைகளின் வரைவையும் சுதந்திரக்கட்சி முன் வைத்திருக்கிறது.

(35ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## ரணிலின் சிந்தனைக்கு

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அண்மைக் காலமாக நிலவிவரும் கசப்புணர்வு குறித்து கடந்த சமகாலம் இதழில் ஆசிரிய தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது. அந்த கசப்புணர்வுக்கான காரணம் குறித்தும் அதில் கூறப்பட்டிருந்தது. வடக்கில் இராணுவத்தின் அதீத பிரசன்னம் குறித்து முதலமைச்சர் கொண்டிருக்கும் கவலையும் அதை அலட்சியம் செய்யும் போக்கில் பிரதமர் எடுத்திருக்கும் நிலைப்பாடுமே கசப்பு நிலைக்கு காரணம் என்பதை ஆசிரிய தலையங்கம் தெளிவாக விளக்கியிருந்தது.

காரணம் அதுவாக இருந்தாலும் கூட , விக்னேஸ்வரனுடன் முரண்பாட்டை வளர்த்துக் கொண்டால், வடமாகாணசபைக்கு அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் கீழ் இருக்கக்கூடிய அதிகாரங்களைக் கொடுக்காமல் நீண்டகாலத்துக்கு இழுத்தடித்துக்கொண்டிருக்கலாம் என்று நினைக்கக்கூடியவர் தான் ரணில் விக்கிரமசிங்க.

விக்னேஸ்வரன் போன்ற மிதவாதப் போக்குடைய தமிழ்த் தலைவர்களுடன் விவகாரங்களைச் சுமுகமாகக் கையாள முடியாத விக்கிரமசிங்க போன்றவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஆரோக்கியமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க மனங்கொள்வார்கள் என்று தமிழர்கள் இனிமேலும் நம்பிக்கை கொண்டிருப்பதா?

முதலமைச்சருடன் பிரதமர் கொண்டிருக்கும் முரண்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லாமல் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. இதை பிரதமர் புரிந்துகொண்டு செயற்பட்டால் அவருக்குத் தான் நல்லது.

காராளசிங்கம் செல்வராசா,
பருத்தித்துறை.

## லீ குவான் யூ

காலஞ்சென்ற சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ குறித்து நான்கு கட்டுரைகள் கடந்த இதழில் வெளியாகியிருந்தன. அனைத்துமே தரமானவை. 'லீயும் இலங்கையும்' என்ற தலைப்பில் பாலன் என்பவர் எழுதியிருக்கும் கட்டுரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பற்றி லீகுவான் யூ எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார் என்பதை இரத்தினச் சுருக்கமாக தந்திருக்கிறது. ராஜபக்ஷவை சிங்களத் தீவிரவாதி என்று லீயைத் தவிர வேறு எந்த உலகத் தலைவருமே வெளிப்படையாகக் கூறியிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

சோமசுந்தரம் பாலரூபன், வவுனியா.

## ராஜபக்ஷவும் நெதான்யாகுவும்

'நெதான்யாகுவும் ராஜபக்ஷவும்- இருதலைவர்களின் ஒரு கதை' என்ற தலைப்பிலான ராஜன் பிலிப்ஸின் ஆய்வு சிறப்பாக இருந்தது. நாம் முன்னர் அறிந்திராத பல தகவல்களை அதில் அறியக்கூடியதாக இருந்தது. பின்பற்றக்கூடிய உதாரணங்களுக்காக அல்ல தவிர்க்க வேண்டிய நடைமுறைகளுக்காகவே இலங்கையர்கள் இஸ்ரேலை யும் பாலஸ்தீனர்களையும் நோக்க வேண்டும் என்ற ஆலோசனை மிக மிகச் சரியானதே.

ரகுபரன் உமாதேவி, அச்சுவேலி.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி: 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.பல்கலைக்கழகம்

கடந்த இதழின் கடைசிப்பக்கத்தில் கோ.கைலாசநாதன் என்பவர் தெரிவித்திருக்கும் பல கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையே. அவரின் ஆதங்கத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பற்றி முன்வைத்திருக்கும் எதிர்மறையான விமர்சனங்கள் மிகவும் கவலைதருவனவாக இருக்கின்றன. இத்தகைய விமர்சனங்கள் ஏன் வருகின்றன என்பதை யாழ்.பல்கலைக்கழகக் கல்விச் சமூகம் சிந்தித்துப் பார்த்து நிலைவரங்களைச் சீர்செய்யவேண்டும். கைலாசநாதனிடமிருந்து மாத்திரமல்ல, வேறுபலரும் கூட, பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் அந்தப் பல்கலைக்கழகத்தைப் பற்றி பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்ததைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. இத்தகைய நிலை தொடருவது உகந்ததல்ல.

பாலேஸ்வரி- சண்முகம், கரவெட்டி.

### புதிய தேசியத்தலைவர்

இந்திய அரசியல் ஆய்வாளர் என்.சத்தியமூர்த்தி வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை இலங்கைத் தமிழர்களின் புதிய தேசியத் தலைவர் என்றவாறாக வர்ணிக்க முனைகிறார். விக்னேஸ்வரன் அவர்களைப் பொறுத்தவரை அவர் தலைமைத்துவப் பதவிகளுக்காக ஆசைப்படுபவர் அல்ல.

அண்மைக்காலமாக விக்னேஸ்வரன் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து வெளிப்படுத்தி வருகின்ற துணிச்சலான கருத்துக்கள் தமிழ்ச் சமூகத்திடமிருந்து பரந்துபட்ட ஆதரவைப் பெறுகின்றன என்பதில் சந்தேகமில்லை. அவரின் கருத்துக்களைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

ஏனைய தலைவர்களை 'குட்டி முந்திக்கொண்டு' போக வேண்டுமென்பதற்காக தனது கருத்துக்களை வெளியிடக்கூடிய மனோபாவம் கொண்டவராக விக்னேஸ்வரனைக் கருதவும் கூடாது. ஏனென்றால், அவர் அரசியலுக்கு ஆசைப்பட்டுவந்தவரல்ல, வலிந்து இழுத்துக்கொண்டு வரப்பட்டவர்.

விக்னேஸ்வரன் தமிழ்ச் சமூகத்தைப் பயன்படுத்தி தனக்கு அனுகூலத்தைத் தேடிக் கொள்பவர் அல்ல. அவரைப் பயன்படுத்தி தமிழ்ச் சமூகம் பயனடைந்து கொள்ள தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வீரகத்தி கதிர்காமநாதன், கிளிநொச்சி.

### வேண்டுகோள்

சமகாலத்தின் சில இதழ்களில் திரைவிமர்சனத்தையும் பனுவல் பார்வையையும் காண முடிவதில்லை. சகல அம்சங்களையும் கொண்டதாக சஞ்சிகை அமைந்தால்தான் அது முழுமையானதாக இருக்கும். இதை கருத்தில் கொண்டு ஆசிரியர் குழு செயற்படும் என்று நம்புகிறேன்.

கவிதா முத்தையா, மந்தண்டாவளை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 20
**2015, ஏப்ரில் 16 - 30**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)


**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

நெருக்கமாக நின்று பார்க்கும் போது வாழ்க்கை ஒரு அவலம். தொலைவில் நின்று பார்க்கும் போது அது ஒரு நகைச்சுவை.

\- சார்ள்ஸ் சப்ளின்



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்: 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரக்குழுலம்....

நான் அதிகாரத்தில் இருந்தபோது எனக்கு முன்னால் நிலத்தில் அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்த சில அமைச்சர்கள் இப்போது தெரிவிக்கின்ற கருத்துகளைப் பார்க்கும்போது எனக்கு பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது. அவர்களுடைய செயற்பாடுகள் பற்றி சகலதையும் அறிந்தவன் நான் ஒருவன் மாத்திரமே.
யார் யாரெல்லாம் மனிதர்கள் என்று அழைக்கப்படுவதற்குப் பெறுமதியானவர்கள் என்பதை மக்கள் விரைவில் விளங்கிக் கொள்வார்கள்.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

நுகேகொடை குழு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தவியாய்த் தவிக்கிறது. ஆனால், நாளுக்கு நாள் அவர்கள் தங்கள் ஆதரவாளர்களை இழந்துவருகிறார்கள். நுகேகொடை கூட்டத்துக்கு 20 ஆயிரம் பேர் போனார்கள். இரத்தினபுரி கூட்டத்துக்கு 5000 பேர் போனார்கள். அவர்களின் மேதினக் கூட்டம் புஸ்வாணமாகிப் போகும் என்றே தெரிகிறது.



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

அரசியலமைப்பு திருத்தப்பட்டதும் எதிர்காலத்தில் எந்தவொரு குடும்பமும் நாட்டை அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இடமில்லாமல் போகும்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

முன்னைய அரசாங்கத்தில் நிலவிய குறைபாடுகளைப் பற்றி நாம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். அந்தக் குறைபாடுகளை எவ்வாறு நிவர்த்தி செய்து மக்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் சேவை செய்வது என்பது குறித்தும் ஆராய்கிறோம். நாம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டால் அந்தத் தவறுகள் மீண்டும் நிச்சயமாக இடம்பெறாது. கடந்த காலத் தவறுகள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு குறிப்பிட்ட சில குழுக்களை நாம் நியமிப்போம்.



மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தன

சீர்திருந்திய ஒரு மகிந்த ராஜபக்ஷவையே நாம் விரும்புகிறோம். அடுத்த தடவை அவரை ஒரு பிரதமராகக் கொண்டுவந்து மக்களுக்கு சேவையாற்றவே நாம் முயற்சிக்கிறோம். பிரதமராக வந்தார் என்றால், அவர் எமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பார். அவர் மீண்டும் ஜனாதிபதியாவதை நான் ஒருபோதுமே விரும்பமாட்டேன். குறைக்கப்பட்ட அதிகாரங்களுடனான ஜனாதிபதியாகக் கூட அவர் வருவதை நான் விரும்பவில்லை.



ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க பெற்ற வாக்குகளையும் விட கூடுதலான வாக்குகளைப் பெற்று காட்ட முடியுமா? என்று முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நான் சவால் விடுக்கிறேன்.



மேல்மாகாண அமைச்சர் உதயகம்மன்பில

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 10 வருடங்களில் செய்ததையும்விட கூடுதலான சேவைகளை நாம் 88 நாட்களுக்குள் செய்து காட்டியிருக்கிறோம்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

நான் புதியதொரு அரசியல் கட்சியை ஆரம்பிக்கப்போகிறேன். ஜே.வி.பி.யைச் சேர்ந்த எவரையும் அதில் இணைந்துகொள்ளுமாறு கேட்பதில் எனக்கு ஆர்வமில்லை. அவர்கள் தங்கள் விருப்பத்துக்குரிய கொள்கைப்படி நடந்துகொள்ளலாம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்தவொரு அரசியல் கட்சியையும் பிளவுபடுத்திவிடக்கூடிய ஆற்றலுடன் இப்போது இல்லை.



ஜே.வி.பி.முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உயர் நீதிமன்றத் தீர்ப்பு

## சர்வஜன வாக்கெடுப்பில்லாமல் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வழி திறந்துள்ளது'



உள்நாட்டு அரசியல்

அரசாங்கத்தின் அரசியல் யாப்பை வரையும் குழுவின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்த ரணியுமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்தின அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தச் சட டம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பினைப் பற்றிக் கருத்துத்துரைக்கையில் பின்வருமாறு கூறி னார்.

'நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே நான் வாதாடி வந்துள்ளேன். ஆனால் இன்றைய சூழ் நிலையில் அதனை முற்றாக ஒழித்தல் சாத்திய மில்லை. ஆயினும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதற்கு நான் தொடர்ந்து பாடுபடுவேன்' கொழும்பு ரெலிகிராஃப் இணை யத்தளத்திற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் இவ்வாறு கூறிய விக்கிரமரத்தின 'சர்வஜன வாக் கெடுப்பு இல்லாமலேயே ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான வழியை உயர்நீதிமன்றத் தீர்ப்பு திறந்துள்ளது' என்ற கருத்தையும் முன் வைத்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தீர்ப்பில் வற்புறுத்தப்பட்ட சட்ட வியாக்கியானத்தை அவர் பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார்.

ஜனாதிபதியே நிறைவேற்றுத்துறையின் தலை வர் என்பது கட்டாயத் தேவை. 'செயல் அல்லது முடிவு' என்பனவற்றை நிறைவேற்றும் அதி உயர் தலைவர் அவரேயாவார். அவரிடமே 'Act or decision'ற்கான அதிகாரம் இருக்கும் என் பதும் கட்டாயமானது. நான் இச் 'செயல் அல்லது முடிவு' என்ற சொற்தொடரில் உள்ள அல்லது என்ற சொல்லிற்கு அழுத்தம் கொடுக்க விரும் புகிறேன். இதன்படி ஜனாதிபதியின் இறுதியான செயல் (Act) அவரிடமே இருக்கும். அவரே அந்தச் 'செயலை'ச் செய்வார். ஆயினும் அச்செ யலைச் செய்வதற்கான முடிவை (decision) பிறர் ஒருவரின் ஆலோசனைப்படி கூட அடைய லாம். இந்த விளக்கத்தின் அடிப்படையில் தான் ஜனாதிபதி மந்திரிகளின் நியமனத்தை பிரதம மந்திரியின் ஆலோசனையின்படி (to act on the advise of the p.m) செய்வதை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. அத்தோடு சுதந்திர ஆணைக்குழுக்களும் அரசியல் யாப்புச் சபை யின் ஆலோசனைப்படியே ஜனாதிபதியால் நிய மனம் செய்யப்படும். ஜனாதிபதி ஆலோச னையை அல்லது சிபார்சைப் பிறர் ஒருவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத் தன் செயலைச் செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை. ஜனாதிபதி நிர்வாகத்துறையின் தலைவராக (Head of the executive) இருப்பார் என்பதை நான் ஒரு போதும் எதிர்க்கவில்லை. உண்மையில் 1972 அரசியல் யாப்பில் கூட ஜனாதிபதி நிறைவேற்றுத் துறையின் தலைவராக இருந்தார். அவர் பிரதமரின் ஆலோசனைப்படி செயற்பட்டார்.

19 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பன பற்றி 'கொழும்பு ரெலிகிராஃப்' அவரை நேர்காணல் செய்தபோது அவர் கூறியவை கேள்வி-பதில் வடிவில் இங்கே தரப்பட்டுள்ளன.

**கேள்வி: 19ஆவது திருத்தத்திற்கு உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புப் பற்றி உங்கள் கருத்தைக் கூறுவீர்களா?**

பதில் : அரசியல் யாப்பின் 4ஆவது உறுப்புரை பற்றி உயர்நீதிமன்றம் கூறியிருக்கும் விளக்கம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. உறுப்புரை 4 ஐ உறுப்புரை 3 உடன் இணைத்து வாசிக்கும் போது திருத்த மசோதாவில் பல பொருந்தாமைகள் தோன்றுகின்றன அல்லவா? இவ்வித பொருந்தாமை (Inconsistency) ஒவ்வொன்றும் சர்வஜன வாக்கெடுப்பை தேவைப்படுத்துவதில்லை. உறுப்புரை 3 கூறுவதாவது 'இறைமை மக்களிடமே உறைகின்றது. இது பறித்தெடுக்கப்பட முடியாதது. இறைமை என்பதில் அரசாங்கத்தின் அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை என்பன உள்ளடங்குகின்றன'. உறுப்புரை 4 இதை விட விரிவானது. நான் இங்கே எனது வாதத்திற்குப் பொருத்தமான பகுதியொன்றை மட்டும் மேற்கோளாகத் தருகிறேன். உறுப்புரை 4 (b) கூறுவதாவது 'இலங்கையின் பாதுகாப்பு உட்பட மக்களின் அதிகாரங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட குடியரசின் ஜனாதிபதியினால் பிரயோகிக்கப்படும். உறுப்புரை 83 ஐ அடுத்துப் பார்ப்போம். இவ்வுறுப்புரைதான் அரசியல் யாப்பின் எந்தெந்த உறுப்புரைகள் பொருந்தாமையுடையனவாக இருக்குமிடத்து சர்வஜனவாக்கெடுப்பினை நடத்தித் திருத்தம் செய்யப்பட வேண்டியவை என்பதைப் பட்டியலிட்டுக் கூறுகிறது. உறுப்புரை 83 தரும் பட்டியலில் உறுப்புரை 3 இடம் பெறுகிறது. ஆனால் உறுப்புரை 4 சேர்க்கப்படவில்லை. 1978 ஆம் ஆண்டில் அரசியல் யாப்பு மசோதாவாக தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட போது உறுப்புரை 4, 83 இல் சேர்க்கப்பட்டிருந்தது என்ற விடயத்தை நான் குறிப்பிடவேண்டும். ஆனால் குழு நிலையில் உறுப்புரை 4 பற்றிய குறிப்பு உறுப்புரை 83 இல் இருந்து நீக்கப்பட்டுவிட்டது.

> *ஜனாதிபதி சட்டத்தரணியும் பிரபல சட்ட அறிஞருமான ஜயம்பதி விக்கிரமரத்தின உயர்நீதிமன்றத் தீர்ப்பு சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தச்சட்ட மூலம் நிறைவேறுவதற்கு வழி திறந்துள்ளது என்கிறார். 'Act or decision' என்ற தொடரில் உள்ள அல்லது (or) முக்கியமானது என்று கூறும் விக்கிரமரத்தின, ஜனாதிபதி நிறைவேற்றுத் தலைவராக, அப்பதவிக்குரிய 'செயல்' (Act) ஐ ஆற்றுபவராக இருப்பார்; இது கட்டாயமானது. ஆயினும் அவர் இன்னொருவரின் (பிரதமமந்திரி, அரசியல் யாப்புச் சபை) ஆலோசனைப்படி 'முடிவு' செய்வதில் தடையேதும் இல்லை என்று விளக்கம் தருவதாக உயர் நீதிமன்றத்தீர்ப்பு உள்ளதென்று கூறுகிறார். (ஆ-ர்)*

**கேள்வி: 17 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தபோது உயர்நீதிமன்றம் என்ன கூறியது. சரத் என்.சில்வா தலைமையிலான அதே உயர் நீதிமன்றம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தேவை இல்லை என்று கூறியதல்லவா?**

பதில்: நீங்கள் சொல்வது சரியானது. 17ஆவது திருத்தம் சம்பந்தமான விடயத்தில் உயர்நீதிமன்றம் கூறியது இதுதான். சில உத்தியோகத்தர்களின் நியமனம், ஆணைக் குழுக்களுக்கு ஆட்களை நியமித்தல் என்பவற்றை அரசியல் யாப்புச்சபையின் ஆலோசனைப்படி செய்வதால் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பாதிக்கப்படும் என்றும் அது அரசியல் யாப்புக்கு முரணானது என்றும் கூற முடியாது. இப்போது 19 ஆவது திருத்தம் தொடர்பாக உயர்நீதிமன்றம் முந்தியதை விடக்குறுகிய ஒரு விளக்கத்தையே கூறியது. 13 ஆவது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு உயர்நீதிமன்றின் முழு அமர்வுத் தீர்ப்பாகும். அது மேற்கோள் காட்டப்படவில்லை.

2002 இல் 19ஆவது திருத்தம் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு வந்த போது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை அவரது தனிப்பட்ட அதிகாரமாகப் பார்க்கக் கூடாது, அது மக்களின் அதிகாரத்தோடு இணைத்தே நோக்கப்பட வேண்டும் என்று நீதிமன்று கூறியது. ஆயினும் உறுப்புரை 3, 4 என்ற இரண்டும் ஒருசேர இணைத்து வாசிக்கப்பட வேண்டும் என்றும் கூறியது உறுப்புரை 4 இல் பொருந்தாமை இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்ற கருத்து அக்கூற்றில் உட்கிடையில் பொதிந்திருந்தது.

**கேள்வி: தற்போது உயர்நீதிமன்றம் என்ன கூறியது?**

பதில்: நீதியரசர் சர்வானந்தா கூறிய தீங்கான தாக்கம் (prejuicial impact) என்ற தொடரை உபயோகிக்கவில்லை. ஆயினும் ஒரு விடயத்தை அது தெளிவாகக் கூறியது. 'உறுப்புரை 4 இனை மீறுவதான எல்லா விடயங்களும் உறுப்புரை 3இன் மீறலாக கட்டாயம் அமைய வேண்டியதில்லை' இதுமிக முக்கியமான முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி : உயர்நீதிமன்றத் தீர்ப்பின் ஏனைய முக்கிய அம்சங்கள் எவை எனக்கூறுவீர்களா?**


பதில் : ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது தனது தற்துணிவைப் பிரயோகிப்பதனைக் குறைக்கும் வகையிலான எத்திருத்தமும் உறுப்புரை 3 இனை மீறுவதாக இருக்கும் என்ற வாதத்தை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது. ஆதலால் அத்தகைய ஒரு திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்ற வாதமும் நிராகரிக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் எந்த வகையான கட்டுப்பாடுகளும் அற்றவை, அரசாங்கத்தின் பிற அங்கங்களின் கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி அவர் செயற்படுவார் என்பது அரசியல் யாப்பின் நோக்கம் அன்று என உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. இத்தீர்ப்பினால் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர் என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஜனாதிபதி 'செயல் அல்லது முடிவு' (act or decision) எடுக்கும் அதிகாரத்தை தம் மிடம் வைத்திருக்கும் வரை இறைமைக்குப் பங்கம் ஏற்பட முடியாது. ஆகையால் சர்வஜன வாக் கெடுப்பு தேவையில்லை என்பதே உயர் நீதி மன்றத் தீர்ப்பின் சாராம்சமாகும்.

இதனை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம். 19 ஆவது மசோதாவில் உறுப்புரை 43(2) இன் படி ஜனாதிபதி, பிரதமரின் ஆலோசனைப்படி மந்திரிகளை நியமிப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. இதனை அடுத்து 43 (3) இல் ஜனாதிபதியிடம் மீண்டும் செல்லாமலே பிரதமர் மந்திரிகளின் விடயப் பொறுப்புக்களையும் பணிகளையும் மாற்றி அமைக்கலாம், தீர்மானிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. 43 (3) இற்கு சர்வஜன வாக்கெடுப்புத் தேவை என்று உயர்நீதிமன்றம் கூறியது. ஆனால், 43 (2) ஐ சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமலே திருத்தலாம் என்று கூறியது. இது முக்கியமான ஒரு முடிவு என்று நான் கருதுகிறேன். இதன் மூலம் நீதிமன்றம் கருதுவது என்ன? செயலிற்கான இறுதி அதிகாரம் ஜனாதிபதியிடம் தான் உள்ளது. அப்படியிருக்கும் போது அவர் பிரதமரின் ஆலோசனைப்படி அச்செயலை செய்வார் என்னும் போது அதற்குச் சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லை. இன்னொரு முக்கியமான பிரச்சினை பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் ஆகும். இன்றுள்ள அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி பாராளுமன்றத்தை எந் நேரமும் கலைக்கலாம். ஆனால் இதற்கு முந்திய பாராளுமன்றம் அதன் கால எல்லை முடிவதற்கு முன்னரே கலைக்கப்பட்டிருந்தால், புதிய பாராளுமன்றத்தை ஒருவருடத்தின் பின்னரே கலைக்கலாம். 2002 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தப்படி ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒருவருட காலத்திற்கு முன் கலைக்க முடியாது எனக்கூறியது . ஒரு வருடத்தின் பின்னர் கலைப்பதானாலும், பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ஜனாதிபதியின் கட்சியைச் சேராதவர்களாய் இருந்தால் பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கைப்படிதான் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என்றும் அத்திருத்தத்தில் கூறப்பட்டு இருந்தது. உயர்நீதிமன்றம் இத்திருத்தத்தை நிராகரித்ததோடு, பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தின் அரைப்பங்கான 3 வருடத்தைப் பூர்த்தி செய்தபின் அதனை ஜனாதிபதி கலைக்கலாம் என்று திருத்தம் செய்வதற்குச் சர்வஜன வாக்கெடுப்பின்படியான சம்மதம் தேவையில்லை என்றும் கூறியது. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள மசோதாவில் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை உறுப்பினர் கோரிக்கை விடுத்தால் அல்லாமல்



ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் எந்தவகையான கட்டுப்பாடுகளும் அற்றவை. அரசாங்கங்களின் பிற அங்கங்களின் கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி அவர் செயற்படுவார் என்பது அரசியல் யாப்பின் நோக்கம் அல்ல என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. இத்தீர்ப்பினால் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதித் தேர்தலின் போது நாம் சில மட்டுப்பாடுகள் பற்றி உடன்பாட்டிற்கு வந்திருந்தோம். ராஜபக்ஷ ஆட்சியை தோற்கடிக்க விரும்பிய கட்சிகள் அனைத்தும் ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதில் உடன்பாடு உடையனவாக இருக்கவில்லை. ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத்தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு என்று மூன்று தேர்தல்களை ஒரு வருடத்துக்குள் நடத்த நாடு தயாரா என்பது ஒரு பிரச்சினை

ஜனாதிபதி 4 1/2 ஆண்டுகள் கழியும் முன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. இவ்விதம் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் இத் திருத்தத்திற்குச் சர்வஜன வாக்கெடுப்புத் தேவையென உயர்நீதிமன்றம் கருதவில்லை.

**கேள்வி: உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறதா?**

பதில் : பொதுவாக எனக்கு மகிழ்ச்சிதான். நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே நான் வாதாடி வந்துள்ளேன். ஆனால் இன்றைய நிலையில் அதனை முற்றாக ஒழித்தல் சாத்தியமில்லை. ஆயினும் இதனை முற்றாக ஒழிப்பதற்கு நான் தொடர்ந்து பாடுபடுவேன். சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமலே ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான வழியை உயர்நீதிமன்றத் தீர்ப்புத் திறந்துள்ளது. ஜனாதிபதியே நிறைவேற்றுத் துறையின் தலைவர் என்பது கட்டாயமானது. அவர் நிறைவேற்றுச் 'செயல் அல்லது முடிவு' (Act or decision) என்பதனை நிறைவேற்றும் அதிஉயர் தலைவர். 'செயல் அல்லது முடிவு' என்று வரும் இத்தொடரில் உள்ள அல்லது என்ற சொலிற்கு நான் அழுத்தம் கொடுக்க விரும்புகிறேன். இதன்படி இறுதியான செயல் ஜனாதிபதியினுடையதே. அவரே அந்தச் செயலைச் செய்வார். ஆயினும் அச்செயலைச் செய்வதற்கான முடிவைப் பிறர் ஒருவரின் ஆலோசனைப்படி கூட அடையலாம். இந்த விளக்கத்தின் அடிப்படையில் தான் ஜனாதிபதி மந்திரிகளின் நியமனத்தைப் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி செய்வதை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. அத்தோடு சுதந்திர ஆணைக்குழுக்களும் அரசியல் யாப்புச் சபையின் ஆலோசனைப்படியே ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும். ஜனாதிபதி ஆலோசனையை அல்லது சிபார்சைப் பிறர் ஒருவரிடம் பெற்றுத்தன் செயலைச் செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை. ஜனாதிபதி நிர்வாகத்துறையின் தலைவராக (Head of the executive) இருப்பார் என்பதை நான் ஒருபோதும் எதிர்க்கவில்லை. உண்மையில் 1972 அரசியல் யாப்பில் கூட ஜனாதிபதி நிறைவேற்றுத்துறையின் தலைவராக இருந்தார். அவர் பிரதமரின் ஆலோசனைப்படி செயற்பட்டார்.

**கேள்வி : சிங்கள தேசியவாதிகள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதை எதிர்க்கிறார்கள் போல் தெரிகிறது அல்லவா?**

பதில்: அப்படிச் சொல்ல முடியாது. தீவிரவாத தேசியவாதிகளான ராஜபக்ஷ ஆதரவாளர்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றமில்லாமல் வைத்திருக்க விரும்புகிறார்கள். மாற்றுவதாயினும் சிறிய மாற்றங்களையே விரும்புகிறார்கள். இந்த அரசாங்கத்தில் இருக்கும் சில தேசியவாதிகள் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதையே விரும்புகிறார்கள். அவர்களுக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக வண.அத்துரலியே ரத்தின தேரரின் பிவித்துறு ஹெடக் பிரிவு புறம்பாக ஒரு 19 ஆவது திருத்தத்தை முன் வைத்தது. உறுப்புரை 44 (1) (b) யை அவர்கள் பிரதமரே அரசாங்கத்தின் தலைவராகவும், மந்திரிசபைத் தலைவராகவும் இருக்கும் வண்ணம் திருத்தம் செய்வதைச் சிபார்சு செய்தனர்.

**கேள்வி: 19ஆவது திருத்த மசோதா உங்களுக்குத் திருப்தி தருவதாக உள்ளதா?**

பதில்: ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது நாம் சில மட்டுப்பாடுகள் பற்றி உடன்பாட்டிற்கு வந்தோம். ராஜபக்ஷ ஆட்சியைத் தோற்கடிக்க விரும்பிய கட்சிகள் அனைத்தும் ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதில் உடன்பாடு உடையனவாய் இருக்கவில்லை. அடுத்ததாக ஒருவருடத்திற்குள் மூன்று தேர்தல்களை நடத்துவதற்கு முடியுமா? ஜனாதிபதித் தேர்தல்,

*(28ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்
எஸ்.ஐ.
கீதபொன்கலன்

# அரசியலமைப்புச் சீர்திருத்த அரசியல்

**தற்போதைய வடிவில் அரசியலமைப்புத் திருத்த யோசனைகள் அங்கீகரிக்கப்படுமானால் ஜனாதிபதியிடமிருந்து ஒரு சில அதிகாரங்கள் மாத்திரம் பறிக்கப்படும். பிரதமர் வெறும் இறப்பர் முத்திரையாகவே தொடர்ந்து இருப்பார்**

இலங்கையில் 2015 ஜனவரியில் ஏற்பட்ட அரசாங்க மாற்றம் நாட்டின் கவனத்தை குறைந்தபட்சம் ஓளரவுக்கேனும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் நோக்கி திருப்பியிருக்கிறது. ஆட்சி முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றார். பெருமளவு காலத்தை விரயமாக்காமல், தற்போதைய அரசாங்கம் முதலில் அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகள் வரைவு ஒன்றை முதலிலும் பிறகு அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தம் என்றழைக்கப்படும் சட்ட மூலவரைவையும் இறுதியாக 19 ஆவது திருத்தத்துக்கான சில மாற்றங்களையும் வெளியிட்டது. இந்த யோசனைகள் பல அம்சங்களை உள்ளடக்கியிருக்கின்றன. இந்தக் கட்டுரை முக்கியமான அம்சத்தை அதாவது, ஜனாதிபதியின் அதிகாரங்களையும் அதைச் சுற்றியுள்ள அரசியலையும் பற்றியே ஆராய்கிறது.

### முதலாவது யோசனை

அரசியலமைப்பில் சீர்திருத்தங்களைச் செய்வதற்காக 2015 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட முதலாவது யோசனை தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒரு பாராளுமன்ற அரசாங்க முறையாக மாற்றுவதற்கான விதப்புரையை முன்வைத்ததால் சில அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வரும் நோக்கமுடையதாக இருந்தது. மூல முதல் யோசனையின் பிரகாரம் 'பிரதமரை நியமிக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர, மற்றும்படி எல்லாவேளைகளிலும் பிரதமரின் ஆலோசனையின் படியே ஜனாதிபதி செயற்பட வேண்டுமென்று' கூறியது. பிரதமரே அரசாங்கத்தின் தலைவராகவும் இருப்பார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது ஒருவகையில் ஆவலைத் தூண்டுகின்ற அளவுக்கு வித்தியாசமானதாகத் தோன்றியது. ஏனென்றால் ஜனாதிபதி சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளிக்கவில்லை. ஜனாதிபதிக்கு இருக்கின்ற 'ஏக ஆதிபத்திய' அதிகாரங்களை நீக்குவதாக மாத்திரமே அவர் உறுதியளித்திருந்தார். அவ்வாறிருந்த போதிலும், சிறிசேனவின் தேர்தல் பிரசாரத்துக்கு உத்வேகத்தையூட்டிய ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புவாதிகள் பெருமிதமடைந்தனர்.

ஆனால், அரசியல் கட்சிகளையும் தத்துவார்த்தப் பிரிவுகளையும் உள்ளடக்கிய சில சிங்களத் தேசியவாதக் குழுக்கள் குறிப்பாக, ஜாதிக ஹெல உறுமய வெகுண்டெழுந்தன. உத்தேச மாற்றங்களை ஆதரிக்கப் போவதில்லை என்று இவர்கள் பிரகடனம் செய்தது ஏன்? தளர்வுறச் செய்யப்படக்கூடிய அரசியல் தலைமைத்துவம் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதகமாக அமையும் என்று இக்குழுக்கள் நம்பின. இந்த எண்ணம் இரு அனுமானங்களை அடிப்படையாகக்கொண்டது.

ஒன்று, பலம்பொருந்திய ஒரு அரசியல் தலைமைத்துவம் (ஜனாதிபதி ஆட்சி முறை) விடுதலைப்புலிகள் மீண்டும் தலையெடுக்கக்கூடிய சாத்தியப்பாட்டை தடுப்பதற்கான ஒரு முன்னிபந்தனை. விடுதலைப்புலிகள் மீண்டு வரக்கூடிய ஆபத்து பற்றிய பயவுணர்வு இந்தக் குழுவினர் மத்தியில் மிகவும் ஆழமாக இன்னமும் இருக்கிறது. புலம்பெயர் தமிழர்களினதும் மேற்குலகில் உள்ள சினேகபூர்வ அரசாங்கங்களினதும் உதவியுடன் விடுதலைப்புலிகள் மீண்டு வந்துவிடுவார்கள் என்று இவர்கள் நம்புகிறார்கள். இரண்டாவது, பாராளுமன்ற அரசாங்கமுறை தமிழ்க்கட்சிகளின் குறிப்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பெருப்பிக்கும் உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்குமென்பதால் எதிர்கால அரசாங்கங்கள் அநாவசியமாக தமிழர்களுக்கு சலுகைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைக் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படக்கூடிய ஆபத்து ஏற்படுமென்று சிங்களதேசியவாதிகள் அஞ்சுகி றார்கள். நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக் கக் கூடிய பிரதமரொருவர் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தப்பட்ட மிகவும் முக்கியமான விவகாரத் தில் தமிழர்களுக்கு விட்டுக்கொடுக்கக்கூடிய சாத் தியம் இந்த தேசியவாதக் குழுக்களுக்கு ஏற்புடை யதல்ல. அதனால் தான் அரசியலமைப்புச் சீர்திருத் தம் தொடர்பான முதலாவது யோசனைகள் மீதான தாக்குதல்.

### அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தம்

இந்த எதிர்ப்பு காரணமாக ஐக்கிய தேசியக்கட்சி அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் சம்பந்தப் பட்ட கட்சிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான அதன் மூலமுதல் யோசனையை மாற்றியமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. இதன் விளைவாக, அரசிய லமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்டமூல வரைவை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டது. 19 ஆவது திருத்தச் சட்டமூலம் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் ஏனைய சிங்கள தேசியவாத பிரிவுகளுக்கும் ஒரு வெற்றியாக நோக்கப்படக் கூடியதாகும். ஏனென்றால், ஆட்சி முறையை பாராளுமன்ற முறையிலான அரசாங்க மாக மாற்றுவதற்கான யோசனை கைவிடப்பட்டு விட்டது. உத்தேச 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் பிரதமரின் ஆலோசனையின்படி ஜனாதிபதி செயற் பட வேண்டியதில்லை.

19ஆவது திருத்தச் சட்டமூல வரைவு இரு இலக் குகளை அடைய முயற்சித்தது. ஒன்று, எதேச்சாதிகாரப் போக்கை வளர்த்த அதிகாரங்கள் சிலவற்றை அது குறைப்புச் செய்கின்ற அதேவே ளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அது தக்கவைக்கிறது. உதாரணத்துக்கு, இந்தத் திருத்தச்சட்ட மூலவரைவின் பிரகாரம், ஜனாதிபதி அரச தலைவராகவும் (Head of the state) நிறை வேற்று அதிகாரத்தின் தலைவராகவும் (Head of the Executive) அரசாங்கத் தலைவராகவும் (Head of the government) ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாகவும் இருப்பார். அதேவேளை, சட்டமூல வரைவு ஒருவர் இரு பதவிக்காலங்க ளுக்கே ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என்ற ஏற்பாட்டை மீண்டும் அறிமுகம் செய்கிறது. அத்துடன், தற்போதுள்ளதைப் போன்று ஜனாதி பதியின் ஒரு பதவிக் காலம் 6 வருடங்கள் என்றில் லாமல், அதை 5 வருடங்களாகவும் குறைக்கிறது. இரண்டாவது, சட்டமூலவரைவு, பிரதமரின் அதி காரங்களை உயர்த்துகிறது. அதன் பிரகாரம் உதார ணத்துக்கு, பிரதமர் அமைச்சரவையின் தலைவ ராக இருப்பார். அமைச்சர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பார். அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படு கின்ற அமைச்சுகளை தீர்மானிப்பதற்கும் அவற்றை மாற்றம் செய்வதற்குமான அதிகாரத்தையும் பிரத மர் கொண்டிருப்பார்.

எனவே, உத்தேச 19ஆவது திருத்தம் நிறை வேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டுமென்று கோருகின்றவர்களின் நிகழ்ச்சித் திட்டத்துக்கும் அந்த ஆட்சிமுறையை தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமென்று வலியு றுத்துகிறவர்களின் நிகழ்ச்சித் திட்டத்துக்கும் இடை யில் ஒரு சமநிலையைப் பேணுவதற்கு முயற்சிப் பதால் அதை இருபுற விட்டுக்கொடுப்பின் அடிப் படையிலான ஒரு திட்டமாக காண்பிக்க முடியும். சட்ட மூல வரைவுக்கு எதிராக நெருக்குதல்கள் அதிகரித்துக்கொண்டிருந்த நிலையில், அரசாங்கம் அண்மையில் '19ஆவது அரசியலமைப்புத் திருத் தச் சட்டமூலத்துக்கு உத்தேசிக்கப்படும் திருத்தங் களை' வெளியிட்டது. 'இலங்கை குடியரசுக்கு ஜனாதிபதியொருவர் இருப்பார். அவரே அரச தலைவராகவும் நிறைவேற்று அதிகாரத்தின் தலை வராகவும் ஆயுதப்படைகளினதும் பிரதம தளபதி யாகவும் இருப்பார்' என்று அந்த உத்தேச திருத்தங் கள் கூறுகின்றன.

இந்த மாற்றங்கள் எல்லாம் செய்யப்பட்ட போதி லும் கூட, ஜாதிகஹெல உறுமயவின் எதிர்ப்பு தொடரவே செய்தது. இந்த கட்டத்தில் அரசியல

> ஜனாதிபதி சிறிசேனவிற்கு பதிலாக சுதந்திரக் கட்சி மறைமுகமாக வேலை செய்கிறது என்று சிலர் நம்புகிறார்கள். தற்போதைய கட் டத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி பலவீனப்படுத்தப்பட்டால் அது பெரும் ஆபத்தாக முடியும் என்று சிறிசேன நினைக்கிறார். அவ்வாறு செய்தால் மகிந்த ராஜபக்ஷ தீவிர அரசியலுக்கு திரும்ப வந்து பிரதமராக பாராளுமன்றத்திற்கு வருவதற்கும் கூட வழிவகுப்பதாக அமைந்துவிடக்கூடும்

மைப்புச் சீர்திருத்தங்கள் செய்யப்படுவதை தாங் கள் விரும்பவில்லை என்று அதன் தலைவர்கள் தெரியப்படுத்தினார்கள். ஒருசொற்ப வாக்கு வங்கி யைக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, ஜாதிக ஹெல உறுமயவினால் தற்போதைய முறையின் கீழ் கணிசமானளவு அதிகாரத்தையும் செல்வாக் கையும் பிரயோகிக்கக் கூடியதாக இருக்கிறது என் பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும். தற்போதைய முறையின் கீழ் அந்தக் கட்சி அனுபவிக்கின்ற அதிகாரத்துக்கும் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான அரசியலமைப்பு மாற்றத்தையுமே தொடர்ந்து அது எதிர்த்து வருவதற்கும் இடையில் தொடர்பு இருக்கிறது போலும்.

### தேசிய அரசாங்கம்

இதனிடையே, நிகழ்வுப் போக்குகளில் கவனத்தைத் தூண்டுகின்ற வகையிலான ஒரு திருப்பமாக, பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்பட்டுவந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி புதிய அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொண்டு தேசிய அரசாங்கம் என்று சொல்லப்படுவதன் ஒரு அங்கமாக மாறிவிட்டது. இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக இரு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒரே நேரத்தில் அரசாங்கத்தில் இருக்கின்றன.

சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொண்டதையடுத்து, திருத்தியமைக்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடு அதிகரித்திருக்கவேண்டும். தேவைப்படுகின்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாராளுமன்றத்தில் கிடையாது. சுதந்திரக் கட்சியின் ஆதரவுடன் அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தை அதனால் பெற முடியும், இரு கட்சிகளுமே அரசாங்கத்தில் இருப்பதால் அரசியலமைப்புக்கான திருத்தங்களை நிறைவேற்றுவதென்பது இப்போது கோட்பாட்டு அளவில் சுலபமான காரியமாக இருக்கவேண்டும்.

ஆனால், சுதந்திரக்கட்சி விட்டுக்கொடுத்துச் செயற்படுவதாக இல்லை. தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டு அடுத்த பொதுத் தேர்தல் புதிய முறையின் கீழ் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் இல்லாமல், உத்தேச அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை தாங்கள் ஆதரிக்கப் போவதில்லை என்று சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தேர்தல் முறையில் உடனடியாக மாற்றங்கள் செய்யப்பட்டாலும் கூட, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு போதியளவு கால அவகாசம் தேவை என்ற உண்மையை இவர்கள் உணருவதாக இல்லை.

சுதந்திரக் கட்சித் தலைவர்களின் இக்கோரிக்கை தற்போதைய தேர்தல் முறை அடுத்த பொதுத் தேர்தலில் தங்கள் கட்சி வெற்றிபெறுவதற்கு குந்தகமாக இருக்குமென்று அவர்கள் கருதுகிறார்கள் என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல்முறை ஐக்கிய தேசியக்கட்சிக்கு கூடுதல் அனுகூலத்தைக் கொடுக்கும் என்று தற்போதைய அரசியலமைப்பின் சிற்பியான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன நினைத்தார் என்பது உண்மையே. ஆனால், தற்போதைய தேர்தல் முறையின் கீழ் சுதந்திரக்கட்சி பல தேர்தல்களில் வெற்றி பெற்றது. இன்றும் கூட தற்போதைய தேர்தல் முறையின் கீழ் ஒரு தேர்தல் நடத்தப்பட்டால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடுமையான சவாலை ஏற்படுத்தக் கூடிய நிலையில் சுதந்திரக் கட்சி இருக்கிறது. புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்று சுதந்திரக்கட்சி எதற்காக அடம் பிடிக்கிறதோ தெரியவில்லை. விசித்திரமாக இருக்கிறது.

> சுதந்திரக்கட்சி விட்டுக்கொடுத்துச் செயற்படுவதாக இல்லை. அதன் தலைவர்கள் தற்போதைய தேர்தல் முறை அடுத்த பொதுத்தேர்தலில் தங்கள் கட்சி வெற்றி பெறுவதற்கு குந்தகமாக இருக்கும் என்று கருதுகிறார்கள் போலும். அதனால்தான் தேர்தல் முறைமாற்றத்தில் விடாப்பிடியாக இருக்கிறார்கள்.

எனவே, தேர்தல் முறை மாற்றத்தின் மீதான அக்கறைதான் உத்தேச அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலத்தை சுதந்திரக்கட்சி எதிர்ப்பதற்கான மெய்யான காரணமாக இருக்க முடியாது என்று கருத இடமிருக்கிறது. ஜனாதிபதி சிறிசேனவுக்காக சுதந்திரக்கட்சி மறைமுகமாக வேலைசெய்கிறது என்று சிலர் நம்புகிறார்கள். தற்போதைய கட்டத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி பல வீனப்படுத்தப்பட்டால் அது பெரும் ஆபத்தாக முடியும் என்று ஜனாதிபதி சிறிசேன நினைக்கிறார். அவ்வாறு செய்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீவிர அரசியலுக்குத் திரும்பிவந்து பிரதமராக பாராளுமன்றத்துக்கு வருவதற்கும் கூட வழிவகுப்பதாக அமைந்துவிடக்கூடும். அத்தகையதொரு நிலைமை சிறிசேனவுக்கும் ஜனநாயகக்கட்சித் தலைவர் சரத்பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்ற அவரின் பங்காளிகளுக்கும் தற்கொலைக்கொப்பானதாகி விடும். அதனால் பலம்பொருந்திய பிரதமர் பதவி உருவாக்கப்படுவதை சிறிசேன இயல்பாகவே விரும்பமாட்டார்.

உத்தேசிக்கப்பட்டதைப் போன்று அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதில் அவர் அக்கறையாக இல்லையென்றால், அதற்கு சிறந்த வழி, நடைமுறைச் சாத்தியமற்ற- யதார்த்த பூர்வமற்ற கோரிக்கைகளை சுதந்திரக்கட்சியைக் கொண்டு முன்வைக்கச் செய்து செயன்முறைகளைக் குழப்பியடிப்பதேயாகும். எல்லாவற்றுக்கும் மேலாக, அவர் தான் சுதந்திரக்கட்சியின்

***(28ஆம் பக்கம் பார்க்க...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



பேராசிரியர்
சி.சிவசேகரம்

அடுத்த தேர்தலில் ஐ.தே.க. – சு.க. இணைந்த தேசிய அரசாங்கம் ஒன்று அமையும்பட்சத்தில் ஜே.வி.பி. ஒரு வலிய எதிர்க்கட்சியாக வளர வாய்ப்பிருக்கும். எனினும் அதனிடம் தெளிவான மாற்று அரசியல் திட்டம் ஒன்று இல்லை. அதன் பேரினவாத சந்தர்ப்பவாத அரசியல் உள்ளபடியே உள்ளது.

# கட்சிகளல்லாத கட்சிகளின் அரசியலல்லாத அரசியல்

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையே கடந்த முப்பத்தேழு ஆண்டுகளாக நாட்டின் ஜனநாய கத்துக்கு அதிகங் கேடு விளைவித்த தனியொரு காரணி என்பதை ஏற்பதற்கு நியாயமுண்டு. ஆனால் அதை அகற்றுவதால் அதன் விளைவான அத்தனை கேடுக ளும் நீங்கும் என்று எதிர்பார்ப்பது வெகுளித்தனமா னது. அதை விடவும் அதை அகற்றுவது எளிதல்ல என் பதை 19ஆவது திருத்தச்சட்டத்திருத்தத்தைக்கொண்டு வருவதில் ஏற்பட்ட முரண்பாடுகளும் ஜனாதிபதியின் அதிகாரங்களை ஜனாதிபதியே நினைத்தாலும் கைவிட இயலாது, அதைச் சர்வசனவாக்கெடுப்பு ஒன்றே இயலு மாக்கும் என்ற நிலையில் நாடு உள்ளது. ஜனாதிபதி யின் அதிகாரங்களை பிரதமருக்குரியனவாக்குவது பற் றிய அச்சங்கள் பல தரப்பினர் நடுவிலும் உள்ளன. எனவே 19ஆவது திருத்தச் சட்டத் திருத்தத்தை ஆழச் சிந்திக்காமல் அவசரக் கோலமாகக் கொண்டுவந்ததும் முற்றிலும் ஐக்கியதேசியக் கட்சியின் அதிகாரத்தை நோக்காகக்கொண்டே வரையப்பட்டதும் என்பது பெருமளவும் சாத்தியமானதே. இனித் தேர்தல் முறையை மாற்றும் சட்டதிருத்தமும் அவசர அவசர மாக நிறைவேறும்.

ஜனாதிபதித் தேர்தல் முழுவதும் உண்மையில் ராஜ பக்ஷ குடும்ப ஆட்சி தொடரவேண்டுமா இல்லையா என்பதைப் பற்றியதாகவே இருந்தது. ஆயினும், வாக்க ளிப்பிற் பழைய கட்சி விசுவாசங்கள் முக்கிய பங்களித் துள்ளன. தென்னிலங்கையில் வாக்களிப்பின் கோல த்தை இரண்டு விதமாக நோக்கலாம். ஒன்று ஜனாதிப

தித் தேர்தலில் ராஜபக்ஷவை 2010ஆம் ஆண்டு ஆத ரித்தோரின் சதவிகிதம் பொதுவாக எட்டுக்கும் பத்துக் கும் இடைப்பட்ட அளவால் குறைந்திருந்தது. விலக் காக ராஜபக்ஷவின் சொந்த மாவட்டமான அம்பாந் தோட்டையிலும் சென்ற ஆண்டு நடந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்பாராத அளவிற் பின்னடைவைச் சந்தித்த பதுளை மாவட்டத்திலும், வாக்குகளில் ஏற்பட்ட இழப்பு நான்கு சதவீதமாயும் மைத்திரிபால சிறிசேனவின் சொந்த மாவட்டத்தில் அது இருபத்து மூன்று சதவீதத்திற்கு மேலாகவும் அமைந்தது. இவை விளங்கக் கடினமான வையல்ல. மற்றது தென்னிலங்கை மக்கள் ஏறத்தாழ 2005ஆம் ஆண்டு வாக்களித்த விதமாகவே 2015 ஆம் ஆண்டிலும் வாக்களித்தனர் என்பதாகும். இது தேர்தல் வாக்கு வீதங்களில் ஏற்பட்ட மாற்றத்தை விளங்கக்கூடியளவு வசதியானது. 2010ஆம் ஆண்டுத் தேர்தல் போரை வென்று அமைதியை மீட்ட ஜனாதி பதி என்ற படிமத்தால் வழிநடத்தப்பட்டது. அதன் கார ணமாகக் கடுமையான ஐக்கிய தேசியக்கட்சி ஆதர வாளர்களைத் தவிர மற்றோர் ராஜபக்ஷவை ஆதரித்த னர் எனலாம். எனவே அந்த ஆதரவை ஒரு நிலையான ஆதரவுத் தளமாகக் கருத இயலாது. அதை அத்தகைய ஒரு ஆதரவுத் தளமாக நிலை நிறுத்தும் விதமாக ராஜ பக்ஷ ஆட்சி நடத்தவுமில்லை. சிறுபான்மைத் தேசிய இனங்களை வலிந்து பகைக்கும் முனைப்பு போரின் [illegible]மையடுத்து வலுப்பட்டது. அதன் பின்னாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த சிந்தனை பேரினவாத அரசியலை முன்னெடுப்ப தன் மூலமும் போரின் வெற்றிக்கு முழு உரிமை கொண் டாடுவதன் மூலமும் சிங்கள வாக்காளர்களில் ஏகப் பெரும்பாலானோரைத் தன்வசம் வைத்திருக்கலாம் என்ற தவறான கணிப்பாகும். அதை விட அரச வளங் களை ஏறத்தாழ முழுமையாகத் தனது குடும்பத்தின ரின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததன் மூலம் தன் வாக்குகளை மேலும் வலுப்படுத்தலாம் என்ற எதிர் பார்ப்பாம்.

எவ்வாறாயினும் குடும்ப அரசியல் ஆதிக்கமும் அதையொட்டிய ஊழலும் சட்டவிரோதச் செயல்க ளின் பெருக்கமும் அராஜகமும் கணிசமான விரக் தியை ஏற்படுத்தியிருந்தன. உண்மையில் ராஜபக்ஷ வின் பெரிய வலிமை, ஐ.தே.கட்சியின் பலவீனமே யாகும். 1994 இல் ஐ.தே.க கண்ட சரிவிலிருந்து அது முற்றாக மீள்வது கடினம். ஏனெனில் 1977 முதல் 1994 வரையான அதன் சர்வாதிகார ஆட்சியின் அனு பவங்கள் மக்கள் நடுவே இன்னமும் பேசப்படுகின் றன. ஐ.தே.க.தனித்து ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்பு 1994க்குப் பின்பு அறவே இல்லாமற் போய்விட்டது. அதற்கமைய ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) தனக்கான கணிசமான ஒரு வாக்காளர் தளத்தை உரு வாக்கித் தனது மூலோபாயத் தவறுகளால் அதை 2009க்குப் பின்பு பெருமளவும் இழந்து பிளவுகட்குட் பட்டுத் தடுமாறி இப்போது தன்னை நிலைநிறுத்த முயலுகிறது. ஐ.தே.க 2006இல் ராஜபக்ஷவின் வெற் றியின் பின்னணியில் பலவாறான உட்பிளவுகட்குள் ளானது. அதன் பிளவுகட்கு முக்கியமான ஊக்குவிப்பு கள் ராஜபக்ஷ விடமிருந்தும் ஒரு சக்திமிக்க தனியார் ஊடக- வணிக நிறுவனத்திடமிருந்தும் வந்தன. 2010 ஆம் ஆண்டுத் தேர்தலில் நிச்சயமான தோல்வியைத் தவிர்க்குமுகமாகத் தான் போட்டியிடாமல் தளபதி (இப்போது ஃபீல்ட் மாஷல்) சரத்பொன்சேகாவை ஆதரித்ததன் மூலம் ஐ.தே.க தனது நம்பகத்தை ஓரளவு இழந்தது எனலாம். எனினும் விடுதலைப்புலிகளுடன் சமாதானம் பேசிய கட்சி என்ற படிமம் இன்னமும் கணிசமான சிங்களவர்களிடையே உள்ளது. அதே வேளை ஐ.தே.க பற்றித் தமிழ் மக்களில் பெரும்பாலா னோர் நம்பிக்கையின்றியே உள்ளனர்.

இப்பின்புலத்திலேயே ராஜபக்ஷவை வீழ்த்துவதற் கான வியூகம் வகுக்கப்பட்டது. அதன் தோற்றுவாய், மாதுலுவாவே சோபித தேரர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்ற ஒரே தீர்மானத்தின் அடிப்ப டையில் பொது வேட்பாளராக நிற்க அறிவித்தது என லாம். எனினும் அதை ஊக்குவித்த பல்வேறு இடது சாரி, தாராளவாத, தமிழ்த் தேசியப் பிரசாரகர்களுடைய கண்ணிலும் மிளகாய்ப் பொடி தூவி ஐ.தே.க தனது பிரதி வேட்பாளராக ஆளுந்தரப்பின் முக்கிய அமைச்ச ரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளரு மான மைத்திரிபால சிறிசேனவைப் பொது வேட்பாள ராக முன்னிறுத்தியது. இந்த நாடகத்தை இயக்கியதில்



**உண்மையில் ராஜபக்ஷவின் பெரிய வலிமையாக இருந்தது ஐ.தே.க.வின் பலவீனமேயாகும். 1994இல் கண்ட சரிவிலிருந்து அக்கட்சி முற்றாக மீள்வது கடினம். அது தனித்து ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்பு அறவே இல்லாமல் போய்விட்டது**

சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஒரு முக்கிய பங்கிருந் தாலும் தேர்தலின் முடிவுகள் மீது அவருடைய பாதிப் புப் பெரிதல்ல. அவ்வாறே சரத்பொன்சேகா வின் ஜன நாயகக்கட்சியும் பேரினவாதப் பேரொலி எழுப்பும் ஜாதிகஹெல உறுமயவும் ராஜபக்ஷவின் வீழ்ச்சிக்கு அளித்த பங்கு சொற்பமே. ஏனெனில் கடந்த நான் காண்டுகளில் இரண்டு கட்சிகளினதும் ஆதரவுத் தளம் மிகவும் சுருங்கிவிட்டது. எனினும் தேர்தல் கூட்டணிக ளில் இத்தகைய சக்திகளின் ஆதரவை நிராகரிப்பது மாற்றுத் தரப்புக்கு வலுவூட்டும் என்பதால் அவை புறக்கணிக்கப்படுவதில்லை.

மைத்திரிபால சிறிசேன சிங்களவர்களின் வாக்குக ளில் 45 சதவீதமளவிலும் மகிந்த ராஜபக்ஷ 54 சதவீத மளவிலும் பெற்றிருப்பர் என பொதுப்படக்கணிக்கப்ப டுகிறது. வேறு கணிப்புகள் சிறிசேனவின் பங்கைக் கூட்டி 47 சதவீதம் வரை உயர்த்துகின்றன. ராஜபக்ஷ ஆதரவாளர்கள் தமது ஆதரவை 60சதவீதம் வரை கூட் டிக் காட்ட முயல்வர். எனினும் வடக்கு - கிழக்கின் புள்ளிவிவரம் ராஜபக்ஷவின் பங்கை 55 சதவீதத் திற்கு மேற்கொண்டு செல்ல அனுமதியாது. ராஜபக்ஷ வின் வாக்குகளில் குறிப்பிடத்தக்க பகுதி அதிகாரத் துஷ்பிரயோகத்தாற் கிட்டியது என்பதையும் நாம் மறக் கலாகாது. எவ்வாறாயினும், இலங்கை அரசியலில் தனிமனிதச் செல்வாக்கில் ராஜபக்ஷ மற்ற எவரையும் விஞ்சி நிற்கிறார் என்பது உண்மை. ஆனால் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அரசியல் மீட்புக்கு உதவப் போதாது. இந்தப் பின்புலத்திலேயே மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனமும் 100 நாள்வேலைத் திட்டமும் பற்றிய மதிப்பீடுகளைக் கவனிக்க வேண்டும்.

நூறுநாள் வேலைத்திட்டத்தின் கணிசமான பகுதி அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகளைத் திரட்டும் நோக்கிலானது. அதன் முக்கியமான பகுதிகள் ஊழலுக்கு எதிரான உறுதியான நடவடிக்கை, அரசியல் யாப்புத் திருத்தமும் ஜனாதிபதி முறையின் நீக்கமும், தேர்தல் முறைச் சீர்திருத்தமுமே. கல்வி, மருத்துவத்துறைகளில் அரசாங்க முதலீடும் தேசிய ஔடதக் கட்டுப்பாடும் பற்றிய எதிர்பார்ப்புகளின் விதியை இறுதியிற் தீர்மானிக்கப் போவது சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியுமே என்பதை நாம் நினைவிலிருத்துவது தகும்.

இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இந்தியாவும் அமெரிக்காவும் பிரித்தானிய அரசாங்கமும் பங்களித்துள்ளன என்பது உண்மை. ஆனால் ராஜபக்ஷ அந்த அரசாங்கங்களைக் குற்றங்கூறித் தன்னை சங்கடத்தில் மாட்டாமல் உளவு நிறுவனங்கள் மீது பழியைப் போடுகிறார். எனவே தேர்தல் விஞ்ஞாபனமும் நூறுநாள் வேலைத் திட்டமும் என்ன சொன்னாலும் நாடு போகும் திசையை நெறிப்படுத்துவது முக்கியமாக ஏகாதிபத்திய நலன்களாகவே இருக்கும். ஏகாதிபத்திய நாடுகள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதற்கு ராஜபக்ஷ ஆட்சியுடன் சீனாவின் நட்பு ஒரு காரணமாயினும் இலங்கை அரசாங்கத்தாற் சீனாவுடன் எளிதாக முறித்துக் கொள்ள இயலாது. அதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன. இலங்கை- சீன நட்புறவுக்குச் சிங்கள மக்களிடையே ஒரு வலுவான வெகுசனத் தளம் உள்ளது. சீனா இலங்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயலவில்லை என்பதுடன், இலங்கையின் உள் அலுவல்களிற் தலையிட்டதும் இல்லை. அண்மைக் காலமாகச் சீனாவிடம் இலங்கை பெற்ற கடன்களுக்கு உள்ள பொருளாதார முக்கியத்துவம் கணிசமானது என்பதுடன், சீனாவுடனான வணிக உறவுகள் இந்தியாவினுடனான உறவுகளைவிட இலங்கைக்குச் சாதகமானவை. எனவே சீனாவை ஓரங் கட்டுவது என்பது ஒரு வலுவான அமெரிக்க சார்பு ஆட்சியின் கீழான நீண்டகாலத்திட்டத்தின் கீழேயே இயலும். எனினும் நாட்டின் பொருளாதாரம் எவ்வாறெனினும் ஏகாதிபத்திய நலன்களால் முன்னிலுஞ் சிறிது தீவிரமாக முன்னெடுக்கப்படும்.

இந்த அரசாங்கம் உருப்படியாகச் சாதிக்கப்போவது 18 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மகிந்த ராஜபக்ஷ தனது தனிப்பட்ட அதிகாரத்தை வலுப்படுத்தவும் தான் விரும்பியளவும் நாட்டை ஆளச் சட்டத்தில் வகை செய்யவும் உண்டாக்கிய வசதிகளை மறுதலிப்பது மட்டுமே. சர்வ வல்லமையில்லாவிட்டாலும் பாராளுமன்றத்தை விட வல்லதான ஒரு ஜனாதிபதி இருப்பதையிட்டு இரண்டு பிரதான கட்சிகளுக்கும் பெரிய கவலை



இலங்கை அரசியலில் தனி மனித செல்வாக்கில் ராஜபக்ஷ மற்ற எவரையும் விஞ்சி நிற்கிறார் என்பது உண்மையே. ஆனால் அது அவரது அரசியல் மீட்புக்கு உதவப்போதாது. மைத்திரிபால - ரணில் அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் பற்றிய மதிப்பீடுகளையும் கவனத்தில் எடுக்கவேண்டியிருக்கிறது.

இருந்ததில்லை. ராஜபக்ஷவின் அதிகாரத் துஷ்பிரயோகத்தால் அது ஒரு முக்கிய பிரச்சினையாகியதே ஒழிய ஜனாதிபதி முறையை இல்லாமலாக்குவது இது வரை ஒரு வெறும் ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதி மட்டுமே.

18ஆவது திருத்தச் சட்டத்தை மறுதலிக்கும் 19 ஆவது திருத்தத்தின் நிறைவேற்றத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப் பேருடைய ஆதரவாவது தேவை. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து அரசாங்கத்தின் பக்கம் மேலும் பலரை இழுக்க வேண்டியாயிற்று. அதைவிட, ராஜபக்ஷவை மீண்டும் கொண்டுவந்து நாட்டை அதன் ஓராண்டு முன்னைய 'மேன்மைக்கு' மீட்க ஒரு பச்சைச் சந்தர்ப்பவாத கூட்டணி முற்பட்டது. ஸ்ரீ.ல.சு.கட்சியில் ஒட்டியிராமல் தங்களுடைய கட்டுப்பணத்தையே மீட்பதற்கு இயலாத அரசியல்வாதிகளான வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ச ஆகியோரும் ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து பிரிந்து இறுதிநேரத்தில் ராஜபக்ஷவுடன் சேர்ந்த இன்னொரு அரசியல் அநாதையான உதய கம்பன்பிலவும் ஸ்ரீ.ல.சு.க. ராஜபக்ஷ விசுவாசிகள் சிலருடன் சேர்ந்து ராஜபக்ஷ மீட்பு முயற்சியை நுகேகொடையில் தொடங்கினர். அக்கூட்டத்தினதும் அடுத்தடுத்த கூட்டங்களதும் வெற்றி, மைத்திரிபால சிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனவுக்கு ஒரு எச்சரிக்கை மணியாயிற்று. அதைவிட, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா போன்ற பல ஸ்ரீ.ல.சு.க. பிரமுகர்கள் உடனடியான ராஜபக்ஷவின் மீளலை விரும்பவில்லை. எவ்வாறும் பல்வேறு அதிகாரப் போட்டிகளாற் பிரிந்து பிளவுண்டு கிடக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சியை உடைக்கும் தைரியம் எவருக்கும் இப்போதைக்கு இல்லை. ஏனெனில், பெரும்பான்மையினருடன் வெளியேறினாலும் கட்சியின் பெயரையோ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரையோ தமதாக்கக் கூடிய வாய்ப்பை கட்சியின் யாப்பு அவர்கட்கு மறுக்கிறது. இருப்பினும், தேர்தல் நாள் நெருங்கும் போது, கட்சி நியமனம் மறுக்கப்படுவோர், ஒரு மாற்று அணியாக இணையலாம். அது ஸ்ரீ.ல.சு.கட்சியை மேலும் சிதறடிக்கும். தேர்தலின் பின்னர் ஸ்ரீ.ல.சு.கட்சியின் முன்னாலுள்ள தெரிவு, ஐ.தே. கட்சியின் நிரந்தரக் கூட்டாளியாவதற்கும் பலவீனமான ஒரு எதிர்க்கட்சியாகிப் பிளவுபடுவதற்கும் இடையிலானது. ஏனெனில் ஸ்ரீ.ல.சு. கட்சியை ஒன்றுபடுத்தி தலைமை தாங்கி அதை ஐ.தே.க.வுக்கு மாற்றான ஒரு வலிய கட்சியாகக் கட்டியெழுப்பக்கூடிய தலைமைத்துவத் தகைமை யாரிடமும் இப்போதைக்கு இல்லை.

ஐ.தே.க இப்போது காட்டும் தோற்றப்பாடான ஒற்றுமைக்குப் பின்னால் அதிகாரத்துக்கான போட்டி வலுவாக உள்ளது. ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் ஒரு போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கையோ தற்போதைக்கு மிகவும் அசாத்தியமாகத் தோன்றும் கூட்டணியோ ஏற்படும்பட்சத்தில் ஐ.தே.கட்சிக்குள் உடைவுகள் நிகழலாம். இப்போதைய தேர்தல் முறையின் கீழ் ஐ.தே.க - ஸ்ரீ.ல.சு.க. கூட்டணியொன்று இரண்டு கட்சிகட்குள்ளும் அதிருப்தியாளர்களை உருவாக்காமல் தேர்தலை எதிர்கொள்ள இடமுண்டு. ஆனால், விருப்பு வாக்குகட்கான போட்டி சிக்கலான கட்சி மற்றும் தனிமனித முரண்பாடுகளை உருவாக்கும்.

உண்மையில் இந்த இரண்டு கட்சிகட்கிடையிலும் 1994 க்குப் பின்பு ஒருவிதமான குறிப்பிடத்தக்க கொள்கை வேறுபாடும் இல்லை. வசதிபடைத்த சமூகப் பிரிவினரின் நலன்களைப் பேணும் நோக்கையும் ஏகாதிபத்தியத்துடன் இணங்கிப் போகும் பொருளாதாரக் கொள்கையையுங் கொண்ட இரு கட்சிகளினிடையிலும் நடந்துள்ள கட்சித் தாவல்கள் இருகட்சிகளும் சுயலாபக் குழுக்களின் கூடாரங்களேயன்றி வேறல்ல என்பதை வலியுறுத்துகின்றன. எனவே இன்று கட்சிகளிடையிலான மோதல்களாகக் காட்சிப்படுவன தனிமனிதப் போட்டிகளே.

ஐ.தே.க. ஊழல் ஒழிப்பை முதன்மைப்படுத்தித் தேர்தல் பிரசாரம் செய்தது. ஆயினும் அக்கட்சி முக்கியஸ்தர்களிற் பலருடைய யோக்கியம் கேள்விக்குரியதாகும். சரியாகச் சொல்வதானால் ஸ்ரீ.ல.சு.க. ஊழல் செய்தோரின் அணியாகவும் ஐ.தே.க. ஊழல் செய்யக் காத்திருப்போரின் அணியாகவும் உள்ளன. தேர்தலின் போதும் அது முடிந்த சில நாட்களின் பின்பும் ஊழல் ஒழிப்பு பற்றிப் பேசிய வீர வசனங்கள் எல்லாம் சிறிது அடங்கிவிட்டன. ஒரு சிலருடைய ஊழல்கள் பற்றித் தொடர்ந்து பேசப்படுவதுடன், அவர்கள் விசாரணைகட்கு உட்படவுங்கூடும். ஈற்றில் எத்தனைபேர் தண்டிக்கப்படுவர் என்பது எவரதும் ஊகத்திற்குரியது. களவாடிய பணம் போனது போனது தான்.





ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவுத்தளம் இப்போதைய தேர்தல் முறையின் கீழ் அது ஓரிரு ஆசனங்களைப் பெற வாய்ப்பளித்திருக்கும். ஆனால் தனித்தொகுதி அடிப்படையில் அதன் வெற்றி வாய்ப்பு அற்பமானது. அதன் தேவை ஜே.வி.பி.யையும் முஸ்லிம் கட்சிகளையும் மலையகத் தமிழ்க் கட்சிகளையும் பலவீனப் படுத்துவதேயாகும்

ஸ்ரீ.ல.சு.க., ஹெல உறுமய ஆகியன தேர்தல் முறையில் மாற்றத்தை மிகவும் வேண்டின. ஈற்றில் அவை அதைப் பெறவுள்ளன. ஸ்ரீ.ல.சு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தல் வாக்குகளின் அடிப்படையில் பழைய பாராளுமன்றத் தொகுதி முறையில் தமது வெற்றி வாய்ப்புகள் அதிகமென நினைக்கின்றனர். எனினும் கீழ் உட்பிளவுகளாற் தவிக்கும் ஸ்ரீ.ல.சு.க.வேட்பாளர்கள் அவர்கள் எதிர்பார்க்கும் வெற்றியைப் பெறுவது மிகவும் ஐயமானது. எனவே சிலவாறான போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைகளும் தேசிய அரசாங்கமும் என்ற ஏற்பாடு ஸ்ரீ.ல.சு.கட்சியின் இறுதிப் புகலிடமாகலாம்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவுத்தளம் இப்போதைய தேர்தல் முறையின்கீழ் அது ஓரிரு ஆசனங்களைப் பெற வாய்ப்பளித்திருக்கும். ஆனால் தனித்தொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதி அடிப்படையில் அதன் வெற்றி வாய்ப்பு அற்பமானது. எனினும், அதன் தேவை, ஜே.வி.பி.யை யும், முஸ்லிம் கட்சிகளையும், மலையகத் தமிழ்க்கட்சி களையும் பலவீனப்படுத்துவதாகும். வடக்கு -கிழக்கில் தமிழ்த்தேசியக்கட்சிகளைப் பலவீனப்படுத்துவது அதற்கு இயலாதது.

பெரும்பாலான ஆசனங்கள் நேரடியான தெரிவிலும் அதனிலும் சிறிய தொகையான ஆசனங்களில் ஒரு பகுதி மாவட்ட அடிப்படையில் வாக்குகளின் விகித அடிப்படையிலும் இன்னொரு பகுதி தேசிய அடிப்ப டையில் வாக்குகளின் விகித அடிப்படையிலும் நிரப் பப்படும். முஸ்லிம் கட்சிகள் 1977 வரையான காலத் தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்தது போல தமிழ்த் தேசியவாதிகளுடன் பேரம் பேசித் தமது பாரா ளுமன்ற ஆசனங்களின் தொகையைக் கிழக்கிற் பேண லாம். மற்றப்படி பெரிய கட்சிகளுடன் இணைவதையே முஸ்லிம் அரசியல்வாதிகள் விரும்புவர். மலையகத் தில் ஓரிரு ஆசனங்கட்கு மேல் வெல்வது ஒட்டுமொத்த மான மலையகக் கட்சிகட்கும் ஒரு சவாலாகும். இ. தொ.கா. பூரண ஆதிக்கம் செலுத்திய போது 1977 இல் ஒரே ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்தது. ஆனால் அப் போது வாக்குரிமை பெற்றோரின் தொகை குறைவா னது. இப்போது வாக்காளர் தொகை கூடியிருந்தாலும் ஒரு மலையகத்தமிழ்க் கட்சியும் நுவரெலியா, மஸ் கெலியா பிரதேசத்திற்கு வெளியே ஒரு ஆசனத்தை யும் தனித்து நின்று வெல்ல இயலாது. எனவே மலை யக அரசியற் கட்சிகள் பெரிய கட்சிகளின் உதவியுடன் தேசியப் பட்டியலில் ஓரிரு ஆசனங்கட்காகப் பேரம் பேசலாமே ஒழிய, மொத்தத்தில் மலையகத் தமிழரின் பிரதிநிதித்துவம் மிகவும் பாதிக்கப்படும்.

ஜே.வி.பி. தற்போதைய நிலையில் தேசியப் பட்டிய லில் ஓரிரு ஆசனங்களை மட்டுமே வெல்ல வாய்ப் புண்டு. அதனாலேயே அது நூறு நாள் வேலைத்திட் டத்தில் உடன்பட்டவாறு பாராளுமன்றத்தைக் கலை த்துக் குறுகிய காலத்தில் தேர்தலை நடத்துவதை வற் புறுத்துகிறது. அப்போது புதிய தேர்தல் முறையை நடைமுறைப்படுத்துவது நடைமுறையில் இயலாத தாகிவிடும்.

எவ்வாறாயினும் ஐ.தே.க. - ஸ்ரீ.ல.சு.க. தேசிய அர சாங்கம் ஒன்று அமையும் பட்சத்தில், அது ஜே.வி.பி. ஒரு வலிய எதிர்க்கட்சியாக வளர வாய்ப்பளிக்கும். எனினும் ஜே.வி.பி. ஊழல் எதிர்ப்புப் போன்ற விடயங் களிலும் இலவசக் கல்வியும் மருத்துவமும் போன்ற விடயங்களிலும் சில நெருக்குவாரங்களை வழங்குவ தற்கப்பால் ஒரு தெளிவான மாற்று அரசியல் வேலைத் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன், அதன் பேரினவாதச் சந்தர்ப்பவாத அரசியல் உள்ளபடியே உள்ளது. ஜே.வி.பி.தவறவிடும் இடைவெளியை அதி லிருந்து பிரிந்த முன்னிலை சோசலிசக் கட்சி நிரப்புவ தாயின் அதன் அரசியல் நிலைப்பாடும் வெகுசன வேலைகளும் மேலும் உறுதிபெற வேண்டும். தேர்தல்



தமிழ் மக்களுக்கு முன்னே நம்பிக்கைதரக்கூடிய எந்த அரசியல் கட்சியும் இல்லை. இருக்கிற தமிழ்த் தேசியக்கட்சி களிடம் அரசியல் வறுமை மட்டுமே உள்ளது. பொதுத்தேர்தலின் பின்னர் வரக்கூடிய எந்த ஆட்சியும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றை நோக்கி நகர இயலாமல் தடுக்கும் சக்திகளின் கைகள் அரசாங்கத்தின் உள்ளும் வெளியிலும் வலுவுடன் இயங்கும்

அரசியலில் அதன் கவனம் மிகுதியாகக் குவியுமாயின் அது ஜே.வி.பி. போன பாதையிலேயே சீரழிய நேர லாம்.

இலங்கை அரசியல், 1994 வரை இருந்து வந்த ஓரளவு தெளிவான பிரதான அரசியற் போக்குகளதும் அவற்றைக் குறித்த கட்சி அடையாளங்களையும் வெகுதுரிதமாக இழந்துவிட்டது. கட்சி அடையாளம் என்பது, ஒரு விளையாட்டுக் கழகத்தின் எந்தவொரு விளையாட்டு வீரரையும் வாங்கி விற்பதைப் போல பாராளுமன்ற உறுப்பினர்களையும் வாங்கிவிற்க முடி வதால், கட்சிப் பெயரானது, ஒருவணிக அடையாள மாகிவிட்டது. கட்சிகளிடையிலான போட்டிகள் தனிம னிதர்களது நலன்களும் உயர்வும் சார்ந்த விடயங்களாகி விட்டன. தேர்தலையண்டியோ தேர்தலின் பின்போ ஏற்படக்கூடிய பிளவுகள் அடிப்படையிலான கொள்கை வேறுபாடுகள் சார்ந்த பிளவுகளாக அமைய மாட்டா. இவ்வாறு, கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்த மாற்றங்களுடன், இலங்கை, அரசியலில்லாத ஒரு அர சியல் யுகத்தினுள் உறுதியாக அடி வைத்துள்ளது.

இந்தப் பின்னணியில், தமிழ்த்தேசிய அரசியல் தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிலங்கை அரசியலின்று மட்டுமன்றி முஸ்லிம், மலையகத் தமிழ் தேசிய இனங்களின் அரசியலின்றும் விலகி நிற்கிறது என்பது கவனிக்க உகந்தது. இந்த விலகல் ஒரு புறம் பேரினவாத அரசியலாலும் இன்னொரு புறம் இன அடையாள அரசியல் மூலம் தமிழ்த்தேசிய வாதக் கட்சிகளும் கூட்டணிகளும் தம்மை வளப்படுத்த எடுத்த முயற்சியின் விளைவாகும்.

தமிழ் மக்களை இலங்கையின் பிற மூன்று தேசிய இனங்களினின்றும் தனிமைப்படுத்தி அதன் மூலம் தனது ஆதிக்கத்தை வடக்கில் நிலைநிறுத்திய தமிழ்க் காங்கிரஸ் பிரஜாவுரிமை சட்டத்தில் அடிபிசகி சிங்களம் மட்டும் சட்டத்தால் இடறிவிழுந்தபின்பு (1983க்கும் 1999க்கும் இடையே திக்குத் தடுமாறிய காலம் போக) தமிழரசுக் கட்சியின் ஆதிக்கமே நிலவுகிறது. 1976 வரை இருந்த தமிழரசுக் கட்சி என்ற நிறுவனம் இப்போது ஒரு சிலரின் ஆதிக்க அரசியற் கருவியாகவே உள்ளது. 1976 இல் உருவான கூட்டணியும் 2002 இல் உருவான கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சிப் பிரமுகர் அரசியலை முன்னெடுப்பதற்கான வசதிகளாகவே இருந்துள்ளன. தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸுக்குமிடையே இருந்து வந்த ஒரு வகையான ஜன்மப்பகை இன்னமும் இரண்டு போட்டிக் கூட்டணிகளின் வடிவில் நீடிக்கிறது. அதில் அரசியல் வேறுபாடுகளென அதிகம் இல்லை. தேர்தல் வாய்ப்புக் கருதியும் 1990 களில் ஒரு புதிய அரசியற் பரிமாணமாய் உருவெடுத்த புலம்பெயர் மேட்டுக்குடிகளின் அரசியல் குறுக்கீட்டைக் கருத்திற்கொண்டும் இங்கே கட்சி கட்டி ஆடினாலும், அனைத்தின் பின்னாலும் பதவிக்கான போட்டியே உந்து சக்தியாயுள்ளது. ராஜபக்ஷவின் வீழ்ச்சி ஒரு வகையான சந்தர்ப்பவாதக் கட்சிகளை ஓரங்கட்டி விட்டாலும், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றி அக்கறையற்ற குழுக்களே வடபுலத்து அரசியலில் மேடையேறுகின்றன.

தமிழ் மக்களுக்கு முன்னே நம்பிக்கை தரக்கூடிய எந்த அரசியற் கட்சியும் இல்லை. இருக்கிற தமிழ்த் தேசியக்கட்சிகளிடம் அரசியல் வறுமை மட்டுமே உள்ளது. புதிய அரசாங்கம் நிச்சயமாகக் கண்துடைப்பாகச் சில காரியங்களைச் செய்யும். ஆனால், தேர்தலின் பின்பு வரும் எந்த ஆட்சியும் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை நோக்கி நகர இயலாமல் தடுக்கும் சக்திகளின் கைகள் 1965-1970 வரை போன்று அரசாங்கத்தின் உள்ளும் வெளியிலும் வலுவுடன் இயங்கும்.

அடுத்து வரவுள்ள தேர்தலையும், சர்வதேச சமூகத்தைக் காட்டித் தமிழ் மக்களை மேலும் ஏய்ப்பது கடினமென்பதையும் கருத்திற் கொண்டு எடுக்கும் தீவிர நிலைப்பாடுகளாயினும் பேரினவாத ஐ.தே.கட்சியுடன் ஒத்துழைப்பு அணுகுமுறையாயினும் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்கப் பயனற்றவை.

புதிய பாராளுமன்றம் பலவீனமான ஒரு ஐ.தே.க..-ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியைக் கொண்டுவந்தாலும்

**ராஜபக்ஷ மீட்புப் பணிகள் தீவிரம் அடைவதும் அவரின் பங்குபற்றலுடனோ அல்லது அவர் இல்லாமலோ ஐக்கிய சுதந்திர முன்னணிக்குள்ளிருந்து ஒரு போட்டிக்குழு உருவாகும் வாய்ப்பு வலுத்து வருகிறது.**

பலமான ஒரு ஆட்சியைக் கொண்டு வந்தாலும் நாட்டின் பிரச்சினைகள் தீர வழியில்லை. மேற்குலகு எதிர்பார்த்திருந்த ஒரு உறுதியான வலதுசாரி ஆட்சி பாராளுமன்றத்தின் மூலம் அமைவது கடினம். அதனால், மேற்குலகு தனது பொருளாதார அரசியல் நெருக்குவாரங்களை எவ்வாறு கையாளும் என்பது நிச்சயமற்றது. எவ்வாறாயினும் தன்னுடன் ஒத்துழைக்கக் கூடிய ஒரு ஆட்சியைப் பகைக்கும் விதமான காரியங்கள் நடவா என்பது மட்டும் உறுதி. எனவே சர்வதேச விசாரணை என்பது ஒருநெட்டைக் கனவாக முடியும் வாய்ப்பு அதிகம்.

இதற்கிடையில் ராஜபக்ஷ மீட்புப் பணிகள் தீவிரமடைவதும், ராஜபக்ஷவின் பங்குபற்றலுடனோ அது இல்லாமலோ ஐ.ம.சு.முன்னணிக்குள்ளிலிருந்து ஒரு போட்டிக் குழு உருவாகும் வாய்ப்பு வலுத்து வருகிறது. அதேவேளை பாராளுமன்ற இடதுசாரிகள் இன்னொரு தேர்தல் கூட்டணியை நோக்கி நகருகிறார்கள். அது எந்தவிதமான வேலைத்திட்டமுமற்ற ஒரு வசதிக்கான ஏற்பாடாக மட்டுமே அமையும்.

எனவே, பாராளுமன்ற அரசியல் என்பது மேற்கொண்டு கலங்கலான அரசியல் வேறுபாடுகளையுடைய நெகிழ்வான கூட்டணிகளின் அரசியலாகவே அமையும் என எதிர்பார்க்கிறேன். தேர்தல் அரசியலின் தேவைகள் என்றும் போல், தேசிய நலன் பற்றியனவாய் இரா. இதன் விளைவாக பொருளாதார நெருக்கடி வலுப்படும். மக்கள் மீது சுமைகள் ஏறும். மக்களின் கவனத்தை திசைதிருப்பும் கருவியாக மீண்டும் பேரினவாதம் பயன்படும் அபாயம் நிசமானது. 1977 - 1994 காலத்திற் போன்று சிறுபான்மைத் தேசிய இனங்களும் உழைக்கும் மக்களும் ஒரு இடர்மிக்க காலத்தை எதிர்நோக்குவர்.

வரலாற்றிலிருந்து கற்பது, நமக்கு எப்போதுமே கடினமாயிருந்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்.சத்தியமூர்த்தி

# இலங்கையரை முட்டாள்களாக்கும் ஏப்ரில் 23



உள்நாட்டு அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் தோறும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி, பிரபல ஆங்கில கவிஞர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. அதுவே அவர் இறந்த தினமும் கூட. அந்த வகையில், 'கவிஞரின் நீதி' அல்லது 'கவித்துவ நீதி' (poetic justice) என்ற வகையில், ஏப்ரல் 23 ஆம் திகதி, இலங்கை மக்களுக்கு 'ஏப்ரல் முட்டாள்' தினமாக மாறினால், அதில் புதுமை எதுவும் இல்லை. இதற்கு மாறாக, கள நிலை அரசியலை மக்கள் முழுவதுமாகப் புரிந்து கொண்டு, உள்வாங்கிக் கொண்டால் மட்டுமே, மக்கள் தங்களைத் தாங்களே முட்டாளாக்கிக் கொள்வதில் இருந்து தப்ப முடியும்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி வாக்களிப்பில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் 'நூறு நாள்' தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில், ஏப்ரல் 23ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தலுக்கான முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போதைய பாராளுமன்றத்தின் ஆயுள் இன்னமும் ஒரு வருடம் இருக்கும் போதே, இத்தகைய அதிரடி தேர்தல் தேவையா என்ற கேள்வியும் எழுகிறது. அதுவும், முந்தைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதிரடி, அடிக்கடி தேர்தல் திட்டங்களை குறைகூறிவிட்டு, அதே முறையை புதிய அரசு தலைமையும் பின்பற்ற வேண்டும் என்று நினைப்பது, அவர்களை இரட்டை நாக்கு உள்ளவர்கள் என்று முத்திரை குத்துகிறது.

ஜனாதிபதி சிறிசேனா ஆகட்டும், அவரால் பிரதமராக அடையாளம் காணப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகட்டும், அரசியல் அனுபவம் மிக்க இருவருமே தாங்கள் வாக்களித்தபடி நூறு நாட்களில் அனைத்தையுமே சாதித்து விட முடியும் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. மாறாக, தங்களது 'பொருந்தா கூட்டணி' வெற்றி பெற்று, தாங்கள் இருவரும் அரசு கட்டிலில் அமரும் வாய்ப்பு தோன்றுமேயானால், அத்தனை நாட்களுக்கு மேலாக 'தேசிய அரசு' என்ற தங்களது அரசியல் சித்து விளையாட்டைத் தொடர முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனவிற்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளர்கள், முக்கியமாக இரண்டு அணியில் இருந்தனர் எனலாம். ஒன்று தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்கள வாக்குவங்கி. இரண்டாவதாக, ஜனாதிபதி ராஜபக்ஷ, பதவியில் தொடரக்கூடாது என்று முடிவு செய்து அதற்காக பல்வேறு வகைகளில் தியாகம் செய்யத் தயாரானவர்கள். இரண்டாவது தொகுப்பில், முக்கியமாக தமிழ் பேசும் மூன்று இனத்தவர்களும் இடம் பெற்றிருந்தனர் எனலாம். அவர்கள் தவிர, நாடு தழுவி, சிங்கள நடுத்தர வர்க்கத்தினரும் ஜனாதிபதி ராஜபக்ஷ தோல்வியைத் தழுவவேண்டும் என்றே வாக்களித்தனர்.

ஆனால், இவர்களில் எவருமே, சிறிசேன தேர்தலில் வெற்றிபெற்றால், 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி' அமைப்பை உடனடியாக மாற்றி விடுவாரென்றோ, அல்லது புதிய தேர்தல் திட்டத்தை அதிரடியாக முன்வைப்பார் என்றோ கருதி அவருக்கு வாக்களிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், சிறிசேனாவாகட்டும், அல்லது அவரது இடத்தில் வேறு யார் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர், இந்த இரண்டு அரசியல் மற்றும் அரசியல் சட்ட திருத்தங்களுக்கு வெறும் வாய்மொழி ஆதரவு மட்டுமே தெரிவிப்பார் என்ற கருத்தையே அனைத்து இன மக்களில் பெரும்பாலரும் கொண்டிருந்தனர் என கருத இடமிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, இலங்கை தமிழ் இனத்தவரைத் தவிர பிற இன மக்களில் பெரும்பாலரும், இவற்றை முக்கிய தேர்தல் பிரச்சினையாகக் கருதினார்கள் என்று கூறமுடியாது. அந்த வகையில், தற்போதைய பத்தொன்பதாம் சட்ட திருத்தம் மற்றும் தேர்தல் சீர்திருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சியாளர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வது அவர்களின் இயலாமையின் வெளிப்பாடே அன்றி வேறெதுவும் இல்லை.

## சாத்தியமற்ற 'தேசிய அரசு'

தற்போதைய அரசியல் குழப்பங்களுக்கு முக்கியமாக இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ தோற்கடிக்கப்படுவார் என்று அவரை எதிர்த்து தேர்தல் அரசியல் செய்த எவருமே கருதவில்லை. அதன் காரணமாகவே, அவரை அடுத்து சிறிசேன பதவியேற்கும் வேளையில் தோன்றவிருக்கும் அரசியல் நிலைமை மற்றும் மாறுதல்களை அவர்களில் யாருமே முக்கியமாகக் கருதி, முன்னதாகவே சிந்தித்துச் செயல்பட முயலவில்லை.

இரண்டு, தங்களின் 'தலையெழுத்தில்' ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் அவருக்கு முன்பு பதவியில் இருந்த சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் தலைமையிலான சுதந்திரக் கட்சியைத் தோற்கடிக்கும் 'யோகம்' இல்லை என்பதை ஐக்கிய தேசியக்

> தங்களது பொருந்தாக்கூட்டணி வெற்றிபெற்று தாங்கள் இருவரும் அரசு கட்டிலில் அமரும் வாய்ப்பு தோன்றுமேயானால் 100 நாட்களுக்கு மேலாக தேசிய அரசு என்ற அரசியல் சித்து விளையாட்டை தொடர முடியாது என்பதை ரணிலும் சிறிசேனவும் உணர்ந்தே இருந்தனர் போலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியினர் உறுதியாக நம்பினார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதன் காரணமாகவே, ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்க, உள்ளடி வேலை செய்து, 2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவையும், தற்போது சிறிசேனாவையும் முன்னிறுத்தி அவர்கள் 'சிகண்டி' வேலை பார்த்தனர்.

அவர்களது கணக்குப்படி, அவ்வாறு வெற்றிபெறும் வேட்பாளர் என்றென்றும் தங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருப்பார் என்றும் கருதினர். அதைவிட முக்கியமாக, தங்கள் ஆதரவு வேட்பாளருக்கு, பிரிந்து பட்ட சிறுபான்மையினரின் பெருவாரி வாக்குகளைத் தவிர, ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குவங்கியும், தொண்டர்படையும், பொதுஜன செல்வாக்கும் மற்றும் சர்வதேச அங்கீகாரமும் மட்டுமே அரசியல் மற்றும் தேர்தல் முதலீடாக இருக்கும் என்றும் கருதிச் செயல்பட்டனர். எனவே, தேர்தலில் வெற்றிபெற்று அவர் ஜனாதிபதியாக பதவியேற்றால் தங்களது கைப்பாவையாக செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்ற கருத்தில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.

பொதுவாகவே, தேர்தல்கால கணக்கில், ஐக்கிய தேசியக்கட்சியினர் முன்னணியில் நிற்பவர்கள். அந்த வகையில் எவ்வாறெல்லாம் அரசியல் கட்சிகளுடனும், தனிப்பட்ட தலைவர்களுடனும், வாக்கு வங்கிகளுடனும் 'கூட்டணி' அமைத்தால், ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியும் என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தனர். ஆனால், அவ்வாறு அவர் தோற்கடிக்கப்படும் பட்சத்தில், சிறிசேனவிற்கு கிடைக்கும் வாக்குகளைத் தவிர மீதமுள்ள வாக்குகள் என்னவாகும் என்றோ, ராஜபக்ஷவிற்கு எவ்வளவு வாக்குகள் கிடைக்கும் என்றோ அவர்கள் தெளிவாக சிந்திக்கவில்லை. இது, அரசியல் சகஜம் கூட.

தற்போதைய பிரச்சினையே அது தான். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றாலும், ராஜபக்ஷ பெற்ற 48 சதவீத வாக்குகளும் அவருக்கு சொந்தமானவை எனலாம். போதாததற்கு, சிறிசேனா பெற்ற 52 சதவீத வாக்குகளில் 'வெற்றி வாக்குகள்' தமிழ் பேசும் இனத்தவர்களின் பங்களிப்பே. அதிலும் குறிப்பாக 'இலங்கைத் தமிழ்' இனத்தவர்கள் பெருவாரியாக வாக்களித்து, அவரை வெற்றி பெறச் செய்தனர் என்பதே அப்பட்டமான உண்மை.

அதனால் தான், இலங்கைத் தமிழர்


# தமிழ்நாட்டை 'எதிர்க்கும்'

தாய்த்தமிழகம் என்று அடிமனதை தொட்டுப்பேசி, இலங்கை இனப்பிரச்சினையில் அரசியல் செய்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தற்போது இரு நாட்டு மீனவர் பிரச்சினையில், தமிழ் நாட்டிற்கு எதிரான நிலையை எடுப்பதற்கும் அந்த அரசியல் தான் காரணம். அந்த வகையில், எதிர்வரும் காலங்களில், 'இனப்பிரச்சினை' குறித்த சர்வதேச அரசியலில், இந்திய அரசிற்கு அழுத்தம் கொடுப்பதற்கு தமிழ்நாடு, கடந்த காலங்களைப் போல் ஒத்துழைப்புக் கொடுக்குமா என்பதும் தற்போது கேள்விக் குறியாகியுள்ளது.

மீனவர் பிரச்சினை குறித்த கூட்டமைப்பின் நிலைமை கடந்த காலங்களில் எதுவாக இருந்திருக்க முடியும் என்று முடிவு செய்து கொள்ள அதிக காலமும் நேரமும் அவசியம் இல்லை. தங்களது, இலங்கைத் தமிழ் மீனவ சமுதாயத்தின் வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தை ஒட்டியே அவர்களது முடிவுகள் இருந்திருக்க முடியும். ஆனால், கடந்த பல தசாப்தங்களில், இலங்கைத் தமிழின மிதவாத அரசியல் மற்றும் சமூகத் தலைமைகள் இது குறித்து எதுவுமே பேசியது இல்லை.

மாறாக, விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் கடந்த காலங்களில் மத்திய அரசில் தொடர்ந்து அமைச்சர் பதவியில் இருந்து வந்த டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் மட்டுமே இலங்கைத் தமிழ் மீனவர்களின் பிரச்சினை குறித்து குரல் எழுப்பி வந்தனர். இதில், டக்ளஸ் தான் பதவியில் இருந்த காலகட்டம் முழுவதும் இந்தப் பிரச்சினையை முன்வைத்து இந்திய மீனவர்களை எதிர்த்து போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்து வந்தார். இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதன் மூலம், இருநாட்டு நல்லுறவிற்கு தான் பங்களிப்பதாகவும் கருதிச் செயல்பட்டார் எனலாம்.

மாறாக, விடுதலைப் புலிகள் இயக்கம், மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதை குறித்து கவலைப்படவில்லை. மாறாக, 2002-06



ஆண்டு 'போர் நிறுத்த ஒப்பந்தம்' காலகட்டத்தில் தங்களது 'ஆட்சி' மற்றும் 'ஆளுமை' குறித்த ஒரு விடயமாகவே அதனைப் பார்த்து வந்தனர். அதாவது, தமிழ் நாட்டு மீனவர்களை, இலங்கை அரசைப் போலவே 'சிறையெடுத்தால்', ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர், இந்திய அரசு தங்களுடன் 'அதிகாரபூர்வ பேச்சுவார்த்தை' நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றே அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தமிழ் முஸ்லிம் வாக்காளர்கள் அதிகமாக உள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட உடனேயே, ராஜபக்ஷ தனது தேர்தல் தோல்வியை அதிரடியாக ஒப்புக் கொண்டு அலரி மாளிகையில் இருந்து வெளியேறினார். முழு தேர்தல் முடிவு என்னவோ சுமார் எட்டு மணித்தியாலங்களுக்குப் பின்னரே அறிவிக்கப்பட்டது.


இந்தப் பின்னணியில், தேர்தல் முடிந்து 'தேசிய அரசு' அமைப்பதாக கூறிக்கொண்ட ஜனாதிபதி சிறிசேனாவும், அவரால் அதிரடியாக நியமிக்கப்பட்ட பிரதமர் ரணிலும் மீண்டும் ஒரு சாத்தியமற்ற, அன்றாட அரசியலுக்கு ஒவ்வாத கூட்டணியை அமைத்துக் கொண்டனர். அதன் ஒரே பயன், இருவரும் தேர்தலுக்கு முன்னர் தங்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, மற்றவர் அரசு பொறுப்பு ஏற்பதற்கு தன்னாலான வழிவகை செய்தனர்.

ஆனால், தேர்தலுக்கு முன்னர் இருவரும் தங்களது எதிர்கால அரசியல் அமைப்பின் படியான பொறுப்புகளை செவ்வனே சிந்தித்துச் செயல் திட்டம் வகுத்துக் கொண்டதாக எண்ண இடமில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ரணில் விக்கிரமசிங்கவிற்கும் எதிர்கால ஜனாதிபதியான சிறிசேனவை அடக்கியாளும் திட்டம் இருந்திருந்தால், அப்போதே அவர்கள் அது குறித்து யோசித்து செயல் திட்டமோ அல்லது ஒப்பந்தமோ தயார் செய்திருக்க வேண்டும். தேர்தலுக்குப் பின்னர், சிறிசேனா, நாட்டின் 'அதி மேதகு' ஜனாதிபதியாகிவிட்ட நிலையில் அவருடன் அடிமட்ட அரசியல் பேச்சுவார்த்தை நடத்திட ஐ.தே.க-வின் அரசியல் பாரம்பரியம் இடமளித்திருக்காது என்று கருதலாம்.

## ஒருயிர்-ஈருடல்?

தொடர்ந்து, சிறிசேனாவும், ரணிலும் தாங்கள் 'தேசிய அரசில்' பங்காளிகள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டாலும், அண்மைக் காலத்தில், அவர்களிடையேயான தவிர்க்க முடியாத இடைவெளி அதிகமாகிக் கொண்டே வருகிறது என்றே எண்ணத்தோன்றுகிறது. 'ஈருடல்-ஒருயிர்' என்று அவர்கள் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்கிறார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், அன்றாட அரசியல் நிலைமைகளை கருத்தில் கொண்டால் அது சாத்தியமானது அல்ல. மேலும், அவ்வாறான

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?



கருதிச், செயல்பட்டார்கள்.

அந்த வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மீனவர்களின் பிரச்சினைக்கு தலைமைத்துவம் கொடுப்பதாகக்கருதி, தடாலடியாக இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவே கருத இடமிருக்கிறது. இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்று அடித்துக் கூறுபவர்கள், மீனவர் பிரச்சினையில், இலங்கையின் மத்திய அரசு, இந்திய மீனவர்களை தடை செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற வகையிலேயே கருத்து தெரிவித்து வருகிறார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

கடந்த மாதம், தமிழ் நாடு தலைநகர் சென்னையில், இரு நாட்டு மீனவர் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக் குப்பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை சந்தித்த குழுவிற்கு கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தலைமை தாங்கினார். அவருடன் கூட்டமைப்பைச் சேர்ந்த மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் செல்வம் அடைக் கலநாதன் சென்றிருந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன. கூட்டமைப்பின் ஆட்சியின் கீழுள்ள வடக்கு மாகாண மீன்வளத் துறை அமைச்சர் டெனிஸ்வரன் பங்குபெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை அவர்களது கூட்டாட்சி அரசியலுக்கே உலை வைத்துவிடும் சாத்தியங்கள் உள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்த ராஜபக்ஷ, கிட்டத்தட்ட பாதி அளவிற்காக வாக்குகளைப் பெறுவார் என்ற சாத்தியக்கூறான உண்மையை இருவருமே கணக்கில் எடுத்திருக்கவில்லை. ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடனேயே சிறிசேனா, அன்று காலை வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணிலை, பிரதமர் ஆக்கியபோது, அவருடைய தலைமைக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருக்கவில்லை என்ற உண்மையையும் அவர்கள் ஜீரணித்துச் செயல்படவில்லை.

சிறிசேனா-ரணில் தலைமையின் கணக்குப்படி, ராஜபக்ஷ தேர்தலில் தோல்வி அடைந்தாலே அவரது பாராளுமன்ற ஆதரவு அனைத்துமே ஒட்டு மொத்தமாக தங்களுக்கு திரும்பிவிடும் என்றே எண்ணி செயல்பட்டுள்ளார்கள் என்றே எண்ண இடமிருக்கிறது. தேர்தல் முடிந்த கையோடு, அவர்கள் முன்னரே கூறி வந்தபடி, சுமார் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்மாற தயாராயிருந்தார்கள். ஆனால், ஒட்டுமொத்த முந்தைய அரசு தரப்பே புதிய அரசிற்கும், குறிப்பாக ஜனாதிபதி சிறிசேனாவிற்கும் தங்களது ஆதரவை தெரிவித்ததைத் தொடர்ந்து, குறிப்பாக ரணில் தலைமையால் தங்களது விருப்பப்படி செயல்பட முடியாமல் போனது.

**'திரிசங்கு நிலைமை'**

இது போன்ற திரிசங்கு நிலைமையை தொடரவிடாமல் செய்யத்தானோ என்னவோ, அதிரடியாக பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்ற அவர்களது வாக்குறுதியே தற்போதைய குழப்பங்களுக்கு மற்றொரு முக்கிய காரணம். எப்போது, உடனடி பாராளுமன்றத் தேர்தல் என்ற பேச்சு எழுந்து விட்டதோ, அப்போதே, சுதந்திரக் கட்சி கூட்டணியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி சிறிசேனா தலைமையின் வேட்பாளர் நியமன உத்தரவும், ராஜபக்ஷவின் வாக்கு வங்கியும் ஒருங்கிணைந்த தேவையாகி விட்டது.

அவர்களில் ஒருசாரார், நிர்ப்பந்தம் ஏற்பட்டால், ராஜபக்ஷ தலைமையில் தனி அமைப்பாக தேர்தலில் போட்டியிடவும் தயாராகவே இருக்கிறார்கள் என்ற வகையிலேயே தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், சிறிசேனா தலைமையை விட சுதந்திரக்கட்சி அணியின் வேட்பாளர் என்ற தகுதியை விட, ராஜபக்ஷ வாக்கு வங்கியே அதிமுக்கியமானது என்பதே அப்பட்டமான உண்மை.

அவர்களின் கவலைகளுக்கும் காரணம் இருக்கிறது. ஒன்று, ராஜபக்ஷ வாக்கு வங்கி. இரண்டாவது, ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்தைய ஒப்பந்தத்தின் படி, புதிய அரசிலும் அது சார்ந்த அரசியலிலும், ஐக்கிய தேசியக் கட்சியே முன்னிலை வகிக்கும் என்ற அப்பட்டமான உண்மை. கடந்த 1994ஆம் ஆண்டு தொடக்கம் இருபது ஆண்டுகளில் மூன்றைத் தவிர (2001-2004) பதினேழு ஆண்டுகளாக எதிர்க்கட்சியாகவே செயல்பட்டு வந்துள்ள ஐ.தே.க தலைவர்கள், ஆட்சிக்கு வந்த பின்னர் தங்களது ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்ளவே முயற்சிப்பார்கள் என்பதும் அரசியல் உண்மை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே, சிறிசேனா-ரணில் கூட்டு தலைமை, தங்களது இரு கட்சிகளும் அவை தலைமை ஏற்றிருக்கும் கூட்டணியும் எதிரும்-புதிருமாகவே பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்கும் என்று முடிவு செய்துவிட்டது. தேர்தலுக்குப் பின்னர் அரங்கேறிய இராஜதந்திர உபாயத்தால், சுதந்திரக்கட்சி கூட்டணி முழுமையாக அரசு பக்கம் சாய்ந்த பிறகும், இந்த நிலைமையில் மாறுதல் இல்லை.

இதன் காரணமாகவே, சொந்த வாக்குவங்கியும், தொண்டர்களும் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியை, பாராளுமன்றத் தேர்தலில் எதிர்த்து வெல்வது என்பது, சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு மிரட்சி தரும்

றதன் மூலம், அந்தக் குழு, அரசு மற்றும் அரசியல் சார்ந்த குழு என்ற இரு தரப்பு அங்கீகாரத்தையும் பெற்றது.

தற்போது, சம்பந்தன் தலைமையிலான குழுவாகட்டும், முன்னர் ஜனாதிபதி சிறிசேனாவின் இந்தியப் பயணத்தை ஒட்டி அவரைச் சந்தித்த வட மாகாண முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆகட்டும், இருவருமே, இந்திய மீனவர்கள், அத்துமீறி இலங்கைக் கடல் பரப்பில் புகுந்து, தங்களது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதாகவே குற்றம் சாட்டினார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. அப்போதும் சரி, இப்போதும் சரி, இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கு ஆதரவாகவே மத்திய அரசும், நாட்டின் கடற்படையும் செயல்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் மீனவர்கள் ஆகட்டும், அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகட்டும் இருநாட்டு மீனவர்கள் பிரச்சினை குறித்து அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அனைத்துமே பெருவாரி உண்மை கலந்தே உள்ளது. அவர்கள் கோரும் முடிவுகளும் ஏற்கப்பட வேண்டிய ... ஆனால், திடீரென்று, தனது 'கும்பகர்ணன் தூக்கத்தில்' இருந்து துயில் எழுந்து, கூட்டமைப்பு இதனை பிரச்சினை ஆக்குவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு.

ஒன்று, வட மாகாண அரசியலில், தேவானந்தாவின் பக்கத்தில் இருந்து, கூட்டமைப்பிற்கு ஆதரவாக வாக்களித்துள்ள மீனவர்கள் வாக்குவங்கியை தக்க வைத்துக் கொள்வது. அதில் ஏதேனும் பகுதியினர் குறிப்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் தாவி விடுவார்களோ என்றும் கூட்டமைப்புத் தலைவர்கள் நினைக்கலாம். ஆனால், அதற்கான இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம். எனவே, தற்போது, தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பின ராக பாராளுமன்றத்தில் அரசோச்ச வேண்டும், அதே சமயம், ராஜபக்ஷ வாக்குவங்கியின் பலத்தில் (மட்டு மே) மீண்டும் பாராளுமன்றத் தேர்த லில் வெற்றி பெறவேண்டும் என்ற கட்டாயம், அனைத்து சுதந்திரக் கட்சி அணியினருக்கும் உள்ளது எனலாம்.

திட்டத்தில் அடங்கும். ஆனால், ஜனாதிபதித்தேர்தலில் ராஜபக்ஷ எடுத்த வாக்குகளின் காரணத்தி னாலோ என்னவோ, தேர்தல் சீர் திருத்தம் குறித்த விடயத்தில் பிரதமர் தரப்பு சுணக்கம் காட்டி வருகிறது.

ஆனால், ஜனாதிபதி அதிகாரம் குறித்த விடயத்தை விட, தேர்தல் சீர்திருத்தம் குறித்தே, உடனடி விவா

னர்கள். மாறுதலை விரும்புகின்றனர் என்று கூறப்படுகிறது. இவர்கள் ராஜ பக்ஷ தரப்பினர் என்று கருதப்படு கின்றனர். பிரதமர் பதவிக்கு ராஜபக் ஷவை முன்னிறுத்தி நடைபெறும் பல்வேறு பொதுக் கூட்டங்களில், தலைமையின் கட்டளையைப் புறக்க ணித்து முன்னர் 25 சுதந்திரக் கட்சி அணியினர் கலந்து கொண்டார்கள். அந்த எண்ணிக்கை தற்போது இரண்டு பங்கிற்கும் மேலாக உயர்ந் துள்ளது.

மேலும், பாராளுமன்றத்தில், ரணில் அரசு முன்வைத்த பண மசோ தாவையும், சுதந்திரக் கட்சி தலைமை யிலான 'எதிர்க் கட்சி' அணியினர் 21 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்த தும் நினைவில் கொள்ளத்தக்க விட யம். அந்த வாக்களிப்பில், 'ராஜபக்ஷ தரப்பினர்' மட்டுமல்லாது, சுதந்திரக் கட்சி அமைச்சர்களைத் தவிர்த்து அனைத்து உறுப்பினர்களும் அரசு க்கு எதிராக வாக்களித்தமையும் குறிப்பிடத்தக்கது.

**சொந்த வாக்கு வங்கியும் தொண்டர்களும் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியை பாராளுமன்ற தேர்தலில் எதிர்த்து வெல்வது என்பது தற்போதைய சூழ்நிலை யில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு மிரட்சி தரும் விடயம்.**

### பத்தொன்பதாம் திருத்தம்

இலங்கை அரசியலை பொறுத்த வரையில் பதின்மூன்று போனால், பதினான்கு என்பதும், பதினேழு போய், பதினெட்டு வந்தால், அடுத்து பத்தொன்பது என்பதும் அரசியல் சட்டதிருத்தத்திற்கு மிகவும் பொருத் தமான விடயம். அரசு தலைமை களும், அரசியல் கட்சித் தலைமை களும் கூட மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் விடயமும் கூட.

'நிறைவேற்று ஜனாதிபதி' பதவி மற்றும் தேர்தல் சீர்திருத்தம் ஆகிய முக்கிய அரசியல் முடிவுகளை உள்ள டக்கிய பத்தொன்பதாம் திருத்தம் சிறிசேன-ரணில் அரசின் 'நூறு நாள்'

தத்திற்கு தயாராக தினேஷ் குணவர்த் தன குழுவின் பரிந்துரைகள் பல ஆண்டுகளாக தூசி தட்டப்படாமலே இருந்து வருகிறது என்பதே உண் மை. ஆனால், பாராளுமன்றத் தேர்த லுக்குப் பின்னரும் ஜனாதிபதி சிறிசேன பதவியில் தொடருவார் என்ற நிலையில் அவரது அதிகாரத் தைக் குறைத்து, பிரதமரின் அதிகா ரத்தை அதிகரிப்பதில் மட்டுமே, ரணில் தரப்பு அதிக அக்கறை காட்டி வருகிறது.

பாராளுமன்றத்தில் 'எதிர்க்கட்சித் தலைவர்' பதவி தொடர்பான பிரச்சி னையில், சுதந்திரக் கட்சி அணியைச் சார்ந்த 60-க்கும் மேற்பட்ட உறுப்பி

பத்தொன்பதாம் திருத்தத்தில் சில சரத்துகள் பொதுஜன வாக்கெடுப் பின் மூலமே சட்டமாக்கப்பட முடி யும் என்று உச்சநீதிமன்றம் தற்போது அறிவுறுத்தியுள்ளது. அதற்கு முன்ன ரே, உச்ச நீதிமன்றம் எந்தெந்த சரத்து களை ஏற்கவில்லையோ, அவற்றை மாற்றி விடுவதாக பிரதமர் ரணில் உறுதியளித்து விட்டார். இது. 'திரு விளையாடல்' திரைப்படத்தில்

முக்கிய காரணமே, கடந்த தசாப்தங் களாக 'எதிர்க்கட்சி அரசியல்' மட் டுமே செய்து வந்த மிதவாதக் கூட்ட மைப்புத் தலைவர்கள், தற்போது, வட மாகாண ஆட்சிக்கட்டிலில் அமர் ந்து சுமார் ஒன்றரை ஆண்டுகளில், அதற்குண்டான பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்ந்து செயல் படத் தொடங்கி உள்ளார்கள்.

ஆட்சியாளர்களின் அரசியல் கட் டாயங்களை உணர்ந்து, கூட்டமைப்பு செயல்படத் தொடங்கி உள்ளது வர வேற்கத்தக்க விடயம். இவ்வாறா கவே, இனப்பிரச்சினை உட்பட்ட பல்வேறு அரசியல் மற்றும் அரசு

சார்ந்த விடயங்களில் மத்தியில் ஆட் சியாளர்களுக்கும், பிற அரசியல் தலைமைகளுக்கும் நிர்ப்பந்தங்கள் உள்ளன என்பதனை அவர்கள் உணர்ந்தாலே பாதி கிணறு தாண்டிய தற்கு சமம்.

ஆனால், கடமை உணர்வு என்ற காரணத்தினால், அனைத்துக் காலங்க ளிலும் தங்களது தமிழ் மக்களின் கவ லைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் தார்மீக ஆதரவு அளித்து, பல்வேறு வகைகளில் உதவிகளும் செய்து வந்த தமிழ் நாட்டு அரசியல் தலை மைகளுடன் மோதல் போக்கை தவிர்த்திருக்க வேண்டும். மீனவர்

பிரச்சினை, தொடர்ந்து, இரு நாட்டு மத்திய அரசுகள் கவலைப்பட வேண் டிய விடயமாகவே அதனை, கூட்ட மைப்பு தொடர்ந்து கையாண்டிருக்க வேண்டும்.

எதிர்க்கட்சி அரசியல் செய்வதற் கும், அரசு தலைமை ஏற்பதற்கும், இராஜரீகமாக செயல்படுவதற்கும் நிரம்ப வித்தியாசங்கள் உள்ளன. அத னையும், கூட்டமைப்பு புரிந்து கொண்டு, அதன் படியும் நடந்து கொள்ள வேண்டும். அதற்கும், மீன வர் பிரச்சினை ஒரு வழிகாட்டுதலாக அமைந்துள்ளது என்றே கருத வேண் டியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தருமி' நாகேஷ், தனது பாட்டில் எவ்வளவு குறை இருக்கிறதோ, அதற்கு ஏற்ப பாண்டிய மன்னன் பரிசுத் தொகையை குறைத்துக் கொண்டு வழங்கலாம் என்று புலம்பியதையே நினைவுறுத்துகிறது.

என்றாலும், பத்தொன்பதாம் சட்டத்தை திருத்தி, பாராளுமன்றம் வாக்களித்தவுடன் சபையைக் கலைத்து விட்டு, புதிய தேர்தலுக்கு உத்தர விடப் போவதாக, ஜனாதிபதி சிறிசேனா மீண்டும் கூறியுள்ளார். ஆனால், அது எத்தகைய திருத்தம், அதன் சரத்துகள் எவையாக இருக்க முடியும் எவை விடப்படும் என்பது குறித்து அவர் கருத்துக் கூறவில்லை. அது போன்றே, புதிய திருத்தத்திற்கு ஆதரவாக தனது தலைமையிலான சுதந்திரக் கட்சி கூட்டணி வாக்களிக்குமா என்றும் அவர் உறுதிபடத் தெரிவிக்கவில்லை.

தற்போது தொடரும் அரசியல் சூழலில், ஜனாதிபதி சிறிசேனவைப் பொறுத்த வரையில், இதுபோன்ற தர்க்கரீதியான பிரச்சினைகள் அனைத்தையுமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முடிவிற்கே விட்டுவிட்டார். அதில் பின்னடைவோ, அல்லது அவை குறித்த வாக்கெடுப்பில் தோல்வியோ ஏற்பட்டால், அதற்கான பொறுப்பும் ரணில் தலைமையையே சாரும் என்ற வகையிலேயே அவர் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளார். அந்த வகையில், 'நிறைவேற்று ஜனாதிபதி' குறித்த சட்ட திருத்தங்களே கேள்விக்குறி (மற்றும் கேலிக் குறி) ஆகிவிட்டது எனலாம். ■

---

*(15ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தலைவராகவும் இருக்கிறார். உத்தேச அரசியலமைப்பு மாற்றத்துக்கு எதிராக ஜனாதிபதி சதி செய்கிறார் என்று ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) ஏற்கனவே குற்றஞ்சாட்டத் தொடங்கிவிட்டது என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

## உச்சநீதிமன்றம்

அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. திருத்தச் சட்ட மூலத்தின் சில பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானவை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருந்தது, அந்தக் குறிப்பிட்ட பிரிவுகள் நிறைவேற்றப்பட வேண்டுமானால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுக்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்தைப்பெறவேண்டிய தேவை இருக்கிறது. முக்கியமாக பிரதமருக்கு அதிகாரங்களை வழங்கும் பிரிவுகளுக்கு மக்களின் அங்கீகாரம் அவசியம். வாக்கெடுப்பொன்றுக்கு போவதில் அரசாங்கத்துக்கு ஆர்வமில்லை. அதனால், சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாக மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டிய தேவைகொண்ட பிரிவுகள் கைவிடப்படுமென்று அறியவருகிறது. அதனால், தற்போதைய ஆட்சி முறையில் அடிப்படை மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியப்பாடு இல்லாமற் போகும். தற்போதைய வடிவில் திருத்த யோசனைகள் அங்கீகரிக்கப்படுமானால், ஜனாதிபதியிடமிருந்து ஒரு சில அதிகாரங்கள் மாத்திரமே பறிக்கப்படும். பிரதமர் வெறும் இறப்பர் முத்திரையாகவே தொடருவார். ■

***(பேராசிரியர் சீதபொன்கலன் அமெரிக்காவின் மேரிலாண்ட் மாநிலத்தின் சலிஸ்பரி பல்கலைக்கழகத்தில் முரண்நிலை தீர்வு திணைக்களத்தின் தலைவராக பணிபுரிகிறார்)***

---

*(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

பாராளுமன்றத் தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு என்ற மூன்று தேர்தல்களை நடத்த வேண்டும். இதற்கு நாடு தயாரா என்பது ஒரு பிரச்சினை. ஆகவே நாம் சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் செய்யக்கூடியவை எவையோ அவற்றையே செய்வதென முடிவு செய்தோம். அத்தோடு அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் முதற் கட்டத்தில் தேர்தல் முறையை மாற்றுவது இல்லையெனவும் முடிவு செய்தோம். ஏனெனில் அவ்விதம் செய்வதாயின் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழித்திருந்தால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருப்பேன். பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் என் போரைக் கொண்ட தேர்தல் சபையொன்று (Electoral College) அமைக்கப்பட வேண்டும். அதன் வாக்களிப்பு முறையில் பாராளுமன்ற உறுப்பினர்களை விடக் குறைந்த எடை மதிப்பும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு இன்னும் குறைந்த எடை மதிப்பு உள்ள தான Weighted votes முறை என்றும் எடையிடப்பட்ட வாக்கு முறை மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. ஆனால் ஜனாதிபதித் தேர்தலின் போது எவையெவை செய்யப்படலாம் என உடன்பட்டோமோ அவற்றிற்கு நாம் கட்டுப்பட்டவர்களானோம். ஒரு அரசியல் யாப்பை உருவாக்கும் போது வெவ்வேறு சக்திகள் வெவ்வேறு திசையில் அதனை இழுக்கும். அவற்றுள் சில சக்திகள் மற்றவற்றை விடப் பலம் உடையனவாய் இருக்கும். இறுதியாகக் கிடைக்கும் வரைவு வெவ்வேறு சக்திகளின் பங்களிப்பின் விளைபொருளாகவே இருக்கும்.

19ஆவது திருத்தத்துடன் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் முடிவடைந்துவிடாது. கருத்தொற்றுமையால் ஒன்றுபட்ட என்னைப் போன்ற பலர் ஒன்றிணைந்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதற்குப் போராடுவோம். சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமலே எமது இலக்கை அடைவதற்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வழிவகுத்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜவஹர்லால் நேருவுடன் சுபாஷ் சந்திரபோஸ்

# நேதாஜி போஸை நேரு உளவு பார்த்தாரா?

இந்தியாவின் மிகப்பெரிய சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவரான நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் மரணமடைந்து 70 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்து விட்டது. பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளை எதிர்த்துப் போராடுவதற்காக அமைக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவத்தின் தலைவரான அவர் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜப்பான் சரணடைந்த சில நாட்களில் (1945 ஆம் ஆண்டு) தாய்பேயில் விமான விபத்தொன்றில் பலியானதாகக் கூறப்பட்டது. ஆனால், இந்தியாவில் மக்கள் அவரது மரணம் தொடர்பிலான மர்மம் குறித்து மலைப்புற்றவர்களாகவே இன்னமும் இருக்கிறார்கள். அந்த மர்மம் குறித்து நம்பகத்தன்மையுடனான விசாரணையொன்று நடத்தப்படவேண்டுமென்று அடிக்கடி கோரிக்கைகள் விடுக்கப்பட்ட வண்ணமேயிருக்கின்றன. நேதாஜியின் மரணத்துடன் தொடர்புடைய ஆவணங்களை பகிரங்கப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் இதுவரையில் மறுத்து வருவதனால் அந்த மர்மம் தொடர்ந்து நிலைக்கிறது. மக்கள் குறிப்பாக மேற்குவங்காளத்தில் உள்ளவர்கள் நேதாஜியின் மரணம் பற்றிய கதை சரியானதல்ல என்றே நம்புகிறார்கள். காலஞ்சென்ற காங்கிரஸ் தலைவர்களின் பெயரைக் காப்பாற்றுவதற்காக காங்கிரஸ் அரசாங்கங்கள் அந்த ஆவணங்களை

டில்லி டயரி



எம்.பி.வித்தியாதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியமாக வைத்திருப்பதாகவும் மக்கள் நம்புகிறார்கள்.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டியிருந்த போராட்ட முறைகள் தொடர்பில் காங்கிரஸ் தலைவர்கள் பலருடன் நேதாஜி முற்றிலுமாக முரண்பட்டுக் கொண்டேயிருந்தார் என்பது ஒரு சரித்திர உண்மையாகும். தேசபிதா மகாத்மா காந்தியுடனும் இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேருவுடனும் நேதாஜி கடுமையான கருத்து வேற்றுமைகளைக் கொண்டிருந்தார்.

ஆவணங்களைப் பகிரங்கப்படுத்துமாறு அண்மையில் அரசாங்கத்தின் மீது நெருக்குதல் பிரயோகிக்கப்பட்டன. நேதாஜியின் செயற்பாடுகளைக் கண்காணிக்குமாறு நேரு அரசாங்கம் உத்தரவிட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியதைத் தொடர்ந்தே இந்த நெருக்குதல்கள். நேதாஜியின் சகோதரர் சரத்சந்திர போஸின் மகன் அமியா போஸ் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து டோக்கியோவில் இருந்த இந்தியத் தூதுவரிடம் இருந்து தகவல்களைப் பெறுமாறு அன்றைய வெளியுறவுச் செயலாளர் சுபிமால் தத்துக்கு நேரு தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதினாராம். இந்திய எழுத்தாளரும் முன்னாள் பத்திரிகையாளருமான அனுஜ் தார் அண்மையில் 'இந்தியாவின் பெரிய மூடிமறைப்பு' (India's Biggest Cover up) என்ற தலைப்பில் நூலொன்றை எழுதி வெளியிட்டிருக்கிறார். அதை எழுதுவதற்காக பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தாரினால் பரிசீலிக்கக்கூடியதாக இருந்த ஆவணங்களில் இருந்தே நேரு வெளியுறவுச் செயலாளருக்கு கடிதம் எழுதிய விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது. நேதாஜிக்கு மிகவும் நெருக்கமானவர் என்று கூறப்பட்ட அமியா போஸ் டோக்கியோவில் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கிலேயே 1957 நவம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட அக்கடிதத்தை நேரு எழுதினார்.

அமியா போஸ் டோக்கியோவில் விரும்பத்தகாத எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்று இந்தியத்தூதுவர் சி.எஸ்.ஜா புதுடில்லிக்கு உறுதிபடத் தெரிவித்து பதில் அனுப்பினார்.



நேதாஜியின் மருமகன் சூர்யா குமார் போஸுடன் ஜேர்மனியில் மோடி

நேதாஜி போஸ் பற்றி கடந்த 15 வருடங்களாக ஆராய்ச்சி செய்து வந்திருக்கும் தார் தனது நூலுக்காக பிரிட்டிஷ் மற்றும் இந்திய தேசிய சுவடிகள் இலகாக்களிடமிருந்து மிகவும் அரிதான ஆவணங்களைப் பெற்றுக் கொண்டார். நேரு எழுதிய கடிதம் குறித்த தகவல் வெளியாகியதையடுத்து நேதாஜியின் குடும்பத்தவர்கள் கோல்கத்தாவில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து, நேதாஜியின் மரணம் தொடர்பான இரகசிய ஆவணங்களை பகிரங்கப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

வேறு சந்தர்ப்பங்களிலும் கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு நேரு உத்தரவிட்டிருந்ததாக செய்திகள் கூறின. நேதாஜியின் குடும்பத்தை சுமார் 20 வருடங்களாக (1948 -1968) அரசாங்கம் உளவு பார்த்ததாக புலனாய்வுப் பணியகத்தினால் (Intelligence Bureau) பகிரங்கப்படுத்தப்பட்ட இரு கோவைகளின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. அந்தக் காலகட்டத்திற்குள் நேரு பிரதமராக இருந்த வருடங்கள் அடங்குகின்றன. கோல்கத்தாவில் இருந்த நேதாஜியின் இரு வீடுகள் மீது (வூட்பேர்ன் பூங்கா, [illegible] எல்ஜின் ரோட்) பிரிட்டிஷ் கால கண்காணிப்பை புலனாய்வுப் பணியகம் மீண்டும் ஆரம்பித்ததாக அந்த ஆவணங்கள் காண்பித்தன. நேதாஜியின் குடும்பத்தவர்களினால் எழுதப்பட்ட கடிதங்களை இடைமறித்து பிரதி பண்ணுவதற்கு புறம்பாக, அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொண்ட பயணங்களின் போது புலனாய்வாளர்கள் நிழல் போலத் தொடர்ந்து சென்று கண்காணித்தனர். அமியா போஸுக்குப் புறம்பாக நேதாஜியின் சகோதரர் சிசிர் குமார் போஸும் காண்காணிப்புக்குட்படுத்தப்பட்டார்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பிரிட்டன் வெற்றி பெற்றால் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்படுமென்று பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் உறுதியளித்ததாகக் கூறப்பட்டதால் யுத்தத்தில் காங்கிரஸும் நேருவும் பிரிட்டனை ஆதரித்தார்கள். ஆனால் நேதாஜி ஜப்பானின் ஆதரவாக இருந்தார். போரில் பிரிட்டன் தோல்விகாணும் பட்சத்தில் இந்தியா சுதந்திரமடையக் கூடியதாக இருக்கும் என்று அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். யுத்தத்தில் பிரிட்டனின் வெற்றியைத் தொடர்ந்து இந்தியா சுதந்திரம் பெற்றது என்பது இப்போது சரித்திரம்.

எது எவ்வாறிருந்தாலும் நேதாஜி தொடர்பான ஆவணங்களை பகிரங்கப்படுத்துவதற்கு நேரு அரசாங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய தயக்கம் சந்தேகத்தை அதிகரித்தது. நேருவின் மரணத்தைத் தொடர்ந்து பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் குறிப்பாக காங்கிரஸ் அரசாங்கங்கள் அந்த ஆவணங்களை இரகசியமாகவே வைத்திருந்தன. ஆனால், இப்போது புதிதாக வெளியாகின்ற தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும் ஆவணங்களை பகிரங்கப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் மீண்டும் கிளம்ப வழி வகுத்திருக்கின்றன. குறிப்பாக நேதாஜியின் குடும்பத்தவர்களிடமிருந்து இக்கோரிக்கை தீவிரமடைந்திருக்கிறது.

இப்போது மத்தியில் விவேகமிக்க ஒரு அரசியல்வாதியான பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருக்கும் நிலையில்,இந்த ஆவணங்களை இறுதியில் அரசாங்கம் பகிரங்கப்படுத்தும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் தோன்றியிருக்கிறது. நேதாஜி மற்றும் அவரது குடும்பம் பற்றியும் மர்மமான முறையில் அவர் மறைந்துபோன சம்பவம் பற்றியும் அரசாங்கத்திடம் 41 கோவைகள் இருக்கின்றன. ஆனால், இரு கோவைகள் மாத்திரமே பகிரங்கப்படுத்தப்பட்டன. இதுவும் கூட, 2007 ஆம் ஆண்டில் மத்திய தகவல் ஆணையகம் விடுத்த உத்தரவொன்றின் பேரிலேயே செய்யப்பட்டது. உள்துறை அமைச்சு 2012ஆம் ஆண்டு சுமார் 70 ஆயிரம் பக்கங்களில் 10 ஆயிரம் பக்கங்களை வெளியிட்டது. அவற்றை 2014 டிசம்பரில் தார் பகிரங்கப்படுத்தினார். இப்போது அந்தக் கோவைகள் தேசிய சுவடிகள் காப்பகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இப்போது பாரதிய ஜனதா மேற்கு வங்காள மாநில வாக்காளர்கள் மத்தியில் படிப்படியாக அதன் செல்வாக்கை அதிகரித்து வருகின்றது. மமதா பானர்ஜியின் திரிநாமுல் காங்கிரஸிடமிருந்து கடும் எதிர்ப்பு வந்துகொண்டிருக்கின்ற போதிலும் அந்த மாநிலத்தில் பாரதிய ஜனதாவின் செல்வாக்கு அதிகரிக்கவே செய்கிறது. நேதாஜி பற்றிய இரகசிய ஆவணங்களில் காங்கிரஸ் கட்சியைக்கண்டனம் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய விடயங்களைக் கண்டுபிடிக்க முடியுமாக இருந்தால், அந்த ஆவணங்களை பகிரங்கப்படுத்துவது பாரதிய ஜனதாவுக்கு மேற்கு வங்காளத்தில் பெரும் ஆதரவைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். மமதா பானர்ஜியும் அவரது கட்சியின் பல தலைவர்களும் முன்னாள் காங்கிரஸ் தலைவர்களே. தவிரவும் வங்காளிகள் மத்தியில் நேதாஜிக்கு இன்னமும் பேராதரவும் அனுதாபமும் இருக்கிறது. எனவே, அந்த ஆவணங்களை பகிரங்கப்படுத்துவதென்பது மேற்குவங்காளத்தில் வாக்காளர் தளத்தை அதிகரிப்பதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுவரும் பிரதமர் மோடி மேற்கொள்ளக்கூடிய மிகவும் விவேகமான தந்திரோபாயமாக அமையும் என்பதிற் சந்தேகமில்லை. இடதுசாரிகள் இன்னமும் கூட அந்த மாநிலத்தில் பலம் பொருந்திய அரசியல் சக்தியாக விளங்குகிறார்கள்.

ஆவணங்களைப் பகிரங்கப்படுத்துவது குறித்து மோடி பரிசீலனை செய்துவருகின்றார் என்று நேதாஜியின் மருமகனின் மகனான சூர்யா குமார் போஸ் கூறினார். நேதாஜி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விமான விபத்தொன்றில் தான் பலியானார் என்பதை அவரின் குடும்பத்தவர்களில் பெரும்பாலானோர் நம்பவில்லை என்று கூறும் சூர்யா போஸ், பிரதமர் மோடியை அவர் ஜேர்மனிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது சந்தித்தார். பிரதமரை கௌரவித்து ஏப்ரில் 13 இல் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் கலந்து கொண்டபோதே இச்சந்திப்பு இடம் பெற்றது. தொழிலதிபரான சூர்யா போஸ் ஹம்பேர்க்கில் இந்திய- ஜேர்மன் சங்கத்தின் தலைவராக இப்போது இருக்கிறார்.

ஆவணங்களை பகிரங்கப்படுத்துவது குறித்து அக்கறையுடன் பரிசீலித்து பிறகு ஒரு முடிவை எடுக்கவிருப்பதாக மோடி தன்னிடம் கூறியதாக போஸ் தெரிவித்திருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. அந்தக் கோவைகளில் எந்தவொன்றையும் தானே இன்னமும் பார்க்கவில்லை என்ற காரணத்தால் அவற்றை திறப்பதற்கு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வதாக போஸிடம் மோடி கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், கோவைகளின் உள்ளடக்கம் பற்றி எந்த மதிப்பீட்டையும் தன்னால் செய்ய முடியாது என்றும் அந்த உள்ளடக்கம் எத்தகையதாக இருக்குமென்று ஊகம் தெரிவிப்பது கூட கஷ்டமான காரியம் என்றும் மோடி தெரிவித்ததாக கூறப்படுகிறது.

உண்மை வெளிவரவேண்டும் என்ற கருத்தை பிரதமர் கொண்டிருக்கிறார் என்று சூர்யா போஸ் கூறியிருக்கிறார். அத்துடன் இந்தவிவகாரம் குறித்து ஆராய்வதற்கு போஸ் குடும்பத்தவர்களை மோடி டில்லிக்கு அழைத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோல்கத்தாவில் நேதாஜியின் மருமகன் துவார்கா நாத் போஸ், மருமகனின் பிள்ளைகளான சந்திரா போஸ் மற்றும் அவிஜித் ரோய் ஆகியோர் உட்பட உறவினர்கள் பலர் நூற்றுக்கணக்கான மக்களுடன் சேர்ந்து பேரணியை நடத்தி கோவைகளைப் பகிரங்கப்படுத்துமாறு மாநில, மத்திய அரசாங்கங்களிடம் கோரிக்கை விடுத்தனர். கோல்கத்தாவின் மத்திய பகுதியினூடாக மூன்று கிலோமீற்றர் நீளத்துக்கு பேரணி சென்று கொண்டிருந்த போது கோவைகளை பகிரங்கப்படுத்தக் கோரும் துண்டுப் பிரசுரங்களை மக்கள் விநியோகித்தார்கள். பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுவிட்டு நாடுதிரும்பிய மோடி இந்த விவகாரம் தொடர்பில் என்ன கூறப்போகிறார் என்பதை அறிய நேதாஜியின் குடும்பத்தவர்களும் ஏனைய அனுதாபிகளும் காத்திருக்கிறார்கள். கோவைகளைப் பகிரங்கப்படுத்துவதற்கான துணிச்சலை மோடி வெளிக்காட்டுவாரா? அவ்வாறு செய்வாரேயானால், மேற்கு வங்காள மாநிலத்தில் தனது கட்சியின் ஆதரவுத் தளத்தை வலுப்படுத்த அவரால் உதவக்கூடியதாக இருக்கும்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் தொடர்பான ஆவணங்கள் இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அந்தப் போரும் கூட நேரு பிரதமராக இருந்த வேளையிலேயே இடம்பெற்றது. அந்த ஆவணங்கள் தேசிய நலன்களுடன் சம்பந்தப்பட்டவை என்பதால் அவற்றைப் பகிரங்கப்படுத்துவது அந்த நலன்களுக்கு பாதகமாக அமையும் என்று இதுகாலவரையில் அரசாங்கங்கள் வாதம் செய்து வந்திருக்கின்றன.

பிரதமர் மோடியும் பாரதிய ஜனதா காட்சியும் வித்தியாசமான அணுகுமுறையைக் கடைப்பிடித்து போர் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பகிரங்கப்படுத்துவார்களா? அவ்வாறு செய்தால் அவற்றில் இருந்து உகந்த படிப்பினைகளைப் பெற்று எதிர்கால நடவடிக்கைகளை சீரிய முறையில் திட்டமிடக்கூடியதாக இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் இல்லாத பிறந்தநாள் கொண்டாட்டம்

**பிரதமர் மோடியும் கட்சித்தலைவர் அமித் ஷாவும் தீர்மானங்களை எடுக்கும் பலம் பொருந்திய உயர் நிலையில் இருக்கும் பட்சத்தில் பாரதிய ஜனதாவில் அதிகார சமநிலையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படுவதை காண்பதில் சாத்தியமில்லை**




இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை இது பெற்றோர் இல்லாத ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம். 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அக்கட்சிக்கு ஏப்ரில் 6ஆம் திகதி 34 வயது நிறைவடைந்தது. ஆனால், அடல் பிஹாரி வாஜ்பாய், முரளி மனோஹர் ஜோஷி மற்றும் ஏனையவர்களுடன் சேர்ந்து கட்சியை ஆரம்பித்த மூத்த தலைவரான எஸ்.கே.அத்வானிக்கு அந்த நாள் துக்கத்துக்குரியதாகிவிட்டது.

பிரதமர் மோடி மற்றும் அவரின் நம்பிக்கைக்குரிய அமித் ஷா ஆகியோரின் தலைமையின் கீழ் 35 ஆவது ஸ்தாபக தினத்தை பாரதிய ஜனதா கொண்டாடியபோது, 87 வயதான அத்வானி புதுடில்லியில் கட்சியின் தலைமையக வைபவத்தில் பிரசன்னமாயிருக்கவில்லை. இன்னொரு முன்னாள் தலைவரான முரளி மனோஹர் ஜோஷியும் கூட அங்கு காணப்படவில்லை.

முன்னைய சந்தர்ப்பங்களைப் போலன்றி, இத்தடவை அத்வானிக்கு தனிப்பட்ட முறையில் அழைப்பு அனுப்பப்படவில்லை. முன்னைய வருடங்களில் எல்லாம் அவர் ஸ்தாபகதின வைபவங்களில் தவறாது கலந்துகொண்டார். இத்தடவை வைபவம் குறித்து அவருக்கு கைத்தொலைபேசி மூலம் குறுஞ்செய்தியே அனுப்பப்பட்டது.

இந்தச் சம்பவம் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து மூத்த தலைவர்களை நீக்கும் நடவடிக்கைகளின் [illegible] குறித்து நிற்கிறது என்று அரசியல் அவதானிகள் வர்ணிக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னர், பெங்களூரில் நடைபெற்ற பாரதிய ஜனதாவின் தேசிய நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் ஒருவார்த்தை கூட பேசாமலேயே அத்வானி டில்லி திரும்பியிருந்தார். 1979 ஆம் ஆண்டு ஜனதா கட்சியில் இருந்து பிரிந்து பாரதிய ஜனதாகட்சி உதயமாகியதற்குப் பிறகு நடைபெற்றிருக்கக்கூடிய தேசிய நிறைவேற்றுக் குழுவின் கூட்டமொன்றில் அத்வானி உரையாற்றாமல் திரும்பியது இதுவே முதற்தடவையாகும்.

கடந்த வருடங்களில் எல்லாம் நிறைவேற்றுக் குழுக்கூட்டங்களில் அத்வானியும் ஜோஷியும் உரையாற்றி கட்சி உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவார்கள். 2013 ஜூனில் கோவாவில் நடைபெற்ற மகாநாட்டில் மாத்திரம்தான் அத்வானி உரையாற்றவில்லை. 2014 லோக்சபா தேர்தலுக்கு முன்னதாக கட்சியின் பிரசாரக் குழுவின் தலைவராக மோடி முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து அத்வானிக்கு ஏற்பட்ட அதிருப்தியே அதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாஜ்பாய் அரசாங்கம் தேர்தலில் தோல்வியடைந்த பிறகு அவர் அரசியலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இருந்து ஒதுங்கும் வரை, அவர் கட்சியின் ஒரு நட்சத்திரப் பேச்சாளராகவே விளங்கினார். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. அவர்கள் எல்லோரும் இப்போது தேவைப்படாதவர்களாகவும் வேண்டப்படாதவர்களாகவும் மாறிவிட்டார்கள்.

பெங்களூரில் நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் அத்வானி கலந்து கொள்வாரா என்று முன்கூட்டியே ஊகங்கள் கிளம்பியிருந்தன. ஆனால், அக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அவரை கட்சியினர் இணங்க வைத்தனர். முதலாவது கூட்டத்தொடரில் அத்வானி மேடையில் அமர்ந்திருந்தார். ஆனால் கட்சியின் அறிவுரையாளராக இருந்தபோதிலும் அப்போது கூட அவர் உரையாற்றவில்லை. நிறைவுக் கூட்டத்தொடரில் அவர் உரையாற்றுவார் என்று சில தலைவர்கள் கூறினார்கள். அதுவும் நடைபெறவில்லை.

பெங்களூரில் அத்வானி உரை நிகழ்த்தாததற்கு கட்சி உத்தியோகபூர்வமாக விளக்கம் எதையும் கூறவில்லை என்ற போதிலும், உரையாற்றுவதற்கு அவரை அனுமதிப்பதற்கு முன்னதாக உரையின் தயாரிப்புக் குறிப்புகளை அவர் தங்களுக்கு காண்பிக்க வேண்டுமென்று புதிய தலைமைத்துவம் விரும்பியதாக அறியவருகிறது. ஆனால், அவமதிப்புக்குள்ளாவதை விடவும், மௌனமாக இருந்து விடுவதே நல்லது என்று அவர் தீர்மானித்தார் போலும்.

அத்வானியை மோடி விரும்புவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியமாகும். லோக்சபா தேர்தலுக்கு முன்னதாக, குஜராத்தின் காந்தி நகர் தொகுதியில் அத்வானி போட்டியிடுவதற்கு மோடி அனுமதிக்கமாட்டார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. லோக்சபாவில் அந்தத் தொகுதியை அத்வானி நெடுகவும் பிரதிநிதித்துவப்படுத்தி வந்திருக்கிறார். இறுதியில் இணக்கப்பாடு காணப்பட்டதையடுத்து அவர் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார்.

அரசியலில் மோடி கண்டிருக்கும் வளர்ச்சிக்கு அத்வானியே காரணம். 2002 குஜராத் கலவரங்களையடுத்து மோடியை நீக்குவதற்கு வாஜ்பாய் யோசித்த போது அதிலிருந்து அவரைக் காப்பாற்றியவர் அத்வானி தான், கோவாவில் நடைபெற்ற பாரதிய ஜனதாவின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் மோடி கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டதற்கும் அத்வானியின் ஆதரவே காரணம். பாரதிய ஜனதா பலம் பொருந்திய கட்சியாக மாறுவதற்கு வழிவகுத்த ரதயாத்திரையின் போது அத்வானியின் தேரோட்டியாக விளங்கியவர் மோடி.



முரளி மனோகர் ஜோஷி

தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்துக்குப் பின்னர் நிதியமைச்சர் அருண் ஜேட்லி செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார். முன்னர் அத்வானியின் ஒரு சீடராக விளங்கிய ஜேட்லி அந்தக் கூட்டத்தில் அத்வானி ஏன் உரையாற்றவில்லை என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், 'அவர் ஒருமூத்த தலைவர். அவர் விருப்புகின்ற அரங்கில் இருந்து கட்சியை வழிகாட்ட முடியும்' என்று கூறினார். அத்வானி மௌனமாக இருப்பதற்கு வழிவகுத்த கலந்துரையாடல் குறித்து ஜேட்லியிடம் கேட்கப்பட்டபோது, அவர் மூடி மழுப்பாத முறையில் பதிலளித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. 'கட்சிக்குள்ளே தீர்மானங்களை மேற்கொள்ளும் செயல்முறைகள் குறித்து நாம் ஊடகங்களுடன் பேசுவதில்லை. கட்சியின் செயற்றிட்டங்கள் குறித்து மக்களுக்குத் தெரிவிப்பதும் ... வெளிப்படைத்தன்மையை ... மறைவற்றதும் தகவல் அறிவதற்கான உரிமையைக் கொண்டதுமான இன்றைய உலகில் கூட ஊடகங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்று நான் நினைக்கவில்லை' என்பதே அவரின் பதிலாக இருந்தது.

பிரதமர் மோடியும் கட்சித் தலைவர் அமித்ஷாவும் தீர்மானங்களை எடுக்கும் பலம் பொருந்திய உயர் நிலையில் இருக்கும் பட்சத்தில் பாரதிய ஜனதாவில் அதிகாரச் சமநிலையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படுவதைக் காண்பது சாத்தியமில்லை. ஆனால், நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தின் இறுதி நாளில் அத்வானி உரையாற்றியிருந்தால் கூட, அவர் மோடியினதோ அமித்ஷாவினதோ நிலைப்பாடுகளுக்கு இசைவான முறையில் பேசியிருக்கமாட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். கட்சிக்குள் தோன்றியிருக்கும் அதிகாரச் சண்டை பெரியதாக இல்லாவிட்டாலும் அலட்சியம் செய்ய முடியாதது. இந்த அதிகாரச் சண்டையே தனது மனதில் உள்ளதைப் பேச வேண்டுமென்ற உந்துதலை அத்வானிக்குக் கொடுத்திருக்கலாம். அதற்கு வாய்ப்பு இல்லாதபட்சத்தில் உரையாற்றாமல் இருந்து விடுவதே நல்லது என்று அவர் நினைத்திருக்கக் கூடும் என்று கட்சி வட்டாரங்கள் கூறின.

கட்சியினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க நிகழ்ச்சி நிரலில் அத்வானியின் பெயர் இடம்பெற்றிருந்தது. ஆனால், பிறகு அது அகற்றப்பட்டது. அவரைப் பேச அனுமதித்திருந்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது மனதில் உள்ளதைப் பேசியிருப்பார். அது கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்துக்கு பெரும் அசௌகரியமாகப் போயிருக்கும் என்று கூட ஒரு தலைவர் சொன்னார்.

கட்சிக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த வேண்டாமென்று சிலர் அத்வானியை கேட்டுக்கொண்ட அதே வேளை, அவர் மனந்திறந்து பேச வேண்டுமென்று வேறு சிலர் விரும்பினார்கள். தற்போதைய தலைமைத்துவம் செயற்படுகின்ற முறையைக் கண்டித்தும் வாஜ்பாயின் கீழ் நிலைவரங்கள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதை ஒப்பிட்டும் சில வார்த்தைகளை அத்வானி பேச வேண்டுமென்று இவர்கள் விரும்பினார்கள் போலும். ஆனால், அத்தகையவர்களின் குரல் போதுமானளவுக்கு வலுவானதாக இருக்கவில்லை.

மறுபுறத்தில் மோடி கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் செயற்பாடுகளின் வெற்றிக்காக அமித்ஷாவைப் பாராட்டினார். ஷா மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பாரதிய ஜனதாவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அனேகமாக 10 கோடியைத் தொட்டுவிட்டது. இது ஏப்ரில் 30 அளவில் 12 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தளவு எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் இந்த சக்தியை (மகாத்மா காந்தி, ராம் மனோஹர் லோஹியா மற்றும் தீன தயாள உபாத்யாய ஆகியோர் செய்ததைப் போன்று) ஒரு சமூக இயக்கமாக மாற்றுமாறு கட்சியின் தலைவர்களிடம் மோடி வேண்டுகோள் விடுத்தார்.

எவ்வாறெனினும் மோடியின் அந்தப் பேச்சு தற்போதைய தலைமைத்துவத்துக்கு எதிராக மனக்குறைகளைக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் பெரிதாக எடுபடவில்லை. கட்சியில் உள்ள யதார்த்த நிலையை பிரதமரின் உரை பிரதிபலிக்கவில்லை என்று அவர்களில் ஒருவர் சொன்னார். டில்லி சட்டசபைத் தேர்தலில் பாரதிய ஜனதா தோல்வி கண்ட பிறகு கட்சியின் அடிமட்டத் தொண்டர்களுடன் பிணைப்பை ஏற்படுத்த தலைமைத்துவம் முயற்சிக்க வேண்டுமென்று ஆர்.எஸ்.எஸ்.இயக்கம் கேட்டுக் கொண்டது. ஆனால், அத்தகைய கோரிக்கை எதுவும் பிரதமரின் உரையில் கவனத்தைப் பெற்றதாக இல்லை.

பாரதிய ஜனதாவின் தலைவராக அமித்ஷா பதவியேற்ற பிறகு, தீர்மானங்களை எடுக்கும் உயர்மட்ட அமைப்பான கட்சி பாராளுமன்றக் குழுவில் இருந்து அத்வானி ஓரங்கட்டப்பட்டார். அவர் புதிதாக அமைக்கப்பட்ட மார்க்தர்ஷக் மண் மண்டலின் (வழிகாட்டிக்குழு) ஒரு உறுப்பினராக்கப்பட்டார். அத்வானியுடன் சேர்ந்து வாஜ்பாய், முரளி மனோஹர் ஜோஷி, மோடி மற்றும் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரும் அந்தக் குழுவில் இருக்கிறார்கள்.

பெங்களூரில் நடைபெற்ற இரு நாள் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் 300க்கும் அதிகமான உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். நிலம் கையகப்படுத்தல் சட்டமூலம், வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தை நாட்டுக்கு மீட்டுக் கொண்டுவருதல் போன்ற ஆட்சி முறையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மோடி அரசாங்கம் உகந்த முறையில் கையாளத் தவறி விட்டது என்று மக்கள் மத்தியில் தோன்றியிருக்கும் அபிப்பிராயத்தை மாற்றியமைக்க நடவடிக்கைகளை எடுப்பதென்று பெங்களூரில் தீர்மானிக்கப்பட்டது. வறியவர்களை விட பணக்காரர்கள் மீதே மோடி அரசாங்கம் அக்கறை கொண்டு செயற்படுகிறது என்று மக்கள் அதிருப்தியடையத் தொடங்கிவிட்டார்கள்.

பொருளாதார அபிவிருத்தியும் மக்கள் நலனுமே அரசாங்கத்தின் பிரதான அக்கறைக்குரிய விடயங்கள் என்று மக்களை நம்பவைப்பதற்கு உருப்படியான செயற்பாடுகளில் உடனடியாக இறங்க வேண்டிய அவசியமும் அவசரமும் மோடிக்கும் கட்சிக்கும் ஏற்பட்டிருக்கிறது. ■


---

*(05ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தேர்தல் முறைமாற்றம் தொடர்பாக 13 வருடங்களுக்கு முன்னர் அதுவும் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட அரசாங்க காலத்தில் (2001-2004) முன்னாள் அமைச்சர் தினேஷ்குணவர்தன தலைமையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழு அன் இடைக்கால அறிக்கையையும் வெளியிட்டது. கடந்த 10 வருடங்களாக தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் எந்தவிதமான அக்கறையும் காட்டாமல் இருந்துவந்த சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் இப்போது மாத்திரம் எதற்காக அதில் அதீத ஆர்வம் காட்டுகிறார்கள்? ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கான அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு அளிப்பதற்கு நிபந்தனையாக தேர்தல் முறை மாற்றத்துக்கான திருத்தத்தையும் ஏககாலத்தில் நிறைவேற்ற வேண்டுமென்று ஏன் அடம்பிடிக்கிறார்கள்? இவர்களை கட்டுப்படுத்த முடியாதவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கிறாரா? அல்லது தனது அதிகாரங்கள் குறைப்புச் செய்யப்படுவதை விரும்பாத அவர் தனது கட்சியினரைக் கொண்டு இத்தகைய உடனடி நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை நிபந்தனையாக முன்வைக்கச் செய்கிறாரா?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அல்லது ஜனாதிபதியின் அதிகாரங்களில் குறைப்புச் செய்வதற்கு எதிராக இன்று பெரும்முட்டுக்கட்டையாக இருப்பது அந்த ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியல்ல, மாறாக அதை ஆரம்பம் முதலிருந்து எதிர்த்து வந்த சுதந்திரக்கட்சியே. உண்மையில் இது ஒரு விசித்திரமான அரசியல் கோலம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனதா கட்சியின் வழியில் ஆம் ஆத்மி கட்சி

இயக்கங்கள் தங்களை அரசியல் கட்சிகளாக மாற்றிக்கொள்ளும்போது அவை தங்களின் மூலமுதல் வடிவத்தை இழந்துவிடுகின்றன. கூட்டுத் தலைமைத்துவ பண்பு பின்தள்ளப்பட்டு தனிமனிதர் தன்னை முனைப்புறுத்துகின்ற போக்கு வந்துவிடுகிறது. அதிகாரம் ஒருவரின் கையில் குவிக்கப்பட்டு விடுகிறது. மெய்யாகவே தலைமைத்துவம் என்பது 'தனிமனிதர் ஆட்சி' என்ற அர்த்தத்தைப் பெற்றுவிடுகிறது. அந்த தனிமனிதர் ஆட்சியே கட்சியின் பெயருடன் ஒன்றித்து விடுகிறது.

ஆனால், ஆம் ஆத்மிகட்சி மக்களின் அபிலாசைகளின் ஒரு உற்பத்தியாக இருந்த காரணத்தினால் அது வித்தியாசமான முறையில் செயற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது.



பூஷண் - யாதவ்



குல்திப் நாயர்

ஆம் ஆத்மி கட்சியின் பண்புகள் முதலமைச்சர் கெஜ்ரிவால் சமத்துவமானவர்களின் ஒரு தலைவராகவே நடந்து கொள்வதேயே வேண்டி நின்றன. கெஜ்ரிவால் தன்னிடமே அதிகாரங்களை குவித்து வைப்பதில் நாட்டம் காட்டுவதில் தான் தவறு இருக்கிறது

நன்கு ஆழமாக வேரூன்றி நிலைபெற்றுவிட்ட காங்கிரஸ் மற்றுப் பாரதிய ஜனதா போன்ற அரசியல் கட்சிகள் பழைய தளபாடத்தின் பகுதி போன்று மாறிவிட்டதால் முற்றிலும் ஊக்கமிழந்தவையாகிவிட்டன. அதே திசையிலேயே ஆம் ஆத்மி கட்சியும் போவதைக் காணும்போது மக்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதாக, தங்களுக்குத் துரோகமிழைக்கப் பட்டுவிட்டதாக உணருகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். ஏனென்றால், ஆம் ஆத்மி அரசியலுக்கு புதியதொரு சிந்தனைப் போக்கை, வெளிப்படையானதும் தூய்மையானதுமான புதியதொரு அணுகுமுறையை அறிமுகப்படுத்து மென்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, ஆம் ஆத்மி கட்சியையும் தனிநபர் வழி பாடு ஆக்கிரமித்துக் கொண்டுவிட் டது. டில்லி தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்ற அக்கட்சிக்கு தலைமைதாங்குவதற்கு அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவு செய்யப்பட்ட தால் முக்கியமான இடத்தை அவரே ஆக்கிரமிக்க வேண்டியதாயிற்று. எனி னும், ஆம் ஆத்மியின் பண்புகள் அவர் சமத்துவமானவர்களின் ஒரு தலைவராக நடந்துகொள்வதை வேண்டி நின்றன. இந்த இடத்தில் தான் தவறு இருக்கிறது. கெஜ்ரிவால் தன்னிடமே அதிகாரத்தை குவித்து வைப்பதில் நாட்டம் காட்டுகிறார்.

அதுமாத்திரமல்ல, கட்சியின் இணை ஸ்தாபகர்களில் இருவரான யோகேந்திர யாதவையும் பிரசாந்த் பூஷணையும் கொள்கைவகுக்கும் அதியுச்ச அமைப்பான தேசிய நிறை வேற்றுக்குழுவில் இருந்து வெளியேற் றுவதற்கு பின்னணியில் நின்று கெஜ்ரி வால் செயற்பட்டிருக்கிறார். கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழுவில் கெஜ் ரிவாலுக்கு பெரும்பான்மை உறுப்பி னர்களின் ஆதரவு இருக்கிறது என்ப தற்காக, அவரே கட்சியின் ஏகபேச்சாளர் என்று அர்த்தமாகிவி டாது. பலப்பரீட்சை என்று பார்க்கும் போது, யாதவையும் பூஷணையும் நிறைவேற்றுக்குழுவில் இருந்து வெளியேற்றுவதற்கான தீர்மானத்துக் குக் கூட 11-8 என்ற அடிப்படையில் பிளவுபட்ட தீர்ப்பே கெஜ்ரிவாலுக்குக் கிடைத்திருக்கிறது என்பது முக்கியமா கக் கவனிக்கப்படவேண்டிய ஒரு அம் சமாகும்.

தினமும் புதிய தகவல்கள் பகிரங்கத் துக்கு வந்து கொண்டிருக்கின்றன. தனது செயற்பாட்டுப் பாணியை விமர்சிக்கின்றவர்களை ஆம் ஆத்மி கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு கெஜ்ரிவால் மறைமுகமாகத் திட்ட மிட்டு செயற்பட்டிருக்கின்றார் என் பது ஒரு தகவல். தன்னை விமர்சிப்ப வர்களை ஒடுக்குவதற்கு டில்லியின் முதலமைச்சர் என்ற உத்தியோகபூர்வ அந்தஸ்தை அவர் பயன்படுத்துகிறார் என்பது இரண்டாவது தகவல். இது வெல்லாம் உண்மையல்ல என்றும் ஆம் ஆத்மி கட்சி உறுதியளித்த உட் கட்சி ஜனநாயகம் பழுதுபடாமல் அப் படியே இருக்கிறது என்றும் நான் நம்பு



ஜெயபிரகாஷ் நாராயண்

கிறேன். ஆனால், செயற்படுகின்ற முறை மனக்குழப்பத்தைத் தருகிறது.

ஆம் ஆத்மி கட்சியின் உள்ளக லோக்பால் (குறைகேள் அதிகாரி) பத வியை முன்னாள் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ராமதாஸ் வகித்துவரு கிறார். கட்சி இயங்குகின்ற முறை தொடர்பில் தனது அதிருப்தியை அவ ரும் வெளிப்படுத்தியிருக்கிறார். தன் னால் எதையுமே செய்ய இயலாமல் இருப்பதையும் அவர் கூறியிருக்கி றார். தனது தோல்வியை அவர் ஏற் றுக்கொள்கின்றாரில்லை, ஆனால் விசாரணையொன்றை மேற்கொள்வ தற்கு குழுவொன்றை நியமித்திருக்கி றார் என்பதை அறியும் போது உற்சாக மாக இருக்கிறது. கட்சியை ஒரு தடவை உலுக்குவதற்கு அவர் வெளி யேறப் போவதாக அச்சுறுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந் தால், கெஜ்ரிவால் செயற்படுகின்ற முறை ஆரோக்கியமானதல்ல என் பதை புரிய வைத்திருக்க முடியும்.

ஊழலுக்கு எதிராக அண்ணா ஹசாரே முன்னெடுத்த இயக்கத்தின் ஒரு குழந்தையே ஆம் ஆத்மி கட்சி. உயர்மட்டங்களில் நிலவுகின்ற ஊழலை ஒழிப்பதற்கு மத்தியில் லோக்பாலை நியமிக்கும் பணியை ஆம் ஆத்மி கட்சியை தங்கள் கட்டுப் பாட்டில் வைத்திருப்போர் பூர்த்தி செய்வதை உறுதிசெய்யும் பொறுப்பை ஏன் அண்ணா ஹசாரே தனக்குரியதாக்கிக் கொள்ளவில்லை. பதிலாக, அவர் தனது பொறுப்பிலி ருந்து விலகி ஓடி தனது தோல்வியை, நில கையகப்படுத்தல் சட்ட மூலத்து க்கு எதிரான இயக்கமொன்றின் பின் னால் மறைத்துக்கொண்டார்.

தனது சொல்லுக்கு ஆம் ஆத்மியில் உள்ளவர்கள் மதிப்புத் தரமாட்டார்கள் என்று அண்ணா ஹசாரே விளங்கிக் கொண்டிருக்கிறார் போலும். இவ்வா றுதான் ஜெயபிரகாஷ் நாராயணும் ஜெ.பி. அன்று உணர்ந்தார். அவர் தோற்றுவித்த ஜனதாக் கட்சி மொரார்ஜி தேசாயைப் பிரதமராக


மொரார்ஜி தேசாய்

நியமித்தது. அவரின் சொல்லை மொரார்ஜி கேட்கவில்லை என்பதற் காக அவர் அரசியல் களத்திலிருந்து வெளியேறியிருக்கக்கூடாது. தனது இயக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட மொரார்ஜியுடன் அவர் பிரச்சினை கிளப்பி விவாதித்திருக்க வேண்டும்.

ஜெ.பி.இன கட்டளைப்படியே மக் கள் ஜனதா கட்சிக்கு வாக்களித்தார் கள். இயக்கத்தின் இலட்சியங்களுக்கு இசைவான முறையில் மத்திய அர சாங்கம் செயற்படுவதை உறுதிப்ப டுத்த அவர் தலையிடவேண்டுமென்று மக்கள் எதிர்பார்த்தார்கள். இதை அவ ரிடமே நான் நேரடியாகக் கூறினேன். அது எனக்கு நல்ல ஞாபகம். நான் கூறியதை ஜெ.பி. மறுதலிக்கவில்லை. ஆனால், மீண்டும் மக்கள் மத்தியில்

*(43ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை மெயில்

முத்தையா காசிநாதன்

# ஜெ- சொத்துக் குவிப்பு வழக்கில் திடீர் திருப்பம்?



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு திடீரென்று பரபரப்பாகியிருக்கிறது. பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நான்கு வருட சிறைத் தண்டனை யும், நூறு கோடி ரூபா அபராதமும் விதித்து வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர் த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை கர் நாடக உயர்நீதிமன்ற சிறப்பு நீதிபதி குமாரசாமி விசாரித்து முடித்து விட்டார். மூன்று மாதங்க ளுக்குள் வழக்கை விசாரித்து முடிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் ஆணையிட்டிருந்ததால் ஜெயலலிதா தரப்போ அல்லது தி.மு.க. தர ப்போ, அரசு தரப்போ கேட்ட எந்த அவகாசத்தையும் நீதிபதி குமாரசாமி கொடுக்க வில்லை. விசாரணை முடி ந்து, தீர்ப்புத் திகதி கொடுக்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்டது. தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் அரசு சிறப்பு வழக்கறிஞராக மேல்முறையீட்டு வழக்கிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவானி சிங் ஆஜராவது தவறு என்று போடப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்ததால் கர்நாடக உயர்நீதிமன்றத் தீர்ப்பு தள்ளி வைக்கப்பட்டது.

எந்த நேரத்திலும் தீர்ப்பு வெளியிடப்படலாம் என்று இருந்த நிலையில், எதிர்பாராத விதமாக உச்சநீதிமன்றம் கர்நாடக உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுவின் மீது ஏப்ரல் 15 வரை தீர்ப்பு வழங்க தடையுத்தரவு போட்டது. தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் அரசு சிறப்பு வழக்கறிஞர் பவானிசிங் மேல்முறையீட்டு வழக்கிலும் ஆஜராக தமிழக அரசு நியமித்தது செல்லாது என்று வழக்கை தாக்கல் செய்த உடனேயே பவானி சிங் வழக்கில் ஆஜராகி வாதாடுவதற்கு தடை கேட்டார். ஆனால் உச்சநீதிமன்றம் இடைக்காலத்தடை கொடுக்க மறுத்துவிட்டது. இதனால் அரசு தரப்பு வாதத்தை பவானிசிங்கே கர்நாடக உயர்நீதிமன்றத்தில் எடுத்து வைத்தார். இந்நிலையில் சில வாய்தாக்கள் முடிந்து உச்சநீதிமன்றத்தில் அன்பழகனின் மனு மீது இறுதி வாதம் நடைபெற்றது. அன்

அடங்கிய காலேஜியம் அடிப்படையில் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு முன்பு காங்கிரஸ் அரசு எடுத்த முடிவின் அடிப்படையில் காலேஜியம் அடிப்படையில் நீதிபதிகள் நியமிக்கப்படுவதற்கு விடை கொடுக்க முடிவு செய்தது. நீதிபதிகள் வழக்கில் தீர்ப்பு வழங்க வேண்டுமே தவிர நீதிபதி

வழக்குத் தொடர்ந்தார்கள். நீதித்துறையின் சுதந்திரத்தில் குறுக்கிடும் செயல் இது என்பது அவர்கள் தரப்பு வாதம். இந்த வழக்கு முடியும்வரை தேசிய நீதித்துறை நியமன ஆணையத்திற்கு தடையுத்தரவும் கேட்டார்கள். அந்த வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்றம் இதை அரசியல் சட்டசாசன அமர்வு விசாரிக்க வேண்டும். என்று தள்ளி வைத்தது.

இந்தச் சூழ்நிலையில் ஏப்ரல் 13 ஆம் திகதி தேசிய நீதித்துறை நியமன



பவானி சிங்

ஆணையம் அமுலுக்கு வந்ததாக மத்திய அரசு அறிவித்தது. அதுபற்றிய அரசு அறிவிப்பு (Notification) வெளியிடப்பட்டது. ஏப்ரல் 13ஆம் திகதியுடன் நீதிபதிகள் அடங்கிய காலேஜியம் முறை ஒழிக்கப்பட்டு விட்டது. அதேபோல் உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் மற்றும் மாறுதல் விடயங்களில் அரசின் கை ஓங்குவதற்கான துவக்கமாக அமைந்தது. இந்த 13 மற்றும் 15 ஆகிய தேதிகளுக்கு இடையில் 12ஆம் திகதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல்.தத்து அடங்கிய காலேஜியம் கடைசியாக ஒரு மாறுதல் உத்தரவையும், சில நியமன உத்தரவுகளையும் போடுகிறது. அதில் சில கூடுதல் நீதிபதிகள் நிரந்தர நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். சில டிரான்ஸ்பர்கள் போடப்பட்டுள்ளன. இந்த டிரான்ஸ்பரில் கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த வகேலா ஒடிசா உயர்

**நான்கு வருட சிறைத்தண்டனையிலிருந்து விடுதலை பெற்றால் மாத்திரமே அண்ணா தி.மு.க.வின் முதலமைச்சர் வேட்பாளராக ஜெயலலிதா தேர்தல் களத்திற்கு வர முடியும். அதற்கு பாரதிய ஜனதாவின் ஆதரவு நிச்சயம் தேவை என்ற நிலை. இதுபோன்ற சூழலில் சொத்து குவிப்பு வழக்கில் பெருமளவு சட்டச்சிக்கல்கள் சூழ்ந்து கொண்டுள்ளன**

றைய தினம் காலையில் கூட அன்பழகனின் வழக்கறிஞர் அந்தி அர்ஜுனா தடை கேட்டார். கிடைக்கவில்லை. ஆனால் திடீரென்று மதியம் அன்பழகன் மனு மீதான வழக்கை தீர்ப்பிற்காக ஏப்ரல் 15 வரை ஒத்திவைத்த உச்சநீதிமன்றம், கர்நாடக உயர்நீதிமன்றம் ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு வழக்கில் அதுவரை தீர்ப்பு வழங்க தடை பிறப்பித்தது.

இப்படி இடைக்காலத்தடை வழங்கப்பட்ட பிறகு இன்னொரு அதிரடி மாற்றம் இந்த வழக்கில் நடைபெற்றுள்ளது. இதுவரை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள்

களே நீதிபதிகளை நியமித்துக் கொள்ளக் கூடாது என்பது மத்திய அரசின் வாதம். இதன் அடிப்படையில் தேசிய நீதித்துறை நியமன ஆணையம் உருவாக்க அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் மற்றும் மாறுதல்களில் அரசின் பங்களிப்பும் இருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த ஆணையத்தை எதிர்த்து மூத்த வழக்கறிஞர்கள் பாலி நரிமன் போன்றவர்கள் உச்சநீதிமன்றத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்ற தலைமை நீதிபதியாக அதிரடியாக மாற்றப்பட்டுள்ளார். அந்த மாறுதல்தான் இப்போது பெரும் விவகாரம் ஆகியிருக்கிறது.

இந்த மாற்றல் உத்தரவு வெளிவந்தவுடன் தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரிசா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவி கடந்த பெப்ரவரி மாதம் 2015இலிருந்து காலியாக இருக்கும் போது, திடீரென்று ஏன் ஞாயிற்றுக் கிழமை அன்று இந்த டிரான்ஸ்பர் போடப்பட்டது? தேசிய நீதித்துறை நியமனக் கமிஷனுக்கான அறிவிப்பு திங்கட்கிழமை அன்று வெளியிடப் படவுள்ள நிலையில் அதற்கு முதல் நாள் இந்த மாறுதலைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? நீதிபதிகள் நியமனத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர உருவாக்கப்பட்ட தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு ஐந்து நீதி பதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன்பு 15.4.2015 அன்று விசாரணைக்கு வருவதற்குள் ஏன் இந்த மாற்றல் உத்தரவு போடப்பட்டது? கர்நாடக உயர் நீதிமன்றத்தில் உள்ள சொத்துக் குவிப்பு வழக்கில் வாதாடிய அரசு சிறப்பு வழக்கறிஞர் நியமனம் செல்லாது என்று தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாவதற்கு முன்பும், அதே சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவருவதற்கு முன்பும் இப்படியொரு மாறுதல் செய்யப்பட்டுள்ளதை நாம் இந்த நேரத்தில் மறந்துவிடமுடியாது என்று சரமாரியான கேள்விகளைக் கேட்டு காரசாரமாக அறிக்கை விடுத்திருந்தார்.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் மாறுதலைக் கண்டித்துள்ள பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸும், 62 நீதிபதிகள் கொண்ட கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த வகேலாவை 26 நீதிபதிகளே உள்ள ஒடிசா மாநிலத்திற்கு தலைமை நீதிபதியாக மாற்றியது ஏன்? பெங்களூர் சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வெளிவரும் நிலையில் இந்த மாற்றம் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வகேலாவின் மாற்றல் உத்தரவை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்.

எதிர்பார்த்தபடி 15ஆம் திகதி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மதன் லோகூர் மற்றும் பானுமதி ஆகியோர் அன்பழகன் மனுவில் தீர்ப்பளித்தார்கள். உச்ச நீதிமன்ற நீதிபதி மதன்லோகூர் பவானி சிங் அரசு சிறப்பு வழக்கறிஞராக மேல்முறையீட்டு வழக்கில் ஆஜரானது குற்றவியல் நீதி வழங்கும் நடைமுறைக்கு எதிரானது.

செல்வாக்குள்ளவர்கள் இந்த நீதி வழங்கும் நடைமுறையை தங்களுக்கு சாதகமாக எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்கு ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு ஒரு நல்ல உதாரணம் என்று கூறி, பவானி சிங் ஹைகோர்ட்டில் ஆஜராகி வாதிட்டது செல்லாது. புதிய அரசு வழக்கறிஞரை நியமித்து மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். இந்தத் தீர்ப்பிற்கு எதிர் தீர்ப்பளித்துள்ள இன்னொரு உச்சநீதிமன்ற நீதிபதி பானுமதி, பவானிசிங் ஆஜராகி வாதிட்டத்தில் தவறு இல்லை என்று கூறியிருக்கிறார். ஒரே பெஞ்சில் உள்ள இரு நீதிபதிகள் ஆளுக்கொரு தீர்ப்பு வழங்கியதால், இப்போது பேராசிரியர் அன்பழகன் மனு மூன்று நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இனி அந்த அரசியல் சாசன அமர்வு விசாரித்து தீர்ப்பளித்த பிறகு தான் பெங்களூர் சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் கர்நாடக உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்க முடியும். என்ற நிலை இருந்தது ஆனால் ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட ஜாமின் ஏப்ரல் 18ஆம் திகதியுடன் முடிவடைய இருந்த நிலையில், இந்த ஸ்பிலிட் வெர்டிக்ட்டின் படி, ஜெயலலிதா உள்ளிட்டவர்களின் ஜாமினை நீடிக்க வேண்டிய சூழல் உருவாகியது.

அதனால்தான் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தத்து தலைமையில் உள்ள பெஞ்ச் 17ஆம் திகதி அந்த ஜாமின் நீடிப்பு வழங்கியது. ஜாமினை மே 12 ஆம் திகதிவரை நீடித்த உச்ச நீதிமன்றம் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி மேன்முறையீட்டு வழக்கின் தீர்ப்பை வழங்குவதற்கும் அதே திகதிவரை அவகாசம் வழங்கியுள்ளார்.

சொத்துக் குவிப்பு வழக்கை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி விசாரிக்கக்கூடாது என்று ஏற்கனவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் குடியரசுத் தலைவரிடம் புகார் செய்திருக்கிறார்கள். இப்போது கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மாற்றல் விவகாரமும் சர்ச்சையாகியிருக்கிறது. பவானி சிங் நியமனம் செல்லாது என்று அன்பழகன் தாக்கல் செய்த வழக்கிலும் ஸ்பிலிட் வெர்டிக்ட் வந்ததால், இப்போது மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏகப்பட்ட இடியாப்பச் சிக்கலில் சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டுத் தீர்ப்பு சிக்கிக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கில் தீர்ப்பு வெளிவருவதற்குள் இதில் பல விவகாரங்கள் அணிவகுத்து அரசியல் பண்ணும் என்றே தோன்றுகிறது!

இந்த ஒட்டுமொத்த வழக்கு விவகாரத்தில் இன்னொரு சுவாரஸ்யமான நிகழ்வும் அரங்கேறியிருக்கிறது. முன்பு தமிழக முன்னாள் முதல்வருக்கு எதிரான வருமான வரிவழக்கில் நாங்கள் சமாதானமாகப் போகிறோம் என்று ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்டு, அதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தது. அதன்படி 18 வருடங்கள் நிலுவையில் இருந்த வருமான வரி வழக்கு ரத்தானது. அந்த சமயம் பிரதமர் நரேந்திரமோடி வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தார்.

அதே போல் இப்போது சொத்துக் குவிப்பு மேல்முறையீடு வழக்கு தீர்ப்பிற்காக நிலுவையில் இருக்கும் கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வகேலா மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இப்போதும் பிரதமர் நரேந்திரமோடி வெளிநாட்டுப் பயணத்தில் இருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். பிரதமரின் வெளிநாட்டுப் பயணத் திற்கும், இந்த நிகழ்வுகளுக்கும் தொடர்பு இருக்கிறதோ இல்லையோ, வரப்போ கின்ற 2016 சட்டமன்றத் தேர்தலுக்கும் இந்த நிகழ்வுகளுக் கும் தொடர்பு இருக்கி றது. ஏனென்றால் நான்கு வருட சிறை தண்டனையிலிருந்து விடுதலை பெற்றால் மட்டுமே அ.தி.மு.க.வின் முதலமைச்சர் வேட்பாளராக ஜெயலலிதா தேர்தல் களத் திற்கு வர முடியும். அதற்கு பா.ஜ.க.வின் ஆதரவு நிச்சயம் தேவை என்ற நிலை இருக்கிறது. இதுபோன்ற சூழலில் சொத் துக் குவிப்பு வழக்கில் இவ்வளவு சட்டச் சிக்கல்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன.

2011 சட்டமன்றத் தேர்தலில் 2ஜி வழக்கு உச்சத்தில் இருந்த போதுதான் தி.மு.க.விடம் அதிக தொகுதிகளை மத்தி யில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி மிரட்டியே வாங்கியது. இதேமாதிரி 1980 வாக்கில் ஒருமுறை காங்கிரஸுக்கு நூற் றுக்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிக ளைக் கொடுத்து தி.மு.க. கூட்டணி வைத் ததும் இதுபோன்ற நெருக்கடியில்தான். அதே போன்றதொரு நெருக்கடியில் இருக்கும் அ.தி.மு.க. பா.ஜ.க.வின் மேலி டத் தலைமை கேட்கும் சட்டமன்றத் தொகுதிகளை 2016 சட்டமன்றத் தேர்த லில் விட்டுக் கொடுக்க வேண்டிய கட்டா யத்தில் இருக்கிறது.

அதனால்தான் நீதித்துறையில் நடை பெற்று வரும் இந்த அதிரடி மாற்றங்கள் குறித்து இதுவரை மாநில பா.ஜ.க. கருத்து எதுவும் சொல்லவில்லை. எந்த ஊழல் வழக்கிலும் முந்திக் கொண்டு கருத்துச் சொல்லும் பா.ஜ.க.வின் அகில இந்தியத் தலைவர்கள் கூட இதில் வாய் மூடி இருக் கிறார்கள். ஏன் இது மாதிரி டிரான்ஸ்பர் கள் வரும் போது பொங்கி எழும் பா.ஜ.க. இப்போது தன் ஆட்சியிலேயே நடக்கும் இந்த டிரான்ஸ்பர் குறித்து வாய் திறக்க வில்லை.

அனைத்து தேர்தல் கூட்டணிக்கு முன் பும் அரசியல் கூட்டணி துவங்கும் என்ப துதான் இந்த ஒட்டுமொத்த வியூகங்களில் இருக்கும் வெளிப்பாடு என்பதே அரசி யல் பார்வையாளர்களின் எண்ணவோட் டமாக இருக்கிறது. தமிழக அரசியல் களத் தின் வெவ்வேறு திசைகளில் தேர்தல் கூட்டணிக்காக பா.ஜ.க.வும், வழக்கு வெற்றிக்காக அ.தி.மு.க.வும் காத்திருக் கின்றன! ■

# பொலிஸ் என்கவுண்டரா, போலி என்கவுண்டரா?



ஏப்ரல் 7ஆம் திகதி திருப்பதி ஏழுமலையான் பார்வை யில் 20 தமிழர்கள் ஆந்திர பொலிஸால் சுட்டு வீழ்த் தப்பட்டுள்ளார்கள். தமிழக அரசியல் தலைவர்கள் மத்தி யில் கொந்தளிப்பை ஏற்படுத்திய இத்துப்பாக்கிச்சூடு தமிழ்நாட்டில் பல்வேறு போராட்டங்களு க்கு வித்திட் டுள்ளது. செம்மரம் கடத்தல் என்பது திருப்பதி வனப்பகுதி யில் நடக்கும் அன்றாட நிகழ்வுகள். இங்கு மரம் வெட்டுவ

**20 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணையோ அல்லது உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணையோ வந்தால்தான் நியாயம் வெளிச்சத்திற்கு வரும் என்பது மனித உரிமைகள் அமைப்புக ளின் கருத்து மாத்திரமல்ல, தமிழக மக்க ளின் கருத்தும் அதுவே.**

தற்கு திருவண்ணாமலை, வேலூர், கிருஷ்ணகிரி போன்ற தமிழகத்தின் எல்லையோர மாவட்டங்களில் இருந்து தமி ழர்களை கூலித் தொழிலாளிகளாக செம்மரக் கடத்தலில் ஈடுபடுவோர் அழைத்துச் செல்கிறார்கள். செம்மரக் கடத் தல் செய்யும் முதலைகள் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் கள். அவற்றை வெட்டுவதற்கு பயன்படும் கூலிகள் மட்டும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இருமாநில காவல்துறையி னரும் மரம் வெட்டும் கூலித் தொழிலாளர்களை கட்டுப் படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். மூவாயி ரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை சிறைபிடித்து வைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துள்ளது ஆந்திர மாநில காவல்துறை. ஆனால் தமிழகத்தின் சார்பில் இந்த மூன்று மாவட்டங்களில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சீர் செய்ய முடியாததால் ஏழைக் கூலித் தொழிலாளிகள் இந்த மரம் வெட்டும் தொழிலுக்குச் சென்று விடுகிறார்கள்.

அப்படிச் சென்றவர்களில் 20 பேர்தான் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். பொலிஸ் என்கவுண்டரா அல்லது போலி என்கவுண்டரா என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது. ஏப்ரல் 13ஆம் திகதியன்று தேசிய மனித உரிமை ஆணையத்தின் முன்பு நடைபெற்ற விசாரணை தான் இந்த சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது. முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் தான் தற்போது இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவர். கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர் ஆந்திரா மற்றும் தமிழகம் உள்ளிட்ட அண்டை மாநிலப் பிரச்சினையாக இருக்கும் இந்த பொலிஸ் என்கவுண்டர் பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளார். ஆந்திர பொலிஸார் பிடியிலிருந்து தப்பித்த இருவர் இந்த ஆணையத்தின் முன்பு சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்களது ஸ்டேட்மென்டை பதிவு செய்துள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையம் சில முக்கிய உத்தரவுகளை என்கவுண்டர் விடயத்தில் பிறப்பித்துள்ளது.

முதலாவது உத்தரவு கமிஷன் முன்பு ஆஜராகி சாட்சியம் சொன்ன இருவருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதோடு, அவர்களை ஆணையத்தின் முன்பு ஆஜராக உதவிய சம்பந்தப்பட்ட கிராம பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. இரண்டாவதாக ஆந்திர மாநில டி.ஜி.பி.க்கும், தலைமை செயலாளருக்கும் சில உத்தரவுகளை ஆணையம் பிறப்பித்திருக்கிறது. அதில் முக்கியமாக 20 பேர் கொல்லப்பட்டது குறித்து மாஜிஸ்திரேட் தலைமையில் உடனடியாக விசாரணை நடத்த



வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து வருகின்ற 22ஆம் திகதிக்குள் அந்த பொலிஸ் என்கவுண்டரை நடத்திய சிறப்பு அதிரடிப் படை அதிகாரிகள் மற்றும் வனத்துறை அதிகாரிகளின் பெயர்களை ஆணையத்திடம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. தேசிய ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டும். கொல்லப்பட்டவர்களும், சிறப்பு அதிரடிப்படையினரும் பயன்படுத்திய ஆயுதங்கள் அனைத்தும் பாதுகாப்பில் வைக்க வேண்டும். இந்த என்கவுண்டர் தொடர்புடைய பொலிஸ் லாக்புக் பொலிஸ் ரிஜிஸ்டர் ஜிடி என்ட்ரீஸ் மற்றும் அது தொடர்பான டாக்குமென்டுகளையும் அழிக்கவோ, திருத்தவோ அல்லது அப்புறப்படுத்தவோ எந்த முயற்சியையும் ஆந்திர பொலிஸ் செய்யக் கூடாது. இப்படி தேசிய மனித உரிமை ஆணையம் கண்டிப்பான உத்தரவுகளைப் போட்டுள்ளது ஆந்திர மாநில காவல்துறை க்கு கிடுக்கிப்பிடி போட்டது போலிருக்கிறது.

தேசிய மனித உரிமை ஆணையத்தின் வெப்பத்தைத் தாங்க முடியாத ஆந்திர மாநில அரசு தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று டெல்லிக்குப் படையெடுத்தது. அதன் முதல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைச்சர் சந்திரபாபு நாயுடு சீனாவிற்கு சென்றிருக்கும் வேளையில், ஆந்திர மாநில தலைமைச் செயலாளர் கிருஷ்ணாராவ் இந்திய உள்துறை அமைச்சகச் செயலாளர் கோயலைச் சந்தித்து பொலிஸ் என்கவுண்டர் குறித்து விளக்கம் அளித்துள்ளார். இதற்கு முன்பே உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆந்திர அரசிடமிருந்து விளக்கம் கேட்டு, அதற்கு பதில் அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த என்கவுண்டர் குறித்து மத்திய குற்றப் புலனாய்வுத்துறையோ (சி.பி.ஐ.) அல்லது உச்சநீதிமன்றத்தின் நீதிபதியோ விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ள நிலையில், ஆந்திர தலைமைச் செயலாளரின் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் வழக்கமாக எதிர்ப்புக் குரலை வெகு வேகமாகக் கொடுக்கும் அ.தி.மு.க. அரசு இந்த முறை 20 தமிழக தொழிலாளிகள் கொல்லப்பட்டும், அடக்கி வாசிப்பதுதான் பலருக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நேரத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், விடுதலை சிறுத்தைகள் அமைப்புத் தலைவர் திருமாவளவன் ஆகிய மூவரும் கூட்டாக வருகின்ற 28ஆம் திகதி 20 தமிழர்கள் கொலைக்கு நீதி கேட்டுப் பேரணி நடத்துகிறார்கள். அந்தப் பேரணிக்கு 'தமிழர் நீதி பேரணி' என்று பெயர். சென்னையில் உள்ள ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த தமிழக ஆளுநர் ரோசைய்யாவிடம், வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று மனு கொடுக்கப் போகிறார்கள். என்கவுண்டர் விடயத்தில் இரு மாநில உறவுகள் பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கின்ற நேரத்தில் ஏப்ரல் 14 தமிழ்ப் புத்தாண்டு அன்று ஆளுநர் ரோசைய்யா முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு புத்தாண்டு வாழ்த்துக் கூறியிருக்கிறார். இரு மாநில உறவுகளைப் பலப்படுத்த ஆளுநர் எடுத்த நல்லிணக்க முயற்சி இது என்றாலும், உச்சநீதிமன்றம், தேசிய மனித உரிமைகள் ஆணையம், ஆளுநரிடம் கோரிக்கை, மத்திய உள்துறை அமைச்சர் அறிக்கை கேட்பு என்று பல்வேறு மட்டங்களிலும் பரபரப்பாகியுள்ள இந்த 20 பேர் கொல்லப்பட்ட வழக்கில் சி.பி.ஐ. விசாரணையோ அல்லது உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணையோ வந்தால்தான் நியாயம் வெளிச்சத்திற்கு வரும் என்பது மனித உரிமை அமைப்புகளின் கருத்து மட்டுமல்ல- தமிழக மக்களின் கருத்து அதுவே! ஆந்திர மாநில அரசும், மத்திய அரசும் இதில் எப்படி நடவடிக்கை எடுக்கப் போகின்றன என்பதை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றன தமிழக அரசியல் கட்சிகள்! ■

---

*(37ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

போவதற்கு தனது உடல்நிலை அனுமதிக்கவில்லை என்று விளக்கமளித்தார். ஜனதாக் கட்சிக்கு கெட்டபெயர் ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதற்காக மொரார்ஜியுடன் பிரச்சினை கிளப்ப தான் விரும்பவில்லை என்பதை ஒத்துக்கொள்வதற்கான இன்னொரு வழி இது.

இது ஜெ.பி.யின் பகுத்தறிவு மொரார்ஜி தனது சொல்லைக் கேட்க மாட்டார் என்பது ஜெ.பி.க்கு நன்கு தெரியும். மொரார்ஜியை அணுகிப் பேசுவதற்கு நான் யோசித்தேன். ஜெ.பி டில்லிக்கு வந்திருப்பார், ஆனால் அவரின் உடல் நிலை அதற்கு அனுமதிக்கவில்லை என்று நான் மொரார்ஜியிடம் கூறினேன். நிலைவரத்தை விளங்கிக்கொள்வதற்கு அவருக்கு போதுமான சாடைக்குறிப்புகளைக் கொடுத்துவிட்டேன் என்று நான் நினைத்துக்கொண்டேன். நான் தெரியப்படுத்த விரும்பியதை மொரார்ஜி விளங்கிக் கொண்டார். தான் போய் அவரைச் சந்திப்பேன் என்று ஜெ.பி. தவறாக நினைத்துவிட்டார் என்று ஆத்திரத்துடன் மொரார்ஜி கூறினார். நான் காந்தியைக் கூட போய்ச் சந்திக்கவில்லை. ஜெ.பி.காந்தியையும் விட மேலானவர் இல்லையே என்று மொரார்ஜி கூறினார். ஜனதாக் கட்சி உடைந்து நடைமுறையில் செத்துப் போனதில் ஆச்சரியப்பட ஒன்றுமிருக்கவில்லை.

தன்னை எதிர்ப்பவர்களை ஒழித்துக் கட்டுவதில் கெஜ்ரிவாலுக்கு இருக்கின்ற வெறித்தனத்தை அண்ணா ஹசாரேயினால் முடிவுக்குக் கொண்டு வர முடியும். நிலம் கையகப்படுத்தல் சட்ட மூலத்துக்கு எதிரான மறியல் போராட்டத்தில் அண்ணா ஹசாரேக்கு அருகில் கெஜ்ரிவால் அமர்ந்திருந்தார் என்பதற்காக, ஆம் ஆத்மி கட்சியினர் தன்னை விமர்சிப்பவர்களை வெளியேற்ற அவர் விரும்புகிறார் என்ற உண்மையை மறைத்துவிடக் கூடாது.

ஆம் ஆத்மி கட்சியை ஸ்தாபிப்பதில் முன்னணியில் நின்று செயற்பட்டவர்கள் யோகேந்திர யாதவும் பிரசாந்த் பூஷணும். முடிவுகளை எடுக்கும் கட்சியின் அமைப்புகளில் இருந்து அவர்கள் இருவரும் வெளியேற்றப்படுவதை கெஜ்ரிவால் உறுதி செய்து கொண்டார். யாதவுக்கும் பூஷணுக்கும் பெருமளவில் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள் என்பதை அவர் விளங்கிக் கொள்ளவில்லை. மற்றவர்களுக்கு இடம்கொடுக்காமல் ஜனதா கட்சியை நிர்மூலம் செய்த மொரார்ஜி தேசாயை உதாரணமாகப் பின்பற்றி கெஜ்ரிவால் செயற்படக்கூடாது.

ஜனதா கட்சியின் வழியிலேயே ஆம் ஆத்மிகட்சியும் போகிறது போன்றே தெரிகிறது. கெஜ்ரிவாலின் ஆதரவாளர்கள் அவரின் எதேச்சாதிகாரமான வழிமுறைகளைத் திருத்துவதற்குப் பதிலாக, அவரை விமர்சிப்பவர்களைப் பழிவாங்குவதில் தீவிரமாக இறங்கியிருப்பது கவலைக்குரிய விடயம். ஆம் ஆத்மி கட்சியின் பரீட்சார்த்தம் தோல்வி காணுமேயானால், காங்கிரஸுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் மாற்றான கட்சியொன்றை கட்டியெழுப்ப பல வருடங்கள் செல்லும் என்பதை கெஜ்ரிவால் தெரிந்து கொள்ள வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவாட் ஸரீப்



# ஈரானுடனான மேற்குலகின் அணுசக்தி உடன்படிக்கை


மிச்சேல் ஜான்சென்

சர்வதேச அரசியல்

ஈரான் அதன் அணுசக்தி திட்டங்கள் தொடர்பில் ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளுடன் (அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா) ஜேர்மனியுடன் (P5+1)இம்மாத ஆரம்பத்தில் அணுசக்தி வரைவு ஒப்பந்தமொன்றை எட்டியிருக்கிறது. 1979ஆம் ஆண்டு மன்னர் ஷா ஆட்சியதிகாரத்திலிருந்து தூக்கியெறியப்பட்டதையடுத்து மேற்காசியாவின் முக்கியமான வலிமையான நாடான ஈரானை தனிமைப்படுத்தி புறந்தள்ளி வைப்பதற்கு பிரதானமாக அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நீண்டதொரு செயன்முறையின் முதற்படியாக இந்த ஒப்பந்தத்தை வர்ணிக்க முடியும்.

அணுவாயுத பலத்தைப் பெறுவதிலிருந்து பின்வாங்குவதை ஈரான் உறுதி செய்யவும் அதற்குப் பதிலாக ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை வல்லரசு நாடுகள் வாபஸ் பெறவும் வழி செய்வதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். அடுத்த 15 வருடங்களுக்கு தனது செறிவூட்டப்பட்ட யூரேனியம் இருப்பை 10 ஆயிரம் கிலோவிலிருந்து 300 கிலோவாகக் குறைத்துக் கொள்வதற்கு ஈரான் சம்மதித்திருக்கிறது. ஆயுதம் தயாரிக்கும் அளவுக்கு எரிபொருளைச் செறிவூட்ட முடியாதவகையில் ஈரான் அணுமையங்களை மாற்றியமைப்பதில் சர்வதேச நிபுணர்குழு ஈடுபடுத்தப்படும். ஃபார்டோ செறிவூட்டு மையம் சாதாரண அணுமையமாக மாற்றியமைக்கப்படும். ஈரானிடமிருக்கும் யூரேனியத்தைச் செறிவூட்டி அணுகுண்டாக மாற்றுவதற்கு பயன்படுத்தும் சென்ட் ரி:ப்யூஸ்களின் எண்ணிக்கை மூன்றில் இரண்டு பங்கிற்கும் கீழ் குறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி

**அணுசக்தி உடன்படிக்கையொன்று மேற்காசிய அரசியல் அரங்கில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் அல்லது கொண்டுவரக்கூடிய விளைபயன்கள் எவையாக இருக்க முடியும்?**

கப்படும். அடுத்த 15 வருடங்களுக்கு யூரேனியத்தை 3.67 சதவீதத்துக்கு மேல் ஈரான் செறிவூட்ட முடியாது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் வார்த்தைகளில் கூறுவதானால் 'இது ஒரு நீண்ட கால ஒப்பந்தம். ஈரானின் அணு ஆயுதத் திட்டத்துக்குச் செல்லும் ஒவ்வொரு பாதையையும் இந்த ஒப்பந்தம் கண்காணிக்கும்.' 'ஜூன் 30 ஆம் திகதிக்குள் முழுமையான ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு இரு தரப்பினரும் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஈரானுக்கும் 6 வல்லரசுகளுக்கும் இடையே 18 மாதங்களாக நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருந்து ஈரானை ஏற்கனவே வெளியில் கொண்டுவந்துவிட்டன. அமெரிக்க-ஈரான் உறவுகள் அரசாங்கமட்டத்திலும் வெகுஜன மட்டத்திலும் கணிசமான அளவுக்கு மாற்றமடைந்துவிட்டன. சுவிட்சர்லாந்தின் லாசான் நகரில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி ஒருவாரத்துக்கும் அதிகமான காலம் தங்கியிருந்து கலந்தாலோசனைகளில் பங்கேற்க வேண்டியிருந்தமை அந்தப் பேச்சுவார்த்தைகளின் முக்கியத்துவத்தையும் சிக்கலான தன்மையை யும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையேயான 1978 காம்ப் டேவிட் உடன்படிக்கைக்குப் பிறகு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஒருவர் ஒரேயிடத்தில் தங்கியிருந்து நீண்டநாட்கள் நடத்தியிருக்கக்கூடிய முதல் பேச்சுவார்த்தை என்று லாசான் பேச்சுவார்த்தையை இராஜதந்திரிகளும் அவதானிகளும் வர்ணிக்கிறார்கள். இந்த அணுசக்தி வரைவு ஒப்பந்தம் பாராக் ஒபாமாவுக்கும் ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரோஹானிக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வெளியுறவுக் கொள்கை வெற்றியாக மாற முடியுமென்றும் கூறப்படுகிறது. சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உறவுகள் வளருவதற்கு வழிவகுத்த நிக்சன்- மா ஓ சந்திப்புடன் கூட தற்போதைய சூழ்நிலையை சில அவதானிகள் ஒப்பிடுவதையும் காணமுடிகிறது.

ஈரானின் தற்போதைய அரசாங்கம் அமெரிக்காவை ஒரு நிரந்தர எதிரியாகப் பார்க்கவில்லை. அத்துடன் பெரும்பாலான ஈரானியர்கள் அமெரிக்காவை 'பெரிய சாத்தானாக' பார்க்கவில்லை. தெஹ்ரானுடன் விவகாரங்களைக் கையாள ஒபாமா நிருவாகம் தயாராயிருக்கிறது. அணுவாயுதப் பரம்பல் தடுப்பு உடன்படிக்கையில் (Nuclear Non- proliferation Treaty) கைச்சாத்திட்ட ஒரு நாடான ஈரான் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாத அணுவாயுத நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வடகொரியா ஆகியவற்றுடன் இணைந்துவிடாமல் இருப்பதை உறுதிசெய்யக்கூடிய விரிவான ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டுமென்று 59 சதவீதமான அமெரிக்கர்கள் விரும்புகிறார்கள்.

ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவுடனான ஈரானின் உறவுகள் மேம்பாடடையக்கூடிய சூழ்நிலைகள் தோன்றியிருக்கின்ற அதேவேளை, பிராந்தியத்தில் செல்வாக்கைச் செலுத்துவதில் தங்களுக்குப் போட்டியான நாடாக ஈரானைக் கருதும் சவூதி அரேபியாவும் வளைகுடாவில் உள்ள அதன் சில நேச நாடுகளும் பகைமையுணர்வுடன் தொடர்ந்தும் இருக்கக்கூடியதே சாத்தியம். எளிதில் மசிய வைக்க முடியாத எதிரியாக ஈரானைக் கருதும் இஸ்ரேல் எந்தவொரு ஒப்பந்தத்துக்கும் விரோதமானதாகவே தொடர்ந்து இருக்கும். அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட கடுமையான தடைகளில் இருந்து விடுபட்டு ஈரான் வெளிக்கிளம்புவதை சவூதி அரேபியாவும் இஸ்ரேலும் விரும்பப்போவதில்லை. அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிட்சர்லாந்தின் லாசான் நகரில் (2015 ஏப்ரில் 2) அணுசக்தி வரைவு உடன்படிக்கை எட்டப்பட்ட பின்னர் P5+1 நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஈரானிய வெளியுறவு அமைச்சர் மற்றும் ஐ.நா. இராஜதந்திரிகள்

வாறு ஈரான் வெளிக்கிளம்புவது பிராந்திய அரங்கிலும் உலக அரங்கிலும் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அதன் மதிப்பை தவிர்க்க முடியாத வகையில் மேம்படுத்தும். 8 கோடி மக்களைக் கொண்ட ஈரானை வர்த்தக உடன்படிக்கைகளை செய்து கொள்வதில் நாட்டமுள்ள உலக நிறுவனங்களும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் ஆதரவைப் பெற விரும்புகின்ற அரசாங்கங்களும் அரவணைக்கப் போவது நிச்சயம்.

இத்தகையதொரு துவக்கத்தை சவூதி அரேபியா வரவேற்கப்போவதில்லை என்கின்ற அதேவேளை, அதன் வளைகுடா நேசநாடுகள், குறிப்பாக ஐக்கிய அரபு இராச்சியம் சர்வதேச சமூகத்தில் ஈரான் பெறக்கூடிய ஆதரவின் விளைவாகத் தோற்றுவிக்கப்படக்கூடிய நிதித்துறை மற்றும் வர்த்தக வாய்ப்புகளை வரவேற்பது சாத்தியமே. ஈரானுக்கும் மேற்குலகிற்கும் இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்தக்கூடிய ஒரு தனித்துவமான நிலையில் ஐக்கிய அரபு இராச்சியம் இருப்பதாக டுபாயை மையமாகக் கொண்டு செயற்படும் ஈரானிய- கனடிய ஆலோசகர் அலி போர் ஹானி தெரிவித்திருக்கிறார்.

லாசான் நகரில் மேற்குலக நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே அணுசக்தி வரைவு ஒப்பந்தம் எட்டப்பட்டுவிட்டதாக ஏப்ரில் 2 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட உடனடியாகவே தலைநகர் தெஹ்ரானிலும் நாட்டின் ஏனைய முக்கிய நகரங்களிலும் வீதிகளில் இறங்கி ஈரானியர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டார்கள். அத்தகைய கொண்டாட்டங்களுக்கு இரு காரணங்களைக் கூற முடியும். ஒன்று அணுவாயுத பரம்பல் தடுப்பு உடன்படிக்கையின் ஏற்பாடுகளில் கூறப்பட்டிருப்பதைப் போன்று அணுத்திட்டமொன்றுக்கான ஈரானின் உரிமையை அணுசக்தி வரைவு ஒப்பந்தம் மதிக்கிறது. இரண்டாவது, ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியை 59 சதவீதத்தால் குறைத்து, நாட்டின் பொருளாதாரத்தை 20 சதவீதத்தால் குறுக்கிய தடைகள் அகற்றப்படுவதற்கு ஒப்பந்தம் வகை செய்கிறது. மேற்குலக நாடுகள் வகித்த தடைகாரணமாக இலட்சக்கணக்கான ஈரானியர்கள் தங்களது கண்ணியமான வாழ்க்கைத் தரத்தை இழந்தார்கள். நோய்வாயுற்றவர்கள் அத்தியாவசிய மருந்துவகைகள் கிடைக்காமல் அவதிப்பட்டார்கள்.

உள்நாட்டு நிலவரத்தைப் பொறுத்த வரை இரட்டை இலக்க பணவீக்கத்தினாலும் தீவிரமடைந்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் பீடிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் குடியரசுக் காவலர் படையிலும் பாராளுமன்றத்திலும் இருக்கும் கடும் போக்காளர்களுடனான அதிகாரச் சண்டையில் ஜனாதிபதி ரோஹானியைச் சுற்றியிருக்கும் நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதில் நாட்டமுடையவர்களின் கைகள் வலுப்படக்கூடியதாக இருக்கும். வெளிநாட்டு வங்கிகளில் இருந்து விடுவிக்கப்படக்கூடிய 10 ஆயிரம் கோடி டொலர்களில் இருந்தும் நிதித்தடை விதிப்புகளினால் முடக்கப்பட்டிருக்கும் எண்ணெய்க்கான கொடுப்பனவுகளுக்காக இந்தியாவிடமிருந்து வரக்கூடிய 900 கோடி டொலர்கள் மற்றும் சீனாவிடமிருந்து வரக்கூடிய 2500 கோடி டொலர்கள் மூலமாக விரைவாக பெருமளவு பணத்தை ஈரான் எதிர்பார்க்கிறது. இந்தப் பணத்தின் கணிசமான பகுதியை ஈரானின் குன்றிய அபிவிருத்தி கொண்ட எண்ணெய்த் துறையில் முதலீடு செய்யக்கூடியதாக இருக்கும். பல்தேசிய கம்பனிகள் ஒப்பந்தங்களைப் பூர்த்தி செய்ய ஆவலுடன் காத்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான முன்னேற்றம்

தினமொன்றுக்கு சுமார் 10 இலட்சம் பீப்பாய்கள் எண்ணெயை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகளையும் ஈரானினால் ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும். கிணறுகளில் இருந்து பெறப்பட்டு கப்பல்களில் ஏற்றப்பட்ட நிலையில் ஈரானின் பிரதான வாடிக்கைக்கார நாடுகளான இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்கு அனுப்பப்படுவதற்கான சமிக்ஞைக்காக அதிகாரிகள் காத்திருக்கிறார்கள். ஆனால், இதுவிடயத்தில் சில தாமதங்கள் ஏற்படக்கூடும், ஏனென்றால் நிதித்தடைவிதிப்புகள் முடிவுக்கு வருவதற்கு சிலமாதங்கள் செல்லலாம். கொடுப்பனவுகளைச் செய்வதிலிருந்து வங்கிகளும் சரக்குகளைக் காப்புறுதி செய்வதிலிருந்து காப்புறுதிக் கம்பனிகளும் தடுக்கப்பட்டிருப்பதால் ஏற்றுமதிகள் கடுமையாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன.

அணுசக்தி வரைவு ஒப்பந்தத்தை பாரியதொரு முன்னேற்றம் என்று பாராட்டியிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, நிறைவேற்று அதிகார நடவடிக்கை ஊடாக நிதித்துறை தடைவிதிப்புகளை இடைநிறுத்துவதாக உறுதியளித்திருக்கிறார். ஆனால், அமெரிக்க காங்கிரஸ் முறைப்படி தடைகளை நீக்காதபட்சத்தில் தடைகளை மீறிச் செயற்படுவோருக்கான தண்டனைகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். காங்கிரஸின் இரு சபைகளையும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் குடியரசுக் கட்சிக்காரர்கள் எந்தவொரு ஒப்பந்தத்தையும் எதிர்ப்பது மாத்திரமல்ல செயலற்றதாக்கப் போவதாகவும் அச்சுறுத்தியிருக்கிறார்கள்.

அணுத்திட்டம் தொடர்பான உன்படிக்கையொன்று மேற்காசிய அரசியல் அரங்கில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களோ அல்லது கொண்டுவரக் கூடிய விளைபயன்களோ எவையாக இருக்க முடியும்? தடைவிதிப்புகளை எதிர்நோக்க வேண்டியிராத - அரசியல் ரீதியில் முற்றுகைக்குள்ளாகவேண்டியிராத ஒரு ஈரான், பிராந்திய விவகாரங்களில் வலுச்சண்டைக்குப் போகும் வகையிலான நிலைப்பாடொன்றைக் கடைப்பிடிப்பதற்கான சாத்தியமில்லை. அதனால் ஷியா-சுன்னி மதப் பிரிவுகளிடையேயான போட்டாபோட்டிகள் குறைவடைய வழி பிறக்கும். சிரியா, ஈரான், லெபனான் மற்றும் அண்மையில் யேமனில் ஷியா ஈரானின் தலையீடு குறித்து அச்சம் கொண்டுள்ள சுன்னி முஸ்லிம் அயல்நாடுகளுடனான பதற்றங்களைத் தணிக்கக்கூடிய பேரம் பேசல்களை ஊக்குவிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

யேமனில் ஷியா ஹௌதிகளுக்கும் சவூதி அரேபியாவின் ஆதரவுடைய ஜனாதிபதி அப்துல் ராபு மன்சூர் ஹாடிக்கும் இடையே அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கான அழைப்பை உடனடியாகவிடுத்து தனது ஆதரவுடனான ஈராக்கிய ஷியா திரட்டல்படைகள் துஷ்பிரயோகங்களில் ஈடுபடாதிருப்பதையும் இஸ்லாமிய அரசுப் போராளிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சுன்னி முஸ்லிம்களைக் கொலை செய்து இனச் சுத்திகரிப்புச் செய்யாதிருப்பதையும் உறுதிசெய்வதன் மூலமாக ஈரான் சுன்னி முஸ்லிம் அயல் நாடுகளின் அக்கறைகளைக் கவனிக்க முடியும்.

ஈராக்கிலும் சிரியாவிலும் இஸ்லாமிய அரசுக்கும் ஜாபாத் அல்-நுஸ்ரா இயக்கத்தவர்களுக்கும் எதிரான ஆகாயமார்க்கத் தாக்குதல்களிலும் தரைமார்க்கத் தாக்குதல்களிலும் தெஹ்ரானும் வாஷிங்டனும் ஒருங்கிணைந்து செயற்படுவதையும் லாசான் ஒப்பந்தத்தினால் சுலபமாக்கக்கூடியதாக இருக்கும். லாசான் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு முன்னதாகவே, ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான சண்டையில் ஒருங்கிணைந்து செயற்பட்டதன் மூலமாக ஈரானும் அமெரிக்காவும் விருப்பம் இருந்தால் சேர்ந்து செயற்படுவதற்கான வழியொன்று திறக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. ■



தெஹ்ரான் நகரில் குதூகலிக்கும் ஈரானியர்கள்

*(மிச்சேல் ஜான்சென் ஐரிஷ் டைம்ஸ் பத்திரிகையின் மத்திய கிழக்கு நிருபர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு போரொன்றின் முன்னரங்க நிலையாக யேமன் எவ்வாறு மாறியது?



முஹமட் பாஸி



ஹௌதி குழுவின் ஆதரவாளர்கள்

யேமனில் ஹௌதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி அரேபியா மூன்றுவாரங்களுக்கும் அதிகமான காலமாக போரை நடத்தி வருகிறது. மார்ச் 26 ஆம் திகதி காலை தொடங்கிய இந்தப் போரின் மூலமாக சவூதி தலைவர்கள் தங்களது தெற்கு அயல் நாட்டில் தலையீடு செய்கின்றதும் அதன்மீது செல்வாக்குச் செலுத்துகின்றதுமான நீண்டதொரு வரலாற்றின் புதிய அத்தியாயத்தைத் திறந்திருக்கிறார்கள்.

1930களில் சவூதி அரேபியா ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதன் தலைவர்கள் யேமனில் தங்களுடன் நட்பைப் பேணுகின்ற ஒரு அரசாங்கமே அதிகாரத்தில் இருப்பதையும் சவூதியின் நலன்களுக்கு அந்த அரசாங்கம் அச்சுறுத்தலைத் தோற்றுவிக்காதிருப்பதையும் உறுதி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார்கள். இதன் அர்த்தம் அவர்கள் யேமனின் உள்நாட்டு அரசியலில் தலையீடுகளைச் செய்து வந்தி ருக்கிறார்கள். வெகுஜன அரசியல் போராட்ட இயக்கங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்திருக்கிறார்கள். சவூதியில் வேலை செய்கி ன்ற யேமன் தொழிலாளர்களை தங்களுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்தியிருக்கிறார்கள். பழங்குடியினத் தலைவர்களை விலை கொடுத்து தங்களுக்கு சார்பானவர்களாகச் செயற்படவைத்திருந்தார்கள். இடைக்கிடை இராணுவ ரீதியில் தலையீடுகளையும் செய்து வந்திருக்கிறார்கள் என்பதேயாகும்.

இத்தடவை சவூதி அரேபியாவு க்கும் யேமனுக்கும் ஆபத்துக்கள் நிறைந்த சூழ்நிலை. ஒன்பது நாடுகளைக் கொண்ட கூட்டணியுடன் சேர்ந்து விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் அண்மைய மாதங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றியிருக்கும் ஹௌதிகளையும் யேமன் இராணுவத்தில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யேமன் தலைநகர் சானாவில் சவூதி போர் விமானங்களின்
தாக்குதலில் பலியானவர்களின் சடலங்களை புதைக்கும் மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சவூதி அரேபியா நேரடி இராணுவ தலையீட்டை செய்திருப்பதையடுத்து யேமன் இப்போது ஈரானுக்கு சவூதிக்கும் இடையிலான மறைமுகமான பிராந்திய யுத்தம் ஒன்றுக்குள் இழுக்கப்பட்டுள்ளது. இந்த மறைமுகயுத்தம்பிராந்தியத்திலுள்ள வேறு பல நாடுகளையும் அதன்பால் இழுத்துக்கொண்டிருக்கிறது.




அவர்களின் நேச அணிகளையும் விரட்டியடிப்பதற்காக யேமனின் கரையோரத்தை முற்றுகையிட்டிருப்பதாகவும் சவூதி தலைவர்கள் கூறுகிறார்கள். சவூதி அரேபியாவும் அதன் வளைகுடா அரபு நேச நாடுகளும் யேமன் ஜனாதி பதி அப்த்-ரபூ மன்சூர் ஹாடியை மீண்டும் ஆட்சியதிகா ரத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றன.

யேமன் நெருக்கடி மிகவும் சிக்கலானது. ஹாடிக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் சவூதி அரேபியாவி ன தும் வளைகுடா நாடுகளினதும் ஆதரவு இருக்கிறது. ஹௌதிகள், சைதிகள் என்று அழைக்கப்படும் ஷியா இஸ்லாமின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள். சவூதி அரேபி யாவினதும் ஏனைய சுன்னி அரபு நாடுகளினதும் பிராந்திய போட்டிநாடான ஷியா தலை மையிலான ஈரானின் நேசசக்திகளாக இந்த ஹௌதிகள் இருக்கிறார்கள். ஹௌதி களை ஈரானின் கையாட்கள் என்று சவூதி அரேபியா நாமகர ணம் சூட்டுகின்ற போதிலும், தெஹ்ரானிடமிருந்து அவர் கள் எந்தளவு ஆதரவைப் பெறுகின்றார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.



ஜனாதிபதி அப்த்-ரபூ மன்சூர் ஹாடி


முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சாலி

2011 அரபு மக்கள் கிளர்ச்சி யேமனுக் குப் பரவியதையடுத்து அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப்பட்ட நீண்டகாலச் சர்வாதி காரியான முன்னாள் ஜனாதிபதி அலி அப் துல்லா சாலியுடன் ஹௌதிகள் அணி சேர்ந்து நிற்கிறார் கள். முன்னர் சவூதியின் நேச அணியாக இருந்த சாலி, 2012 ஆம் ஆண்டு சவூதி ஆட்சியாளர்களின் மத்தியஸ் தத்தின் கீழ் செய்துகொள் ளப்பட்ட உடன்பாடு ஒன்றின் பிரகா ரம் ஹாடியினால் பதிலீடு செய்யப்பட்டார். ஆனால், சாலிக்கு இன்னமும் கூட, யேமன் பாதுகாப்புப் படைகளில் பெருமளவு பிரிவினர் மத்தியில் ஆதரவு இருக்கிறது. இந்தத் துருப்புக்களே ஹௌதிகள் தலைநகர் சானாவைக் கைப்பற்றுவதற்கும் அங்கிருந்து ஹாடியின் கொத்தளம் என்று வர்ணிக்கப்படும் ஏடனை நோக்கி தெற்கே நகருவதற்கும் உதவின.

சவூதி அரேபியா நேரடி இராணுவத் தலையீட்டைச் செய்திருப்பதையடுத்து யேமன் இப்போது ஈரானுக்கும் சவூதிக்கும் இடையிலான மறைமுகமான பிராந்திய யுத்த மொன்றிற்குள் இழுக்கப்பட்டிருக்கிறது. ஈராக், சிரியா, லெபனான், யே மன் மற்றும் பஹ்ரெயினில் தொடர்ச்சி யாக நடைபெற்று வருகின்ற இந்தச் சண்டைகளே 2003 ஆம் ஆண்டில் ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்த பிறகு மத்திய கிழக்கை வரையறுத்திருக்கின்றன. அரபுலகின் பாரம்பரிய அதிகார மையங்களான எகிப்து, சவூதி அரே பியா மற்றும் ஏனைய வளைகுடா நாடுகள் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான காலமாக ஈரானின் செல் வாக்கு அதிகரிப்பது பற்றி சினங்கொள்ளத் தொடங்கியி ருக்கின்றன. ஈரானின் அணுவாயுத ஆவல், ஈராக்கிய அர சாங்கத்தின் மீது ஈரான் செலுத்துகின்ற செல்வா க்கு, சிரியாவுடனான அதன் கூட்டு, ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் தீவிரவாதக் குழுக்களுக்கு அது வழங்குகின்ற ஆதரவு இவையெல்லாம் அரபுலகின் இந்தப் பாரம்பரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிகார மையங்களுக்கு அச்சத்தை யூட்டுகின்றன.

மறைமுக யுத்தம் பிராந்தியத்தில் உள்ள வேறுபல நாடுகளையும் அதன்பால் இழுத்துக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, சவூதி அரேபியாவையோ அல்லது ஏனைய வளைகுடா நாடுகளையோ போலன்றி, எகிப்தின் பாதுகாப்பு நலன்கள் யேமனினால் நேரடியாகப் பாதிப்புக்குள்ளாகவில்லை. ஆனால், எகிப்தின் இராணுவ ஆட்சியாளர்கள் இப்போது சவூதியினதும் அதன் வளைகுடா நேச நாடுகளினதும் நிதியுதவியில் பெரிதும் தங்கியிருக்கின்றனர். யேமனில் சவூதி தலைமையிலான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் ஆரம்பித்த சில மணித்தியாலங்களுக்குள் எகிப்திய ஜனாதிபதி அப்தெல் ஃபதாஹ்-அல்-சிசி அறிக்கையொன்றை வெளியிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. எகிப்தின் கடற்படையும் விமானப்படையும் யேமன் சண்டையில் விரைவில் இணைந்து கொள்ளும் என்றும் அவசியமானால் யேமனுக்குத் தரைப்படைகளை அனுப்புவதற்கும் எகிப்திய இராணுவம் தயாராக இருக்கிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஈரானையும் சவூதி அரேபியாவையும் பொறுத்தவரை, வெற்றிபெறுபவரே சகல பயன்களையும் அடைகின்ற சூழ்நிலைக்கு வழிவகுக்கக்கூடிய ஒரு முரண் நிலையாகவே அவற்றுக்கிடையிலான போட்டா போட்டியை நோக்குகின்றன; ஷியா முஸ்லிம்களான ஹிஸ்புல்லா இயக்கத்தின் கைகள் லெபனானில் ஓங்குமானால், லெபனானில் உள்ள சுன்னி முஸ்லிம்களும் அவர்களின் சவூதி போசகர்களும் ஈரானிடம் முதற்சுற்றில் தோல்வி கண்டவர்களாவார்கள். ஷியாக்கள் தலைமையிலான அரசாங்கம் ஈராக்கில் அதன் கட்டுப்பாட்டை வலுப்படுத்திக்கொள்ளுமானால், அது ஈரானுக்கு இன்னொரு சுற்று வெற்றியாக அமையும். அதனால், சவூதியின் ஆளும் மன்னர் குடும்பத்தவர்கள் யேமன், பஹ்ரெயின் மற்றும் சிரியாவிலும் ஈரானின் செல்வாக்கு எங்கெங்கு அதிகரிப்பதாக தாங்கள் அஞ்சுகிறார்களோ அங்கங்கெல்லாம் தங்களது நேச சக்திகளுக்கு ஆதரவளிக்க விரைந்து செல்கிறார்கள்.

யேமனின் நில அமைப்பும் பழங்குடியினரையும் பிராந்திய மற்றும் சமயப் பிரிவினர்களின் கூட்டணிகளையும் கொண்ட சிக்கலான வலையமைப்பும் எந்தவெளிநாட்டு ஆக்கிரமிப்பாளருக்கும் பெரும் நெருக்கடியைக் கொடுப்பவையாக இருந்து வந்திருக்கின்றன. ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுக்கு அனுகூலமான முறையில் யேமன் நிலைவரங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைப் பயன்படுத்துவதென்பது பெரும் சிரமமான காரியமாகும். கடந்தகால இராணுவ சாகசங்களின் போது சவூதி அரேபியாவும் எகிப்தும் கணிசமான இழப்புகளைச் சந்தித்தன.

பல நூற்றாண்டுகளாக ஒட்டோமன் சாம்ராச்சியத்தின் (தன்னாட்சியுரிமையுடைய) ஒரு மாகாணமாகவே யேமன் இருந்து வந்தது. முதலாவது உலகமகா யுத்தத்தின் முடிவில் அந்த சாம்ராச்சியம் வீழ்ச்சி கண்டதையடுத்து 1918இல் யேமன் ஒரு முடியாட்சி நாடாக சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது. சைதி பிரிவின் தலைவரான இமாம் யாஹ்யா அதன் முதல் ஆட்சியாளரானார். (சைதிகள் யேமனில் நீண்டகாலமாகவே ஒரு சிறுபான்மையினராகவே இருந்துவந்தார்கள். இன்று 2 கோடி 40 இலட்சம் மொத்த சனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினராக இருக்கிறார்கள்). 1920களிலும் 1930 களிலும் யாஹ்யா தனது ஆட்சியை வடக்கு யேமனில் உள்ள பழங்குடியினரின் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தினார். வடக்கு யேமனில் அப்போது வாழ்ந்துவந்தவர்கள் பெரும்பாலும் சுன்னிகளேயாவார்.

ஆனால், யேமனை தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நாடாகவே வைத்திருந்த யாஹ்யாவுக்கு வெளியில் நேச சக்திகள் என்று எவரும் இருக்கவில்லை. தனது ஆட்சிக்காலம் பூராகவும் அவர் சவூதி அரேபியாவிடமிருந்து நெருக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இப்ன் சவூத் நவீன சவூதி அரேபிய இராச்சியத்தை நிறுவிய பிறகு இரண்டு வருடங்கள் கழித்து 1934 ஆம் ஆண்டில் தனது தெற்கு அயல் நாடான யேமனுடன் ஒரு குறுகிய கால போரில் ஈடுபட்டார். 'வரலாற்று ரீதியான யேமன்' என்று யாஹ்யாவும் ஏனைய சைதிகளும் கருதிய பகுதியில் இருந்து அசீர், நாஜ்ரான் என்ற இருமாகாணங்களை சவூதி அரேபியர்கள் கைப்பற்றினார்கள். இதுவே செங்கடல் கரையோரமாக நிலப்பிராந்தியத் தகராறுக்கு வழிவகுத்தது. எல்லைப் பிரிப்பு தொடர்பான முரண்பாடு 2000 ஆண்டு வரை நீடித்தது.

யாஹ்யாவும் சைதிகளும் 1830 களில் இருந்து ஏடன்துறைமுக நகரிலும் அதனை அண்டியுள்ள நாட்டுப்புறங்களிலும் காலனியொன்றை நிறுவிய பிரிட்டிஷ்காரர்களுடனும் கூட தென்பகுதியில் சிறு சிறு சண்டைகளில் ஈடுபட்டிருந்தார்கள். 1948 ஆம் ஆண்டு யாஹ்யா இறந்த பிறகு ஆட்சிப் பொறுப்பையேற்ற அவரது மகன் இமாம் அஹ்மட் தனது இராச்சியத்தின் தனிமை நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தார். அவர் இராணுவ உதவிகளையும் அபிவிருத்திக்கான உதவிகளையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையில் சோவியத் யூனியனுடனும் சீனாவுடனும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக்கொண்டார். அவரின் இந்தச் செயல் சவூதி அரேபியாவின் ஆளும் முடியாட்சிக் குடும்பத்தவர்களுடன் புதிய பதற்றநிலை உருவாவதற்கு வழிவகுத்தது. தங்களது தெற்கு எல்லையில் கம்யூனிசத்தின் செல்வாக்கைக் கண்டு அவர்கள் அஞ்சினார்கள்.

1950 களிலும் 1960 களிலும் அரபுலகம் காலனித்துவ ஆட்சியின் தடங்களில் இருந்தும் தலைமுறை தலைமுறையாகத் தொடருகின்ற முடியாட்சிகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ள பெரும்பாடு பட்டுக்கொண்டிருந்தது. வசீகரம் கொண்ட கமால் அப்துல் நாசர் தலைமையிலான எகிப்திய இராணுவ அதிகாரிகள் குழுவொன்று பிரிட்டனின் ஆதரவு பெற்ற மன்னர் பாரூக்கை 1952 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து தூக்கியெறிந்தது. இது அரபு ஐக்கியம் பற்றிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கையையும் தூண்டிவிட்டது.

யேமன் உட்பட ஏனைய அரபு நாடுகளின் நிகழ்வுப் போக்குகளில் செல்வாக்கை செலுத்துவதற்காக நாசர் தனக்கிருந்த வெகுஜனக் கவர்ச்சியையும் வல்லமை பொருந்திய இராணுவத்தையும் கிளர்ச்சியூட்டும் பேச்சுக்களையும் பயன்படுத்தினார்.

(அவரின் உரைகள் அப்போது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டிருந்த ட்ரான்சிஸ்டர் வானொலியில் 'அரபுக்களின் குரல்' என்று அழைக்கப்பட்ட பிரபலமான நிகழ்ச்சியொன்றில் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது)

ஆனால், அரபு விடுதலை இயக்கங்கள்- துரோகத்தனமான அரசியலினாலும் படுகொலைகளினாலும்-மிகப்பெரிய ஏமாற்றத்திலேயே முடிந்து போயின.

1962 செப்டெம்பரில் யேமனின் அஹமட் மரணமடைந்த போது அவரின்மகன் இமாம் பத்ர் ஆட்சிப் பொறுப்பையேற்றார். ஆனால், ஒரு வாரத்துக்குள்ளாகவே இராணுவ அதிகாரிகளின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சதிப்புரட்சியொன்றில் அவர் தூக்கியெறியப்பட்டார். எகிப்தின் நாசரினால் எழுச்சியூட்டப்பட்ட அந்த இராணுவ அதிகாரிகள் யேமன் அரபுக் குடியரசைப் பிரகடனம் செய்தார்கள். அரச குடும்பம் சதிப்புரட்சியை எதிர்த்ததுடன் சவூதியின் முடியாட்சிக் குடும்பத்தவர்களிடம் ஆதரவை நாடியது. தங்களது அயல்நாட்டில் இராணுவத்தின் தலைமையிலான குடியரசு ஆட்சியொன்று வெற்றிகரமாகச் செயற்படுவதை சவூதி ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

யேமனின் புரட்சி விரைவாகவே

> யேமனின் நில அமைப்பும் பழங்குடியினரையும் பிராந்திய மற்றும் சமய பிரிவினர்களின் கூட்டணிகளையும் கொண்ட சிக்கலான வலையமைப்பும் எந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளருக்கும் பெரும் நெருக்கடியை கொடுப்பவையாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுக்கு அனுகூலமான முறையில் யேமன் நிலைவரங்களை பயன்படுத்துவது என்பது பெரும் சிரமமான காரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுப் போராக மாற்றமடைந்தது. எகிப்துக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான ஒரு மறைமுக யுத்தத்தின் களமாக யேமன் மாறியது. இதை 'முற்போக்கான' குடியரசு ஆட்சிகளுக்கும் 'பழமைவாத' முடியாட்சிகளுக்கும் இடையில் எதிர்கால அரபுலகத்துக்கான ஒரு போராட்டமாகவே பலரும் நோக்கினார்கள். புதிய இராணுவ ஆட்சிக்கு தனது முழுமையான ஆதரவை வழங்கத் தீர்மானித்த நாசர் யேமனுக்கு பெருவாரியான எகிப்தியத்துருப்புக்களை அனுப்பினார். 1963 ஆம் ஆண்டின் இறுதியில் யேமனில் 30 ஆயிரம் எகிப்தியப்படையினர் நிலைகொண்டிருந்தார்கள். 1965 ஆம் ஆண்டளவில் அந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட எகிப்திய இராணுவத்தின் அரைவாசியாக - 70 ஆயிரம் துருப்புகள்-அதிகரித்தது.

பழங்குடியின கெரில்லாக்களுடனான சண்டையில் எகிப்திய இராணுவம் மாட்டுப்படவேண்டியதாயிற்று. ஐந்து வருடகாலப் போரில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான எகிப்தியத் துருப்புகள் கொல்லப்பட்டார்கள். தலைநகர் சானாவுக்கு அப்பால் எகிப்தியர்களினால் முன்னேற முடியவில்லை. அரபுலகில் புரட்சியை ஊக்குவிக்க வேண்டுமென்ற உணர்ச்சி வேகம் நாசரின் கண்ணை மறைத்துவிட்டது. அவரின் வியட்நாமாக யேமன் மாறியதையே உலகம் கண்டது.



அதேவேளை, அரச குடும்பத்தவர்களைக் கொண்ட எதிரணிக்கு சவூதி அரேபியா நிதியுதவி செய்தது. ஆயுதங்களை வழங்கியதுடன், வெளிநாட்டு கூலிப் படையினரை சண்டைகளில் ஈடுபடுத்துவதற்கு சவூதியின் பணம் பயன்படுத்தப்பட்டது. ஆனால், நாசர் இழைத்த அதே தவறை சவூதி அரேபியர்கள் செய்யவில்லை. சண்டையிடுவதற்கு தங்களது சொந்தத் துருப்புகளை அவர்கள் ஆயிரக்கணக்கில் யேமனுக்கு அனுப்பவில்லை. இஸ்ரேலுடனான 1967 போரில் அரபுக்களுக்கு ஏற்பட்ட படுமோசமான தோல்வியையடுத்து யேமனில் இருந்து நாசர் எகிப்தியப்படைகளை முற்றாக வாபஸ் பெற்றுக்கொண்டார்.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த போது வட யேமன் ஒரு குடியரசாக தொடர்ந்தும் இருந்தது. முடியாட்சியை மீண்டும் நிலை நிறுத்த சவூதியினால் இயலாமற்போய்விட்டது. ஆனால், யேமன் அரசியலில் தொடர்ந்தும் செல்வாக்கைச் செலுத்த முடியாத வகையில் எகிப்து பெரும் தோல்வியைக் கண்டது. பிரிட்டிஷாரின் காலனியாதிக்கத்தில் இருந்த தென் மாகாணங்களில் 1967 பிற்பகுதியில் ஏடனைத் தலைநகராகக் கொண்டு மார்க்சிஸ்ட் அரசொன்று நிறுவப்பட்டது. உத்தியோகபூர்வமாக யேமன் ஜனநாயகக் குடியரசு என்று அறியப்பட்ட தென் யேமன் சோவியத் சார்பு நாடாக மாறிவிட்டது.

சோவியத் முகாமின் வீழ்ச்சிக்கு பிறகு 1990 மேயில் தென் யேமன் 1978 ஆம் ஆண்டிலிருந்து அலி அப்துல்லா சாலியின் ஆட்சியின் கீழ் இருந்த வடயேமனுடன் இணைந்து கொண்டது. வடயேமனுடன் தென் யேமனும் சேர்ந்த அரசு யேமன் குடியரசு என்று அழைக்கப்பட்டது. அந்த நேரத்தில் வடயேமன் சவூதி அரேபியாவின் உதவியிலும் சவூதி அரேபியாவில் பணியாற்றிய பல ஆயிரக்கணக்கான யேமன் தொழிலாளர்களிடமிருந்து வந்த கொடுப்பனவுகளிலுமே பெருமளவுக்குத் தங்கியிருந்தது. தென்யேமனுக்கு கிடைத்துவந்த சோவியத்தின் உதவியைச் சமநிலைப்படுத்துவதற்காகவே சவூதி அரேபியாவில் பணியாற்றிய பல ஆயிரக்கணக்கான யேமன் தொழிலாளர்களிடமிருந்துவந்த கொடுப்பனவுகளிலுமே பெருமளவுக்குத் தங்கியிருந்தது. தென்யேமனுக்கு கிடைத்து வந்த சோவியத்தின் உதவியைச் சமநிலைப்படுத்துவதற்காகவே சவூதி அரேபியா வடயேமனுக்கு பெருமளவு உதவியைச் செய்துகொண்டிருந்தது.

ஐக்கியப்பட்ட புதிய நாட்டின் ஜனாதிபதியாக சாலியே வந்தார். அவர் உடனடியாகவே சவூதியுடனான அவரின் உறவுகளில் விரிசலை ஏற்படுத்தக்கூடிய கடுமையானதொரு சோதனைக்கு முகங்கொடுத்தார் 1990 ஆகஸ்டில் ஈராக்கிய சர்வாதிகாரி சதாம் ஹுசெய்ன் குவைத்தை ஆக்கிரமித்தார். அந்த ஆக்கிரமிப்பை அடுத்து சவூதி அரேபியாவைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா அதன் ஆயிரக்கணக்கான துருப்புகளை வளைகுடாவுக்கு அனுப்பிவைத்தது. ஈரானுடனான 8 வருடகாலப் போரின் போது பெரும்பாலான அரபுநாடுகளினதும் மேற்குலக வல்லரசுகளினதும் ஆதரவைப் பெற்றிருந்த சதாம் ஹுசெய்னுடன் சாலி அணி சேர்ந்திருந்தார்.

சவூதியின் பாதையைப் பின்பற்றி ஈராக்குடனான சகல உறவுகளையும் துண்டித்துக் கொள்வதற்கு சாரி தயங்கினார். யேமனின் முக்கியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக பங்காளியாகவும் எண்ணெய் விநியோக நாடாகவும் ஈராக் விளங்கியது. குவைத் நெருக்கடி ஏற்பட்ட வேளையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அரபு லீக்கின் சுழற்சி முறையிலான ஆசனத்தில் யேமனே இருந்தது. ஈராக்கிற்கு எதிராக படைபலத்தைப் பிரயோகிப்பதற்கு அதிகாரமளித்த பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு எதிராக யேமன் வாக்களித்த பிறகு அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் சகல உதவிகளையும் நிறுத்திக்கொண்டன. சவூதி அரேபியாவில் வேலை செய்து கொண்டிருந்த சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் யேமனியர்கள் (தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும்) வெளியேற்றப்பட்டனர். அவர்களில் சிலர் சவூதியில் பல தசாப்தங்களாக வாழ்ந்துவந்தவர்கள். தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டதால் அவர்களிடமிருந்து வந்த சம்பாத்தியம் துண்டிக்கப்பட்டது. இதனால் யேமன் பொருளாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டது.

அந்த வெளியேற்றமும் அதற்குப் பின்னரான நிகழ்வுப் போக்குகளும் சவூதி தலைவர்களுக்கு முறையான பாடமொன்றைப் புகட்டின. தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியமைக்காகவும் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்காகவும் சாலியையே யேமனியர்கள் குற்றஞ்சாட்டுவார்கள் என்று சவூதிக்காரர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், பதிலாக யேமனியர்கள் தங்கள் தலைவரைச் சுற்றியே அணிதிரண்டு சவூதியை அவமதித்ததுடன், சதாம் ஹுசெய்ன் மீதான தங்கள் அபிமானத்தை பகிரங்கமாக வெளிக்காட்டினார்கள்.

1994ஆம் ஆண்டில் வடக்குடனான பல வருடகால விரக்திக்குப் பிறகு தென் யேமன் தலைவர்கள் பிரிந்துபோக முயற்சித்தார்கள். வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே போர் மூண்டது. ஆனால், ஒரு சிலவாரங்களுக்குள்ளாகவே தெற்கு கிளர்ச்சியாளர்களை சாலியின் படைகள் தோற்கடித்தன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் எதிர்த்து வாக்களித்




*யேமன் மீதான சவூதி அரேபியாவின் விமானக்குண்டுத் தாக்குதல்களை கண்டித்து லெபனான் தலைநகர் பெய்ரூத்தில் ஐக்கிய நாடுகள் செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தும் பெண்கள்*

தமைக்காக சாலி மீது ஆத்திரம் கொண்டிருந்த சவூதி அரேபியர்கள் தெற்கு கிளர்ச்சியாளர்களுக்கு நிதியுதவியும் ஆயுத உதவியும் செய்தனர். ஆனால், மீண்டும் ஒரு தடவை சவூதி அரேபியர்கள் தவறான தரப்பையே ஆதரித்தார்கள். சானா அரசாங்கம் ஐக்கியத்தை படைபலத்தின் மூலமாக மீண்டும் திணித்தது.

அமெரிக்காவில் 2001 செப்டெம்பரில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படும்வரை சவூதி அரேபியாவுடனான சாலியின் உறவுகள் பதற்றம் நிறைந்தவையாகவே இருந்து வந்தன. அந்தக்கட்டத்திலே சாரி அல் கயெடாவுக்கு எதிரான போரில் சவூதி அரேபியாவினதும் அமெரிக்காவினதும் ஒரு நேச அணியாக தன்னைக் காட்டிக்கொள்ளக்கூடியதாக தந்திரமாக நடந்துகொண்டார். 2004 முதல் 2009 பிற்பகுதிவரை சவூதி எல்லைக்கு அண்மையாக யேமனின் வடமாகாணங்களை தளமாகக் கொண்டியங்கிய ஹௌதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சாலியின் அரசாங்கம் தொடர்ச்சியான 6 போர்களை நடத்தியது. இந்தப் போர்களின் போது சவூதி அரேபியா சாலியையே ஆதரித்தது. இந்த மோதல்களில் இறுதிக்கட்டத்தில் 2009 ஆம் ஆண்டில் சவூதியின் இராணுவமும் சம்பந்தப்பட்டிருந்தது. பலமாதகால சண்டைகளில் சுமார் 200 சவூதி படையினர் பலியாகினர்.

இன்று சவூதி அரேபியா யேமனில் கடந்த காலங்களை விடவும் கூடுதலான அளவுக்கு நேரடியாக தலையிட்டிருக்கிறது. வரலாற்று நிகழ்வுகளின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு யேமன் மண்ணில் ஹௌதிகளை எதிர்த்துப் போரிட தரைப்படைகளை அனுப்புவதற்கு தயங்குகிறது. ஆனால், விமானப்படை வல்லமை மாத்திரம் தீர்க்கமான வெற்றியொன்றைப் பெறுவதற்கு போதுமானதல்ல என்பதை ஈராக், சிரியா மற்றும் லிபியாவின் அண்மைக்கால நெருக்கடிகள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. தற்போதைய மோதல் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கிறதோ அந்தளவுக்கு கூடுதல் ஆதரவை ஹௌதிகள் பெறுவார்கள். தலையீடு செய்து ஆக்கிரமிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளும் அயல் நாட்டுக்கு எதிராக யேமனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பவர்களாக ஹௌதிகள் நோக்கப்படுவர். ■

**மொகமட் பாஸி லெபனானிய அமெரிக்க பத்திரிகையாளர்**

***(ராய்ட்டர்ஸ்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச அரசியல்

# சீன - ரஷ்ய உறவுகள்
# தேவை கருதிய நட்பும் கொண்டாட்டமும்



வில்லியம் ஜோன்சன்

சீனாவின் சி ஜின்பிங், ரஷ்யாவின் விளாடிமிர் புட்டின் என்ற இருதலைவர்களுக்கும் இடையில் உள்ள உறவு பற்றி ஊடகவியலாளர்கள் நிறைய எழுதியிருக்கிறார்கள். இவர்கள் இருவருக்குமிடையே காணப்படும் சில பொது இயல்புகள் இவ்விருவரிடையிலும் தனிப்பட்ட உறவில் நெருக்கத்தை உண்டாக்கிவிட்டது. 'சி ஜின்பிங் சீனாவின் புட்டின் ஆவார்'. என்று ஒருவர் எழுதினார். இந்த ஒப்பிடுதல் படிக்கச் சுவாரஸ்யமாக இருக்கலாம். ஆனால் இது இரு நபர்களையும் பற்றிய பிழையான புரிதலுக்கு இடம் தருகிறது. அரசியல் யதார்த்த நிலை கொண்டு விளக்க வேண்டிய

புட்டின் ரஷ்யப் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதற்காகச் சீனாவின் பக்கம் சாய்கிறார். அமெரிக்காவும் ரஷ்யாவின் இந்த நகர்வைத் தடுக்கும் வழிகள் அற்றதாகவே உள்ளது. ஆனால் ரஷ்யாவிற்கு சீனா தேவைப்படுவது போல், சீனாவிற்கு ரஷ்யாவின் உதவி தேவை என்று கூற முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை தனிநபர் ஆளுமையின் இயல்புகளை ஒப்பிட்டுக்காட்டி விளக்குவதால் தோன்றும் அபத்தம் இங்கு வெளிப்படுகிறது.

சி ஜின்பிங் பதவியேற்ற பின்னர் அவருக்கும் புட்டினுக்கும் இடையில் குறைந்தது 10 சந்திப்புக்கள் நடந்து விட்டன. அவர்கள் இருவரும் தமக்கிடையேயான நட்புப் பற்றிச் சிலாகித்துப் பேசியிருக்கிறார்கள். சி ஜின்பிங்கின் 61ஆவது பிறந்த தினத்தன்று தாம் இருவரும் சிற்றூண்டியும் வோட்கா மதுவும் அருந்தி பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினோம் என்று புட்டின் கூறினார். இதே போன்று சி ஜின்பிங் புட்டினின் ஆன்மாவை தாம் கண்டு ஆனந்தப் பட்டதைக் கூறியது, ஜோர்ஜ் புஷ் ஒரு தடவை புட்டினின் ஆன்மாவின் தோற்றத்தைக் கண்டமை பற்றிக் கூறியதை ஞாபக மூட்டுவதாக இருந்தது.

இந்தப் பேச்சுக்களில் ஒரு நாடகத் தன்மை உள்ளது. இவர்கள் இருவரும் அடிக்கடி சந்திப்பதும் கூடிக்குலாவுவதும் ஒரே இயல்புடைய இரு நெஞ்சங்களின் கலப்பு என்று எண்ணக்கூடாது. ஒரு பொது எதிரியைக் கொண்டுள்ள இரு நபர்களின் ஐக்கியமாகவே இதனைப் பார்க்க வேண்டும். இந்த இரு நாடுகளிற்கு இடையிலான கசப்பான வரலாறு பிரசித்தமானது. இப்படியான பின்னணியில் இவையிரண்டும் நட்புடன் கூடிக்குலாவுவதும் இராஜதந்திர முக்கியத்துவம் மிக்க இருதரப்பு உறவுகள் இவற்றுக்கிடையே நிலவுவதும் ஏன் என்ற கேள்வி முக்கியமானது.

ஐக்கிய அமெரிக்காவிடமிருந்தும் அதன் நேசசக்திகளிடமிருந்தும் எழுவதாக அவர்கள் கருதும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு இவ்விருவருக்கும் அந்நியோன்ய உறவு தேவைப்படுகிறது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர், இன்று நேட்டோ (வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பு) அமைப்பு ரஷ்யாவின் வாசற்படிவரை தன் ஆதிக்கத்தை விஸ்தரித்துவிட்டது. நேட்டோவின் இந்த நகர்வு தடுத்து நிறுத்த முடியாததாக அமைந்தது. உண்மையில் ரஷ்யாவை ஒரு எதிரி போன்றே நடத்துகிறார்கள் என்று புட்டின் மேற்குலகைச் சாடுகிறார்.


ஆசியாவின் அச்சாணி என்ற நிலையில் உள்ள சீனாவையும் அமெரிக்கா ஒரு எதிரி நாடாகவே கருதுகிறது என்பதாகவே சீனாவும் கூறுகிறது. சீனா தனது எழுச்சியைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் செய்யப்படும் சுற்றிவளைப்பாகவே அமெரிக்காவின் பிராந்தியச் செல்வாக்கைப் பார்க்கிறது. ஒரு பொது எதிரியின் ஊடுருவலை எதிர்த்து நிற்கும் தலைவர்களாகவே இவ்விருவரும் தம்மைப் பார்க்கிறார்கள். இவ்வாறான தொரு எதிர்ப்பு நிலைப்பாடுதான் இவ்விருவருக்கும் இடையிலான உறவுகளை முன்னோக்கிச் செலுத்திக் கொண்டிருக்கிறது.

ரஷ்யாவின் எண்ணெய் வள உற்பத்திப் பொருட்களை சீனா கொள்வனவு செய்யக்கூடியதாய் இருப்பினும் அவற்றுக்குப் புதிய சந்தை வாய்ப்புகளை வழங்கத் தயாராக இருப்பதும் ரஷ்யாவிற்கு பேருதவியாகும். ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் ரஷ்யாவின் உக்கிரெயின் கொள்கைக்குப் பதிலடியாக பொருளாதாரத் தடைகளை விதிக்கும் போது அதனை எதிர்கொள்வதற்குச் சீனாவுடனான எண்ணெய் வர்த்தகம் உதவுகிறது. சில ஆய்வாளர்கள் வேறு விதமான விளக்கங்களையும் கூறுகிறார்கள். அண்மைக்காலத்தில் செய்யப்பட்ட எண்ணெய், எரிவாயு பேரங்கள் ஒருவகையில் நிதிநெருக்கடியைத் தவிர்ப்பதற்கான மறைவு நடவடிக்கை என்று கூறுகின்றனர். பசுபிக் கடலில் நிலைகொண்டுள்ள அமெரிக்கக் கடற்படையால் சீனாவிற்கு எண்ணெயும் எரிவாயுவும் கிடைப்பதை தடுத்து நிறுத்தலாம். அப்படி நிகழ்ந்தாலும் அதனால் பாதிப்பு இல்லை என்பதை ரஷ்ய-சீன தரைவழி வர்த்தகம் உறுதி செய்யும் என்றும் ஒரு விளக்கம் கூறப்படுகிறது. சீனாவின் அதிகரித்துவரும் தேவைகளை நிறைவு செய்யவும் நிலக்கரி உபயோகத்தில் தங்கியிருக்கும் சீன உற்பத்தித் தொழில்களில் எண்ணெயை எரிபொருளாக மாற்றுவதனால் தூய்மையான எரிபொருள் உபயோகத்தின் மூலம் சூழலியல் பிரச்சினைகளையும் சீனா தீர்த்துக் கொள்ள முடியும்.

பசுபிக் கடலில் ரஷ்யாவின் நடவடிக்கைகளின் இன்னொரு அம்சமும் ஊடகங்களால் பேசப்படாத விடயமாக உள்ளது. வியட்நாமின் காம்ரன் குடாவின் (CAM RAN BAY) விமானத் தளத்தை ரஷ்யாவின் குண்டுவீச்சு விமானங்கள் எண்ணெய் நிரப்பும் தளமாக அண்மைக் காலத்தில் உபயோகித்தன. இது வியட்நாமுடன் அமெரிக்கா இராணுவக் கூட்டுறவை வளர்த்துக் கொள்ளும் முயற்சியைத் தடைப்படுத்துவதாய் உள்ளது. அத்தோடு சீனா தென் சீனக்கடலில் உள்ள தீவுகளில் தனக்கு உள்ள உரிமையை வலியுறுத்தும் திட்டத்தையும் ரஷ்யாவின் செய்கை குழப்பியுள்ளது. இதனைவிட ரஷ்யாவிற்கும் ஜப்பானுக்கும் வடபசுபிக் கடலில் உள்ள குரில் தீவுகள் (Kuril Islans) தொடர்பாக உள்ள பிணக்கில் ரஷ்யா தனது நிலையை விடாப்பிடியாக அழுத்துகிறது. இதனால் ஜப்பான் நாடு பசுபிக்கில் உள்ள சென்காடு/ டயாயு (SENKAKU /DIAOYU) தீவுகளில் உரிமை கோரும் விடயத்தில் அமெரிக்கா என்ன செய்யலாம். ஜப்பானுக்கு உதவுவதா வேண்டாமா என்ற கேள்விகளும் சிக்கலானவையாய் உள்ளன.

> அமெரிக்கா சீனாவுடன் உள்ள உறவுகளை மேம்படுத்த நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. இதற்கு அமெரிக்கா தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். காலம் தாழ்த்தியாவது இக்கொள்கை மாற்றத்தை செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச முறைமை ஒன்றின் பொறுப்புமிக்க பங்காளிகளாகத் தாமும் உள்ளோம் என்ற சிந்தனையை ரஷ்ய, சீனத் தலைவர்களிடம் உண்டாக்க முடியாது என்ற உண்மையை இவை அமெரிக்காவிற்கு உணர்த்தி நிற்கின்றன. வரலாற்றின் சரியான பக்கத்தில் தாம் நிற்கிறோம் என்ற எண்ணத்தை அவர் களுக்கு உண்டாக்கவும் முடியாது. தம்மால் உருவாக்கப்படாத உலக ஒழுங்குமுறையைத் தாம் ஏற்கப்போவதில்லை என்றே அவர்கள் கூறுகிறார்கள். சீனாவும், ரஷ்யாவும் ஒன்றுபட்டு நின்றால் தமக்கு எதிரான எந்தக் கூட்டுக்கும் தம்மால் பதில் சொல்ல முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். சீனாவையும், ரஷ்யாவையும் மேற்குலகக் கூட்டு ஓரங்கட்டியும் தனிமைப்படுத்தியும் வைத்தால், தாமும் ஒன்று சேர்ந்து நின்ற வாறு அதையே செய்யப் போவதாக இந்நாடுகள் கூறுகின்றன.

புட்டின் ரஷ்யப் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதற்காகச் சீனாவின் பக்கம் சாய்கிறார். அமெரிக்காவும் ரஷ்யாவின் இந்த நகர்வைத் தடுக்கும் வழிகள் அற்றதாகவே உள்ளது.

ஆனால் ரஷ்யாவிற்கு சீனா தேவைப்படுவது போல், சீனாவிற்கு ரஷ்யாவின் உதவி தேவை என்று கூற முடியாது. ஏனெனில் சீனா மேற்குலகுடன் உள்ள உறவை முறிக்காமல் தொடர்வதையே விரும்புகிறது. சீனா புட்டினைச் சந்தேகத்தோடு நோக்குவது புட்டின் நம்பிக்கைக்கு உரியவர் அல்லர் என்ற காரணத்தால் அன்று புட்டின் ஒரு ரஷ்யர்; சீனர்கள் ரஷ்யர்களைச் சந்தேகிக்கிறார்கள் என்பதே காரணம் எனலாம். அமெரிக்கா சீனாவுடன் உள்ள உறவுகளை மேம்படுத்த நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. இதற்கு அமெரிக்கா தன்கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். காலந்தாழ்த்தியாவது இக்கொள்கை மாற்றத்தைச் செய்ய வேண்டும்.

தென்சீனக் கடலின் தீவுகளின் உரிமை பற்றிய பிரச்சினையில் அமெரிக்கா தலையிடாமல் இருப்பது முதலாவது செய்ய வேண்டிய விடயம். அமெரிக்கா அங்கு இழப்பதற்கோ பெறுவதற்கோ எதுவும் இல்லை. எமது நட்பு நாடான பிலிப்பைன்ஸுக்கு உதவவேண்டும் என்று கூறுவது பொய்மை. பிலிப்பைன்ஸுடன் நமது உறவு பரஸ்பர பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டது. அது பிராந்தியத்தின் எல்லைப் பிரச்சினைகள் பற்றிய பேரப்பேச்சுக்கள் சம்பந்தப்பட்டதன்று.

கடல் சட்டம் பற்றிய ஐ.நா. சமவாயம் பற்றி அமெரிக்கா சீனாவிற்கு விரிவுரை நடத்தும் வேலையையும் உடனடியாக நிறுத்த வேண்டும். ஏனெனில் இச்சமவாயத்தில் அமெரிக்காவே இன்னும் கையொப்பம் இடவில்லை.

சர்வதேச கடற்பாதைகள் குறித்து இறுதித் தீர்ப்பை வழங்கப்போவது தானே என்ற தோரணையில் அமெரிக்கா தலையீடுசெய்தல், விரிவுரை நிகழ்த்துதல், பாவனை செய்தல் என்பனவற்றை அமெரிக்கா நிறுத்தினால் சீன-ரஷ்ய உறவுகளிலும் ஒரு மாற்றம் வரும். சீனா மற்ற நாடுகளுடன் எல்லைப் பிரச்சினைகளை எப்படிக் கையாள்கிறதோ அவ்வாறே ரஷ்யாவுடனும் தன் எண்ணப்படி நடந்து கொள்ளும். ■

*(வில்லியம் ஜோன்சன் அமெரிக்க விமானப்படை மற்றும் வெளியுறவு சேவையின் ஓய்வுபெற்ற அதிகாரி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்



# ஜெயகாந்தன்

## (1934 -2015)



தெ.மதுசூதனன்

தமிழ்ச் சூழலில் மிகப்பிரபல எழுத்தாளர் எனும் வகைமைக்கு உண்மையில் உரித்தானவராக வாழ்ந்துவந்தவர் ஜெயகாந்தன். இவர் தனது எண்பதாவது வயதில் ஏப்ரில் 8, 2015 அன்று காலமானார். நவீன தமிழிலக்கியத்தின் மடைமாற்றத் திருப்பத்திற்கு காரணமானவர்கள் பாரதி, புதுமைப்பித்தன். இவர்கள் வருகைக்குப்பின்னர் தான் தமிழ் புதுத் தமிழ் ஆயிற்று. இந்த புதுத் தமிழ் படைப்பு வீச்சுடன் சமூக நோக்குடன் இணைந்து புரட்சிகர வேகத்துடன் புதிய நோக்குடன் வெளிப்பட்டது. இந்த வேகமாற்றம் அடுத்த கட்டத்தை வேண்டி நின்றது. இந்த கட்டத்தின் மேற்கிளம்பு அலையாக புதிய தோற்றுவிப்பாளராக நவீன தமிழ் இலக்கிய உலகினுள் ஜெயகாந்தன் நுழைகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயகாந்தன் 1934 ஆம் ஆண்டு ஏப்ரில் 24 ஆம் திகதி கடலூர் மஞ்சக் குப்பத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் ஐந் தாம் வகுப்போடு பள்ளிக்கூடத்திற்கு முழுக்கு போட்டவர். அப்புறம் காலம் இவரை விழுப்புரத்தில் தூக்கிப்போட் டது. தாய் மாமன் வடிவில் பாரதியின் எழுத்துக்களும் பொதுவுடமைச் சிந் தனைகளும் இவரிடம் வந்து விழுந் தன. இதனால், ஜெயகாந்தன் என்னும் ஆளுமை சமூக ரீதியில் விழிக்கத் தொடங்கியது.

தமது அன்றாட வயிற்றுப் பிழைப் புக்காக வாழ்க்கையின் கடைக்கோடி யில் போராடியவர். ஆரம்பம் முதல் எப்படியெல்லாம் தன்னுடைய வாழ்க் கைப் பாதையைக் கடந்து வந்தார் என் பதை ஜெயகாந்தனின் வார்த்தைகளில் சொல்வதென்றால், 'நான் பிழைப்புக் காக என்னென்ன செய்திருக்கிறேன் என்றொரு நினைவுப்பட்டியல் போட் டால் ....மளிகைக் கடைப் பையன், ஒரு டாக்டரின் பை தூக்கும் உத்தி யோகம், மாவு மெஷின் வேலை, கம் பாசிடர், டிரெடில்மேன், மதுரை சென் றல் சினிமாவில் 'வேலைக்காரி', சினிமாப் பாட்டுப் புத்தகம் விற்றது, கம்யூனிஸ்ட் கட்சி ஆபிஸில் இருந்து பத்திரிகைகள் புத்தகங்கள் விற்றது, ஃபவுண்ட்ரியில் இஞ்சினுக்கு கரி கொட்டியது, சோப்பு ஃபாக்டரியில் இங்க் ஃபாக்டரியில் கை வண்டி இழுத் தது, ஃபுரூஃப்ரிடர், பத்திரிகை உதவி யாசிரியர்...' என பல்வேறு நிலைக ளில் பல்வேறு தளங்களில் வாழ்ந்து பெற்ற அனுபவமும் பன்முக மனிதர் களுடன் கொண்ட உறவும் தான் ஜெயகாந்தனின் கல்விப் பரிமாண மாக உயர்வு பெற்றது. இவ்வாறான பல்வேறு மனிதர்களுடன் வாழ்ந்தும், பலதரப்பட்ட அனுபவத் தேட்டத்துள் கரைந்தும் ஜெயகாந்தனின் இலக் கியப் பயணம் ஆரம்பமானது.

ஜெயகாந்தன் தமது படைப்பில் கொண்டுவந்த அடித்தட்டு மக்களின் வாழ்க்கை வெறுமனே பார்த்ததாலோ படித்ததாலோ வந்தது அல்ல. உண் மையான உயிர்ப்புமிகு வாழ்க்கை யில் இருந்தே வந்தது. அந்த வாழ்க் கையின் யதார்த்தமும் இயல்பும் கெடாமல் பாத்திரக்களங்களை முன் னிறுத்தியமை ஜெயகாந்தனின் தனிச் சிறப்பு.

வாழ்க்கையில் கற்று அதன் பலத் தில் ஊன்றி நின்று வாழ்வை ஆற்றுப் படுத்தும் எழுத்தாளராக பரிணமிக் கும் காலச்சூழல் சாதகமாக ஜெயகாந்த னுக்கு அமைந்தது. இதனை இவரது வாழ்க்கைத் தடம் இன்னும் தெளிவாக அடையாளம் காட்டுகின்றது. இதுவே இவரது இலக்கியத் தடமாகவும் நீட்சி பெற்றது. இவை சிறுகதை, நாவல், குறுநாவல், நாடகம், உரைநடை, கட்டுரை, பத்தியெழுத்து, சினிமா வென விசாலித்த பன்முகக் களங் களாக வளர்ந்தன.

தமிழில் புதுமைப்பித்தன் வளர்த் தெடுத்த கதையாடல் மரபின் செழு மையை உள்வாங்கி அந்த மரபை இன்னொரு தளத்திற்கு நகர்த்தி ஒரு பெரும் பாய்ச்சலை ஜெயகாந்தன் ஏற் படுத்தினார். இந்த வீரியமே ஜெய காந்தன் சிறுகதை மன்னராக வலம்வர காரணமாயிற்று. ஒரு அடிநிலை வாழ்க்கையில் இருந்து தனது பயண த்தை ஆரம்பித்த ஜெயகாந்தன். நவீன தமிழிலக்கியத்தின் சாதனைச்சிற்பி யாக பரிணமித்தார். இந்த அளவிற்கு 'ஆளுமையும் புலமையும்' இவரிடம் வளர்ந்து வந்தது. தமிழை முறையாக கல்வி நிறுவனம்சார்ந்து கற்காமல் புறப்பட்ட ஜெயகாந்தன் தமது தீவிர முயற்சியால், கடும் உழைப்பால் தமிழை ஆழ அகலமாக கற்றுத் தேறி தமிழுக்கும் தம்மால் வளம் கொடுக்க முடியுமென நிரூபித்துள்ளார்.

''நான் மகிழ்ந்திருக்கிறேன். பிறரை மகிழ்வித்திருக்கிறேன். நான் துன்புற் றிருக்கிறேன், பிறரை துன்புறுத்தியி ருக்கிறேன். நான் மகிழ்ந்து பிறரை துன்புறுத்தியிருக்கிறேன். பிறரை மகிழ்வித்து துன்புறுத்தியிருக்கிறேன். இதெல்லாம் எதற்காக? நான் இந்த வாழ்க்கையோடு என்னை சம்பந்தப் படுத்திக்கொண்டுள்ளேன். இந்த வாழ்க்கை என்னைப் பாதிக்கிறது. நானும் இந்த வாழ்க்கையைப் பாதிக் கிறேன். வாழ்க்கை எனக்கு முடிவும் தொடக்கமும் அற்ற நெடுங்கதையாக காட்சி தருகிறது. அவ்வப்போது சிதறிச் சிதறி அலைகளாய் என் மீது மோதும் சிறுகதைகளாகவும் பொருள் கொள்கிறது''. இவ்வாறு தனது வாழ்க் கையின் இருப்பு, அர்த்தம், அடையா ளம் பற்றிய தெளிந்த தெரிவுடனும் தேடலுடனும் தமக்கான இயக்கத்தை எழுத்து வழி நிலைநின்று நிறுத்தி னார். இந்த நிலைநிறுத்தலில் ஜெய காந்தனின் தனித்தன்மையும் ஆளு மையும் நன்கு வெளிப்படுகின்றது.

ஜெயகாந்தன் தன்னுடைய இலக் கிய வாழ்வை சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன் என்று ஆரம்பித்து முற்போக்கு இடது சாரி இலக்கிய எழுத்து மரபில் ஒரு குறியீடாக இந்த இயக்கத்தின் பிரதிநிதியாக அடை யாளம் காணப்பட்டார். 1960-80 களில் ஜெயகாந்தன் காலம் மிகச் செழிப்புடன் இருந்தது. முற்போக்கு இடதுசாரிய இலக்கிய மரபுக்கு ஜெய காந்தனின் படைப்புக்கள் பெரும் வளம் சேர்ப்பவையாக அமைந்தன. இவரது கதை சொல்லலில் ஒரு வேக மும், புதுமையும், புதிய நடையும், சாதாரண மனிதர்களின் உலகம் முதல் அறிவு ஜீவித்தன வாழ்வின் அழுத்தங் கள் வரை, சமுதாய முரண்பாடுகள் -சிக்கல்கள்- போராட்டங்கள், நகர்ப் புறத் தொழிலாளர்கள், விளிம்பு நிலைத் தொழிலாளர்கள், விழிப்புற்ற பெண்கள், தனிமனித பலம், பல வீனங்கள், ஆன்மீக விசாரணைகள்... என வாழ்க்கையின் பன்முக விரிதளங் களில் ஜெயகாந்தனின் படைப்புலகம் இயங்கிவந்தது.

இவரது படைப்புலகம் வாழ்க்கை மீதான நேசிப்பையும் மனித நேயத் தையும் சமூக மாறுதல்களையும் எதிர் காலத்தின் நம்பிக்கையையும் எடுத் துப் பேசுபவையாக அமைந்திருந்தன. வாசக மனநிலையில் ஒருவித அதிர் வையும் வாசக படைப்புடன் உரையா டுவதற்கான களத்தையும் எப்போதும் திறந்துவிட்டுக்கொண்டே இருந்தன. ஜெயகாந்தனின் படைப்புக்கள் ரஷ்ய, பிரென்சு,செக், ஆங்கில, ஜேர்மனி, உக்ரேனிய முதலான பன்னாட்டு மொழிகளிலும் இந்தியாவில் உள்ள பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன.

ஜெயகாந்தனை வெகுஜன மட்டத் தில் புகழின் உச்சிக்கு 'ஆனந்த விக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டன்' கொண்டு சென்றது. இவர் வெகுஜன பத்திரிகையில் தரமான இலக்கியப் படைப்புகள் வெளிவராது என்ற சூழலை தகர்த்தெறிந்தார். நல்ல எழுத்துக்கு என்றும் எங்கும் மவுசு உண்டு என்பதை இவருடைய முத்திரைக் கதைகள் நிரூபித்தன. குறிப்பாக அடுத்த வாரம் வரவிருக்கும் கதைக்கு முதல் வாரமே விளம்பரம் வெளியிடும் நிலைமையை ஆனந்த விகடன் மேற்கொண்டது. இந்த அளவிற்கு ஜெயகாந்தன் கதைகளுக்கு வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது.

ஜெயகாந்தனது சிறுகதைகளை ஆராயும் பொழுது அவை இரு வேறு காலப்பகுதிகளுக்குரியனவாக அமைந்துள்ளமையை நோக்கலாம். முதலாவது, ஆனந்த விகடனுக்கு எழுதுவதற்கு முந்திய காலம். அடுத்தது, ஆனந்த விகடனிலும் அத்தகைய பிற இதழ்களிலும் எழுதும் காலம். முதலாவது காலகட்டத்தில் தத்துவ நோக்கு பீறிட்டு நிற்கும் கதைகளும் பரிசோதனை முயற்சிகளாக அமைந்த கதைகளும் அதிகம் வெளிவந்தன. இவை முற்போக்கு இடதுசாரி இலக்கிய மரபிற்கு புது வளம் சேர்ப்பவையாக இடதுசாரி விமர்சகர்களால் சிலாகித்துப் பேசப்பட்டன. அத்துடன் இந்த இயக்க எழுத்தாளனாகவும் கொண்டாடப்பட்டு வந்தார்.

இரண்டாவது கட்டத்தில் வெகுஜன மட்டத்தில் வாசக ரஞ்சகமாய் அமையும் புதிய போக்கினை அடையாளம் காட்டி நின்றார். தரமான காத்திரமான எழுத்துக்களைக் கூட சனரஞ்சக மட்டத்திற்கு கொண்டு செல்லவேண்டும் என்ற நம்பிக்கையை ஏனைய எழுத்தாளர்களுக்கும் பெற்றுக்கொடுத்தார். இந்தச் சூழல் நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் புதிய மாற்றங்கள் உருவாக காரணமாயிற்று. இலக்கியப் படைப்புகள் பற்றிய தேர்வு நிலையிலும் வாசக மனநிலையிலும் மாற்றங்கள் உருவானது.

ஜெயகாந்தன் தான் எடுத்துக்கொள்ளும் பிரச்சினை, அதனைச் சொல்லும் முறை ஆகிய இரண்டிலும் தனித்து நிற்பவர். எந்தப்பிரச்சினையானாலும் தம்மைப் பொருத்தமட்டில் தமக்கென ஒரு தனிப்பார்வை உண்டு எனச் சொல்லாமல் சொல்வதை தனது தனிக் குணங்களுள் ஒன்றாக வெளிப்படுத்தி வந்துள்ளார். இவரது சிறுகதைகளை விட குறுநாவல்கள், நாவல்கள் முதலான படைப்புக்களங்களில் தமது பார்வை சரியா தவறா என்று கவலைப்படுவதைக் காட்டிலும் அவை தனித்து நிற்கிறதா என்பதில் தான் அதிக கவனம் செலுத்தியுள்ளார்.

இவருடைய பார்வை எப்போதும் காரண காரியத் தொடர்பு இல்லாமல் தனித்து நிற்காது. தாம் எடுத்துக் கொண்ட பிரச்சினையை பல கோணங்களில் இருந்தும் ஆழமாகச் சிந்திப்பதாலேயே இவருடைய பார்வைக்கு ஒரு தனித்துவம் கிடைக்கிறது. இதனால் கதைசொல்லலில், கதைக்களத் தேர்வுகளில், கதாப்பாத்திரங்களில், கதை மொழியில், எப்போதும் புதுமையும் தனித்தன்மையும் இழையோடி வருவதைக் காணலாம். குறிப்பாக சம்பவங்களின் அடியாக கருத்துநிலையையும் கருத்துநிலை அடியாக சம்பவங்களையும் விளக்கிய ஜெயகாந்தனுக்கு சம்பவங்களை அடக்கி நிற்கும் முழு வாழ்க்கையையும் அக்கண்ணோட்டத்தில் பார்ப்பது சுலபமாகிவிடும். இவ்வாறு ஒருபாத்திரத்தைக் கொண்டு வாழ்க்கை முழுவதையும் பார்ப்பது நாவல் எனும் இலக்கியத் தொடர்பில் அதிகம் சாத்தியப்படுகிறது. இதனால் ஜெயகாந்தனின் நாவல்கள் எப்போதும் தனித்து பேசக்கூடிய தருணங்களை கலைச் சாத்தியப்பாடுகளை முன்னிறுத்தி உள்ளன. இவரது நாவல் இலக்கியங்களுள் வாழ்க்கை அழைக்கிறது, உன்னைப்போல் ஒருவன், பாரிசுக்குப்போ, சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ஒருமனிதன் ஒரு வீடு ஒரு உலகம்,இந்த நேரத்தில் இவள், கங்கை எங்கே போகிறாள், சுந்தரகாண்டம் முதலான நாவல்கள் அவை எழுதப்பட்ட காலத்தைத் தாண்டி வாசிப்பிற்கான பிரதிகளாக மட்டும் நின்றுவிடாமல் ஒரு இயக்கம் போல உருமாறுவது சிறப்பாக கவனிக்கப்பட வேண்டும்.

தேர்ந்த வாசகர் எப்போதும் ஜெயகாந்தனின் படைப்புலகத்துடன் திரும்பத் திரும்ப பயணம் செய்வார். நாவலின் மிக நுண்மையான இடைவெளிகள் மற்றும் மௌனம் இன்னொரு எழுத்தாளரால் அல்லது இன்னொரு கலைஞரால் மறு உருவாக்கம் செய்யப்படுகிறது. இவை ஜெயகாந்தனுக்கும் நன்கு பொருந்தும். ஆனால் தமிழ்ச் சூழலில் ஜெயகாந்தனின் படைப்பாளுமை பின்வந்த காலமாற்றத்தையும் தாண்டி எந்தெந்த படைப்புகளின் கலை வடிவத்தை, படைப்புக் கூறுகளை மாற்றியமைத்துள்ளன என்பது குறித்து நாம் இங்கு ஆழமாக உரையாட வேண்டும். குறிப்பாக 1970களுக்குப் பின்னர் படைப்பிலக்கியத்தில் இயங்கும் எழுத்தாளர்களின் படைப்புகளுடன் ஜெயகாந்தனின் படைப்பாளுமை, படைப்பாக்கச் செழுமை எந்த அளவிற்கு ஊடாட்டம் கொண்டதாக அமைந்துள்ளதென்பது நிதானமான மதிப்பீட்டுக்கும் உரையாடலுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

ஜெயகாந்தன் எழுதிய படைப்புக்கள் இன்னும் தீவிர வாசிப்பிற்கும் மீள் சிந்தனைக்கும் உரியனவாகவே உள்ளன. முற்போக்கு இடதுசாரி இலக்கிய இயக்க மரபின் தொடர்ச்சியாக மட்டும், இவரை முத்திரை குத்தும் பார்வை ஜெயகாந்தனை வாசிப்பதற்கான அனைத்துச் சாத்தியங்களையும் தருணங்களையும் உருவாக்கித் தரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஜெயகாந்தனை ஒற்றைப் பரிமாண நேர்கோட்டில் வைத்து புரிந்துகொள்ள முற்பட்டால் பெரும் தவறுகள் நேர்ந்துவிடும். முரண்களின் இயக்கம், கருத்தியல்சிதைவு, கருத்தியல்குளறுபடிகள் முதலானவற்றின் பின்புலத்தில் வைத்தும் ஜெயகாந்தன் மதிப்பிடப்படவேண்டும்.

ஆரம்ப காலம் தொடக்கம் ஜெயகாந்தனிடம் இழையோடி வந்த தனிநபர் ஆளுமைக் குளறுபடிகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இவரது கம்பீரமும் கர்வமும் ஞானச்செருக்காக அடையாளம் காணப்பட்டன. அதாவது இந்த ஞானச் செருக்கின் மறுவடிவமாக ஜெயகாந்தன் முன்னிறுத்தப்பட்டார்.


*(63ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்

# அசோக்குமார் எனும் ஒளிச்சிற்பி

எஸ்.இராகவன்



திரைப்பட ஒளிப்பதிவில் எல்லைகளை கடந்து உச்சம் தொட்ட ஒரு வெற்றிகரமான ஒளிப்பதிவாளராகவும் அதேவேளை திரைப்பட இயக்கத்தில் தோல்வியடைந்த ஒரு இயக்குநராகவும் அசோக்குமார் வாழ்ந்து முடித்திருக்கிறார்.

எதையும் இயல்பின் அழகோடும் கலை நுணுக்கத்தோடும் படமாக்குவதுதான் சிறந்த ஒளிப்பதிவாகும். கட்புலனின் வழியே மனதிற்கு இதமளிக்கக்கூடிய உன்னதமான கலை அது. ஓர் ஓவியத்தைத் தீட்டுவதற்கு ஒப்பானதாகவும் அதைக் கொள்ளலாம். இப்போது ஒளிப்பதிவை ஒளிஓவியமென சொல்வதும் மரபாகிவிட்டது. ஒரு திரைப்படத்தின் பலம் பலவீனமெல்லாம் ஒளிப்பதிவேயன்றி வேறில்லை. திரைப்படத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் ஒளிப்பதிவிற்குக் கணிசமான பங்குண்டு. நாங்கள் ஒரு திரைப்படத்தைப் பார்க்கும் போது ஒளிப்பதிவாளர் யாரெனத் தேட எத்தனிப்போமாகவிருந்தால் அதுவே ஒளிப்பதிவாளரின் வெற்றியாகும். அவ்விதம் வெற்றிபெற்ற ஒளிப்பதிவாளர்களில் ஒருவர் தான் அசோக்குமார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் நூற்றுக்குமதிகமான திரைப்படங்களை அசோக்குமார் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். இந்தியத்திரைப்பட உலகில் இவர் ஒரு நட்சத்திர ஒளிப்பதிவாளர். தமிழ் சினிமாவின் போக்கினை மாற்றியமைத்து நல்ல திரைப்படங்களை கொண்டுவரும் முனைப்புடன் தமிழ்த் திரையுலகினுள் நுழைந்த இயக்குநர் மகேந்திரனின் 'உதிரிப்பூக்கள்', 'பூட்டாத பூட்டுக்கள்', 'நெஞ்சத்தைக் கிள்ளாதே', 'ஜானி', 'மெட்டி', 'நண்டு' ஆகிய திரைப்படங்களுக்கு அசோக்குமார் தான் ஒளிப்பதிவு செய்திருந்தார். இத்திரைப்படங்கள் இப்போதும் பார்ப்பவரை வியப்பிலாழ்த்துகின்றன. அசோக்குமாரின் ஒளிப்பதிவின் தரத்திற்கு இதுவே நேரடி எடுத்துக் காட்டாயமைகிறது.

இயக்குநர் மகேந்திரன் தமிழ் சினிமாவின் மீது வெறுப்புக் கொண்டிருந்த ஒருவர். அந்த வெறுப்பின் காரணமாகவே சில நல்ல திரைப்படங்களை இயக்கும் முனைப்புடன் சினிமாவுக்கு வந்தார். ஆனால் அவரைத்தன் ஒளிப்பதிவின் மூலமாக அசோக்குமார் தமிழ் சினிமாவை நேசிக்கச் செய்திருந்தார். ''எனது திரைப்படங்களுக்கு அசோக்குமார் தான் உருவமும் உணர்வும் கொடுத்தார். அசோக்குமார் இல்லாமல் 'சாசனம்' படத்தை எடுக்க நேர்ந்த போதுதான் அவரில்லாமல் என் திரைப்படங்கள் முழுமை பெறுவது இல்லை என்பதை உணர்ந்தேன்'' என மகேந்திரன் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளதை இத்தருணத்தில் எடுத்துக்காட்டுவது பொருத்தமாயமையும்.

இயக்குநர் மகேந்திரன் ஒரு போதுமே தனது திரைப்படங்களை, விருதுப் பரிசீலனைக்கு எங்கும் அனுப்புவதில்லை. 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' திரைப்படத்திற்கும் அவர் அந்த நடைமுறையைப் பின்பற்றினார். எனினும் அத்திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள் தேசிய விருதுப் பரிசீலனைக்காக அத்திரைப்படத்தை அனுப்பினார்கள். அவ்வாண்டின் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதை அத்திரைப்படத்திற்காக அசோக்குமார் பெற்றார். இதுதவிர சிறந்த ஒலிப்பதிவு, சிறந்த மாநில மொழிப் படம் ஆகியவற்றுக்கான தேசிய விரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகளையும் 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மகேந்திரன் 'உதிரிப்பூக்கள்' திரைப் படத்தைக் கறுப்பு - வெள்ளை வண் ணத்திலேயே படமாக்க விரும்பினார். ஏனெனில் இருட்டு பார்வையாளர் எண்ணங்களைக் கூர்மையாக்கும். இருளும் குறைவான ஒளியுங் கொண்ட கறுப்பு வெள்ளை வண்ணம் பார்வையாளன் இதயத்திற்கு நெருக் கந்தரும். பலவண்ணங்களில் படமாக் கும் போது பார்வையாளனுக்குக் கவ னச்சிதறல் ஏற்படும். கறுப்பு - வெள் ளையில் அது ஏற்படாது என்ற கற்பி தத்தை மகேந்திரன் கொண்டிருந்தார். இதனால் உதிரிப்பூக்களை பலவண் ணப்படமாக எடுத்தால் நுட்பமான உணர்வுகள் சிதைந்து விடுமென அவர் பயந்தார். அந்தக்காலத்தில் படமாக்கப்படும் காட்சியை நேரடி யாக குறுந்திரையில் (Moniter) பார்க் குமளவுக்குத் தொழில்நுட்பம் இல்லை. உதிரிப்பூக்கள் படமாக்கப்ப டும்போது என்னென்ன நிறங்கள் வர வேண்டுமென்பதை மகேந்திரன் அசோக்குமாருக்கு வரைந்து காட்ட அதன்படியே காட்சிகளை அசோக் குமார் ஒளிப்பதிவு செய்வார். படமாக் கிய காட்சிகளை பின்னர் திரையில் பார்த்தபோது மகேந்திரன் எதிர்பார்த் ததை விட வெகு இயல்பாகவும் மிக நேர்த்தியுடனும் அழகாகவும் அக்காட் சிகளை அசோக்குமார் ஒளிப்பதிவு செய்திருந்தார். அத்திரைப்படத்தின் மூலம் நுட்பமான உணர்வுகளைச் சிதைக்காமல் மகேந்திரன் கறுப்பு வெள்ளை வண்ணத்தில் காட்ட விரும் பியதை பலவண்ணங்களிலும் காட்ட லாம் என்பதை அசோக்குமார் நிரூபித்திருந்தார். அத்திரைப்படத்தில் இடம்பெறும் அழகிய கண்ணே.. பாடலை ஒளிப்பதிவு செய்திருந்த விதம் இதற்கொரு சிறப்பான எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

திரைப்படங்களில் பாடல்காட்சிக ளைப் புகுத்துவதில் மகேந்திரனுக்கு உடன்பாடில்லை. அதுவும் காதல் தொடர்பான பாடல் காட்சிகளை எடுப்பதை அடியோடு வெறுப்பவர். எனினும் வணிக நோக்கில் பாடல் களே திரைப்படத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலையில் மகேந்தி ரனும் அதற்கு விதிவிலக்கல்ல. நெஞ் சத்தைக் கிள்ளாதே திரைப்படத்திற் காக 'பருவமே புதிய பாடல்பாடு' என்ற பாடலுக்கான காட்சியைப் படமாக்கியபோது ஏற்பட்ட அனுப வத்தை மகேந்திரன் இவ்வாறு குறிப் பிடுகிறார். எனக்குப் பாடல்கள் எடுக் கப்பிடிக்காது. அதுவும் டூயட் எடுப்ப தைக் கொடுமையாக நினைப்பவன். ஆனால், ஓடியோ ரைட்ஸ் என்பது தனிவியாபாரமாக இருந்ததால் பாடல் களைக் காட்சிகளைப் போல எடுப்ப தாகத் தீர்மானித்தோம். 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்தின் பருவமே புதிய பாடல் பாடு பாட்டுக்கு சுஹாசினி, மோகன் இருவரையும் பெங்களூரு கப்பன் பார்க்கில் வைத்து படம் பிடிக் கலாம் என்று முடிவெடுத்தோம். எங்க ளுக்கு அதிகாலை பெங்களூர் எப்படி யிருக்குமென்பதே தெரியாது. காலை 4.30 மணிக்கு கப்பன் பார்க் சென் றால், என் அருகில் நின்றிருந்த அசோக்குமார் கூடக் கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு பனிமூட்டம். ஆனாலும் அதிகாலை 5.30 மணிக்கு விளக்குகள் எதுவுமில்லாமல், அசோக்குமார் அந்தப் பனிசூழ் காலையிலேயே பாடலைப் படமாக்கி னார். சென்னைக்கு நெகட்டிவ் அனுப்பி ரிசல்ட் பார்த்தபோது, மிகச் சிறப்பாக இருந்தது. பனிபடர்ந்த அந்த அதிகாலையை ஒளிப்பதிவு செய்த அசோக்குமாரின் அசாத்திய மான திறமையும் அவருடைய தன் னம்பிக்கையும் தான் அந்தப்படத்துக் குத் தேசிய விருதைப் பெற்றுத்தந்தது. இன்றைக்கும் நெஞ்சத்தைக் கிள்ளாதே திரைப்படமென்றால் அந்தப் பாடல் காட்சிதான் அநேகருக்கு உடனடியாக நினைவில் வரும். எஸ்.பி.பாலசுப்பிர மணியமும் எஸ். ஜானகியும் இணை ந்து பாடிய இப்பாடலில் எஸ்.ஜானகி யின் குரலில் பனிகுளிர்படர்வது போன்றதொரு உணர்வு எழும். அந்த உணர்வுக்கு ஏற்ற ஒத்திசையோடு அசோக்குமாரின் ஒளிப்பதிவு குளிர்ச்சி தருவதைப் போன்றிருக்கும். இது ஓர் அதிசயமான தருணமென்று தான் சொல்ல வேண்டும்.

மகேந்திரன் இயக்கி வெளிவந்த மற் றொரு முக்கியமான திரைப்படம் 'மெட்டி'. இத்திரைப்படம் இருசகோத ரிகளின் வாழ்க்கையை யதார்த்த அழ கியலோடு முன்வைத்தது. இத்திரைப் படத்தைப் பலரும் சுவீடன் திரைப்பட இயக்குநர் இன்மெர் பேர்க்மனின் படங்களோடு ஒப்பிட்டுப் பேசினார் கள். வியட்நாமிலிருந்த மகேந்திரனின் ரசிகர் ஒருவரும் தொலைபேசியில் அழைப்பெடுத்து 'மெட்டி' இன்மெர் பெர்க்மனின் 'க்ரைஸ் அன்ட் விஸ் பர்ஸ்' என்ற படத்தின் தரத்தில் இருப் பதாக மகேந்திரனுக்குச் சொன்னார். 'மெட்டியும்' 'க்ரைஸ் அன்ட் விஸ் பர்ஸ்' உம் இரண்டு சகோதரிகளின் வாழ்க்கையைக் காட்டினவே தவிர ஏணிவைத்தாலும் மெட்டிக்கு எட்டாத உயரத்திலிருக்கிறது. 'க்ரைஸ் அன்ட் விஸ்பர்ஸ்' என மகேந்திரன் கருதி னார். அதனால் வியட்நாமிலிருந்து பேசிய ரசிகரை 'இரண்டு படங்க ளையும் எப்படி ஒப்பிடலாம்? மோச மான ரசனை கொண்டவர் நீங்கள்...!' எனத் திட்டிவிட்டார். பிறகுதான் மகேந்திரன் ஓர் உண்மையை உணர்ந் தார். மெட்டியும் 'க்ரைஸ் அன்ட் விஸ் பர்ஸ்' உம் ஒளிப்பதிவில் ஒரே தரத்தி னைக் கொண்டிருக்கிறது என்பதுதான் அந்த உண்மை. அதிலும் ஆச்சரியப் படத்தக்கதென்னவென்றால் க்ரைஸ் அன்ட் விஸ்பர்ஸில் உயர்தொழில்நுட் பத்தைப் பிரயோகித்து அத்திரைப் படத்தின் ஒளிப்பதிவாளர் ஸ்வென் நீக்விஸ்ற் கொண்டுவந்த அதேத ரத்தை தொழில்நுட்பம் வளர்ந்திராக இந்தியாவில் அசோக்குமார் மெட்டி யில் கொண்டுவந்திருந்தார் என்பது தான். அசோக்குமாரின் சிறந்த ஒளிப் பதிவுக்கு இதுவொரு நல்ல எடுத்துக்காட்டாகிறது.

அசோக்குமார் ஒளிப்பதிவுக்கப் பால் திரைப்பட இயக்கத்திலும் ஈடு பட்டார். 1988 காலப்பகுதியில் 'அன்று பெய்த மழையில்' என்றொரு திரைப்படத்தை சரத்பாபு, சில்க் ஸ்மிதா, சரண்யா, ஒய்.ஜி.மகேந்திரன் ஆகியோரை நடிக்க வைத்து இயக்கி னார். ஒளிப்பதிவு சிறப்பாகத்தானி ருந்தது. ஆனால் ஒரு பலவீனமான கதையைத் தேர்ந்தெடுத்திருந்ததால் அத்திரைப்படம் உரிய கவனிப்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவில்லை. வழமையான மசாலாப் படங்களில் ஒரு கவர்ச்சிக்கன்னியாக வந்துபோகும் சில்க்ஸ்மிதாவை இத் திரைப்படத்தில் அதைவிட மட்டமாகக் காட்டியிருந்தார். 1999 காலப்பகுதியில் தனது மகன் விஷாலை வைத்து காமா என்ற திரைப்படத்தை இயக்கினார். அதுவும் பலவீனமான திரைக் கதையால் மோசமான மூன்றாந்தர பாலியல் திரைப்படமாக அமைந்தது. ஓர் ஒளிப்பதிவாளராக அதுவும் வெற்றிகரமான ஒளிப்பதிவாளராகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட அசோக்குமாரால் ஒரு சாதாரணத் திரைப்பட இயக்குநராகக் கூட வெற்றி பெற முடியவில்லை. காலப்போக்கில் அசோக்குமார் என்றோர் ஒளிப்பதிவாளர் இருந்தார் என்ற அளவில் ஒரு தகவலாகச் சுருங்கிப் போனார். அசோக்குமாரின் இறுதி நாட்களை மகேந்திரன் இவ்வாறு நினைவு கூர்கிறார். சில வருடங்களாகவே அசோக் குமார் எங்கே இருக்கிறார் என யாரைக் கேட்டும் தெரியாத நிலையில், ஆறு மாதங்களுக்கு முன்பு அவரது மகன் தொலைபேசியில் அழைத்து அதிர்ச்சியைக் கொடுத்தார். திண்டிவனம் அருகே உள்ள ஒரு மருத்துவமனைக்குச் சென்றால், அங்கே அவசர சிகிச்சைப் பிரிவில் செயற்கைச் சுவாசத்துடன் படுத்திருந்தார் அசோக்குமார். அடையாளமே தெரியாமல் உருக்குலைந்துபோயிருந்தார். சார், நீங்க அவரைக்கூப்பிடுங்க; பேசுங்க. உங்களுக்குப் பதில் சொல்ல முடியலையின்னாலும், நீங்க வந்திருக்கீங்கனு புரிஞ்சுப்பார்' என்றார் அசோக்குமாரின் மகன். அருகில் சென்று அவரது தலையை வருடியபடியே, 'அசோக் .... அசோக்..... மகேந்திரன் வந்திருக்கிறேன். கொஞ்சம் கண்ணைத் திறங்களேன் ப்ளீஸ்...' என்றேன். அது அவரது நினைவை எட்டவேயில்லை! ஒன்பது படங்களில் என்னோடு பரஸ்பரம் உரையாடிப் பழகிய அசோக்குமார், என்வார்த்தைகளையோ உணர்வுகளையோ புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட அசோக் குமார் கடைசியாக ஹைதராபாத்தில் குடியேறிச் சிகிச்சைக்காகச் சென்னை வந்திருந்தார். என் வாழ்வில் எத்தனையோ பேரை இழந்திருக்கிறேன். ஆனால், அசோக்குமாரின் இறப்புத் தான் முதன் முறையாக எனக்குத் தனிமையை உணர்த்துகிறது''.

திரைப்பட ஒளிப்பதிவில் எல்லைகளைக் கடந்து உச்சத்தைத்தொட்டு ஒரு வெற்றிகரமான ஒளிப்பதிவாளராகவும் அதேவேளை திரைப்பட இயக்கத்தில் தோல்வியடைந்த ஒரு மோசமான இயக்குனராகவும் அசோக் குமார் வாழ்ந்து முடித்திருக்கிறார். (மறைவு 2014 அக்டோபர் 22) அவரது மரணம் என்பது வழமையான தொன்றுதான். ஆனால் அவரது ஒளிப்பதிவில் உருவான நூற்றுக்கு மேற்பட்ட திரைப்படங்களின் கலையழகோடு இரண்டறக் கலந்த ஆத்மாவாக அவர் என்றென்றும் திரைப்பட ரசிகர்களின் மனங்களில் நீங்காமல் நிலைத்திருப்பார். ■

---

*(60ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

இதற்கான கருத்தேற்றம் பரவலாக முன்னெடுக்கப்பட்டது. ஜெயகாந்தனின் நடத்தைகளுக்கும் பலவீனங்களுக்கும் தத்துவார்த்த விளக்கம் கொடுக்கும் அறிவுஜீவித்தனம் ஓங்கி இருந்தமையையும் குறிப்பிடத்தான் வேண்டும். இதுவரை சீரழிந்த கம்யூனிஸ்ட்டாக ஜெயகாந்தனை முன்னிறுத்தும் கருத்துநிலையும் அரசியலும் தெளிவாக முன்னெடுக்கப்படவில்லை. இதனைச் செய்யுமளவிற்கு துணிச்சலும் நேர்மையும் கொண்ட விமர்சகர்கள் தமது பங்க ளிப்பைச் சரியாகச் செய்யவில்லை.

ஜெயகாந்தன் ஆரம்பகாலத்தில் ஒரு கம்யூனிஸ்டாக இருந்து பின் காங்கிரஸ்காரராக மாறி, ஒருகட்டத்தில் சித்தர் மரபில் திரிந்த ஜெயகாந்தன் பிற்காலத்தில் இந்துத்துவ அரசியலுக்குள் சரணாகதி அடைந்தார். தொடர்ந்து உலகமயமாக்கலை ஆதரிப்பது, சுரண்டல் ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்துவது, நால்வர்ணக் கோட்பாட்டை தூக்கி நிறுத்துவது... என பல்வேறு பிற்போக்கான அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் எவற்றிலும் கலந்துகொள்ளாது ஒதுங்கி நின்று வந்தார். ஈழப்போராட்டத்தின் நியாயத் தன்மையைக் கூட பல சந்தர்ப்பங்களில் மறுதலித்து ஆதிக்க அரசியலின் குரலாகவும் ஒலித்து வந்தார். இவர் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் புரட்சிகர அரசியலை நீக்கம் செய்து அரசியலற்ற அரசியல் தொடர்வதற்கான முடிவுகளையும் எடுத்து வந்தார்.

'தனது வாழ்வின் உச்சக்கட்டத்தில் எழுதுவதால் தான் மேன்மையுறுகிறேன். அதற்காக எழுதுகிறேன். எழுதுவதால் எனது மொழி வளம் பெறுகிறது. அதற்காகவும் எழுதுகிறேன். எழுதுவதால் எனது மக்கள் இன்பமும் வளமும் எய்துகிறார்கள். அதற்காகவும் எழுதுகிறேன். எழுதுவதால் சமூகப் புரட்சிகள் தோன்றுகின்றன. அதற்காகவும் எழுதுகிறேன். எதிர்கால சமூகத்தை மிக உன்னத நிலைக்கு உயர்த்திச் செல்ல இலக்கியம் ஒன்று தேவை என்பதாலும் எழுதுகிறேன். வாளினும் வலிமை பொருந்தியது எழுதுகோல். வாழ்க்கைப் போராட்டத்தில் நான் தேர்ந்தெடுத்துக்கொண்ட ஆயுதம் எழுதுகோல். அதனால் எழுதுகிறேன். எழுதுகோல் எனது தெய்வம்' என்றெல்லாம் தனது எழுத்தைப் பற்றி வர்ணித்த ஜெயகாந்தனு க்கு கடைசிக் காலத்தில் தன்னுடைய எழுத்து மட்டுமல்ல யாருடைய எழுத்துமே ஒரு பொருட்டாக இருக்கவில்லை. மௌனத்தை இவர் தேர்ந்தெடுத்துக்கொண்டார். எல்லாவற்றையும் கவனித்தார். புன்சிரித்தார். இவ்வளவே இவரைப் பொருத்தளவில் இவர் எழுத்தும் காலமும் ஒன்றே.

தமிழ்ச் சூழலில் ஜெயகாந்தனை இன்னும் ஆழமாகவும் நுட்பமாகவும் மதிப்பிட வேண்டும். இது தவிர்க்க முடியாமல் 'முற்போக்கு இலக்கியம்' 'இடதுசாரி இலக்கியம்' குறித்த இடதுசாரித்தனமான வாசிப்பிற்கும் புரிதலுக்கும் விரிவான களங்களைத் திறந்துவிடும். இதனால் முற்போக்கு போலிமைகளையும் முற்போக்கு வெற்றுக்கோஷ வேடதாரிகளையும் அடையாளம் காணவும் தூண்டுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசேனன்




# பனுவல் பார்வை

தமிழ்ச்சூழலில் கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு புதிய புத்தாக்கமான சிந்தனைகளை அறிமுகம் செய்வதும் அவைசார்ந்த திறனாய்வுக்களங்களை அகலித்து ஆழப்படுத்துவதில் பேராசிரியர் சபா ஜெயராசா தனித்துவமாக விளங்கிவருகின்றார். தற்போது இவர் 'சூழலியல், உளவியல், கலைவடிவங்கள்' எனும் நூலை ஆக்கித் தந்துள்ளார். இன்று சூழலியல் என்பது வளர்ந்துவரும் புதிய அறிவுத்துறை இதன் பன்முகத்தன்மைகள் நோக்கிய ஆய்வுகள் பல்வேறு மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சூழலுடன் தொடர்புடைய உளவியல், சமூகவியல், பண்பாட்டுவியல், கல்வியியல், இலக்கியங்கள், திறனாய்வு முதலான துறைகளை உள்ளடக்கிய நூலாக இது ஆக்கம் பெற்றுள்ளது.

சூழலுக்கும் மனிதருக்கும் இடையேயுள்ள இடைவினைகள் பற்றிய ஆய்வு சூழலியல் உளவியலில் முதன்மை பெற்று வருகின்றது. மனிதரால் உருவாக்கப்படும் சமூகச் சூழலும் இயற்கைச் சூழலும் மனித நடத்தைகளிலும் சிந்தனைகளிலும் உணர்வுகளிலும் செல்வாக்குளை ஏற்படுத்துகின்றன. இயற்கைச் சூழல் மனிதர் மீது ஏற்படுத்தும் செல்வாக்குகள் மனித சிந்தனையில் நீண்டகாலமாக இடம் பெற்று வருகின்றன. இதேவேளை மார்க்சியத் தர்க்கம், சமூக இருப்பு மனித நடத்தைகள் ஏற்படுத்தும் தாக்கங்களை விரிவாக விளக்கியுள்ளது. மனித உணர்வுகள் சமூக இருப்பில் இருந்து மேலெழுதலை மார்க்சியம் தெளிவுப் படுத்துகின்றது. இன்று 'மார்க்சியமும் சூழலியலும்' எனும் சிந்தனை புலம் பல்வேறு துறைகளிலும் செல்வாக்கு பெற்றுவருகின்றது.

உளவியல் புலத்திலே 'சூழலியல் உளவியல்' என்னும் கருத்தாக்கம் புதுவிசையாக எழுச்சிப்பெற்றுள்ளது. ஒளி, குளிர், வெப்பம் முதலான சூழல் விசைகள் மனித செயற்பாடுகளிலே ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பன்முகத்தன்மையை அடையாளப்படுத்தும் கற்கைநெறியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. நகரச்சூழல், கிராமச்சூழல், நெருங்கிய தொடர்மாடி வீட்டுச் சூழல்,சேரி வாழ்க்கை, சன நெருக்கடி முதலியவை மனித நடத்தைகளில் ஏற்படுத்தும் செல்வாக்குகளை விரிவான ஆய்வுக்கு உட்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தும் சூழல் உருவாகியுள்ளது. இந்த விடயங்களை எல்லாம் உள்வாங்கி சிந்திக்கும் ஆய்வு செய்யும் மனோபாவத்தை வளர்த்துச் செல்லும் பொழுதுதான் புதிய கலைவடிவங்கள் பற்றிய தேடல் சாத்தியமாகும்.




'சூழலியல்' உளவியலில் ஒரு முக்கியமான விடயம் சூழலின் ஆபத்துக்களை புலக்காட்சிக் கொள்ளல் இங்கு ஒரு சாரார் சூழலின் ஆபத்துக்களைப் பற்றி அறியாதிருக்கின்றனர். இன்னொரு சாரார் சூழலில் ஏற்படும் தாக்கங்களை மிகைப்படுத்தி நோக்குகின்றனர். சூழலில் நிகழும் தாக்கங்கள் நீண்ட பட்டியலைக் கொண்டது நீர், வளி, நிலம், ஒளி ஆகியவை மாசடைதல், அமிலமழை பெய்தல், தொழிற்சாலைகளினதும் வாகனங்களினதும் நச்சுப் புகை வெளியேற்றல், இரசாயன கழிவுகளை கொட்டுதல், ஓசோன் படையில் ஓட்டை விழுதல், கதிர் இயக்கத்தாக்கம், காடுகள் அழிக்கப்படுதல், உயிரிணங்கள் அழிக்கப்படுதல், சமுத்திர நீர் மட்டம் உயர்தல், பெரும் பனிப்பாறைகள் உருகுதல், வெப்பநிலை அதிகரித்தல், எதிர்பாராத இயற்கை அழிவுகள் தோற்றம்பெறுதல், காட்டுத் தீ பரவுதல், குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படுதல், எரிபொருள் நெருக்கடிகள், புதிய நோய்வகைகள் உருவாக்கம் பெறுதல் என்றவாறு இந்தப் பட்டியல் நீண்டு செல்லும் இதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை அபிவிருத்தி என்ற பெயரில் மூன்றாம் உலக நாடுகளின் இயற்கைச் சமநிலை சீரழிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலைமைகளை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். சூழலியல் பிரச்சினைகளில் ஆழ்ந்த பின்புலத்தை விரிவாக நோக்கிச் செல்லும்பொழுது தான் நாம் சமூக அசைவியக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும். நவீன முதலாளிய வளர்ச்சியும் சூழலை சுரண்டி மிகையாக லாப மூட்டும் செயற்பாடுகளும் சூழல் கேடுறுவதன் பின்புல விசைகளாக அமைதலை தெரிந்து அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான பின்புலங்களை ஆழ்ந்து சிந்திப்பதற்கான சிந்தனை விசைகளை இந்த நூல் தொகுத்துத் தருகின்றது.

இந்நூலில் நிலத்தோற்றம் சார்ந்த உளவியல் பதிவுகள், கட்டிட அமைப்பு உளவியல், வளர்முக நாடுகளின் சூழலியல் பிரச்சினைகள், போரும் சூழலியல் உளவியலும், இருத்தலியமும் உளவியலும் சூழலும், சூழலியல் வாதம், சூழல் இறையியல், இனக்குழுமச் சூழலியல், மருத்துவச் சூழலியல், சூழல் அழகியல், சூழலியற் கலை இசையிற் சூழலியல், உடல்மொழி, சூழலியற் திறனாய்வு, குழந்தை வளர்ச்சியும் சூழலியமும், சூழலியற் கல்வி, பசுமைச் சமாதானம், பண்பாட்டு முனைப்பு உளவியல், பிரதேச இலக்கியம், தேசிய இலக்கியம், முதலான விடயங்கள் இறுக்கமாக ஆழமாக பேசப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் தனித் தனியே சிறு சிறு நூல்களாக எழுதப் படக்கூடிவை.

இலங்கையில் நிகழ்ந்த முப்பது ஆண்டுகால உள்ளூர்ப்போரும் சூழலியல் பாதிப்புகளும் உளவியல் நெருக்கீடுகளும் எண்ணற்ற நிலையில் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியவை. இதற்காக கள ஆய்வுகளும் கள நிலைவரங்களும் விரைவான தகவல்கள் கொண்டு திரட்டப்படவேண்டியுள்ளன. இதனை நுட்பமாக இந்த நூல் அடையாளம் காட்டுகின்றது. சூழலியல் வாதம் பரந்த பன்முகத் தரிசனங்களைக் கொண்டது. குறிப்பாக கருத்தியல் பின்புலம், மெய்யியல் பின்புலம், உளவியல் பின்புலம் ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது. மனிதரை மட்டுமன்றி மனிதம் சாராதவற்றையும் இது உள்ளடக்குகின்றது. சூழலை பாதுகாத்தல் பராமரித்தல், முன்னேற்றம் பெறச் செய்தல் முதலியவை சூழலியல் விரிவில் உள்ளடக்குகின்றன. மேலும் உயிர்ப்பன்மையை பாதுகாத்தல், தாவரங்கள் மற்றும் விலங்குகளை அழிவில் இருந்து காப்பாற்றுதல் முதலியவை கருத்தியல் பின்புலத்துடன் நேரடித் தொடர்பு கொண்டவை. சூழலை இலாப நோக்கிலே மூர்க்கத்தனமாகச் சுரண்டும் செயற்பாடுகளில் இருந்து பாதுகாக்கும் கருத்தியல் அமைவு முக்கியமானது.

சமூகத்தின் இயல்புகள் சூழலின் மீது தாக்கங்களை ஏற்படுத்தி வைக்கின்றன. இங்கு சூழலியல் பிரச்சினைகளை சமூகம் எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதும் சமூகத்தின் இயல்பைப் பொறுத்த செயற்பாடாகின்றது. இவற்றின் தொடர்ச்சியாக 'அரசியல் முதலாளியம்' என்ற கருத்தாக்கம் மேலெழுந்து வருகின்றது. இதனால் சூழலியலை சமூக அரசியல் நோக்கிலே ஆராயும் முறைமைகள் வளர்ந்தன. அரசு, மூலதனம், உழைப்பு என்ற முத்தரப்பும் இணைந்த உற்பத்தி முறைமை சூழலியல் தாக்கங்களை ஏற்படுத்துதல் குறித்துரைக்கப்பட்டது. தனியுடைமை முதலாளியம் வளர்வதற்குரிய அரசியல் ஆதரவும் பல தளங்களிலும் பல நிலைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக இன்றைய உலகமயமாக்கல் சூழலில் சூழலியல் உளவியல் கலைவடிவங்கள் தொடர்பில் புதிய வடிவங்களை ஆக்க முறைகளை உருவாக்குவதற்கான உந்துதல்களை அவசியப்படுத்தி வருகின்றன.

சமகாலத்தில் கட்டிட அமைப்பு உளவியல் குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தேவை உள்ளது. இன்று நாம் வாழ்விடங்கள் சார்ந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றோம். இவை நமது உளப்பரிமாணங்களில் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. கட்டிட அமைப்பின் ஒடுக்கமும் நெரிசலும் முரட்டுத்தனங்களையும் வன்செயல்களையும் விலகல் நடத்தைகளையும் உருவாக்குவதில் நேரடியான செல்வாக்குகளைக் கொண்டிருக்கின்றன.

சூழலின் இயல்புடன் இணைந்து பண்பாடு மேலெழுகின்றது. ஓர் இனத்தினது அடையாளம் அவர்களின் பண்பாட்டுக் கோலங்களால் வெளிப்பாடுகொள்ளும். பண்பாட்டு உளவியல் ஒவ்வொருவரினதும் நடத்தைகளும் சிந்தனைக் கோலங்களும் பண்பாட்டில் எவ்வளவு தூரம் ஊடுருவி தங்கியுள்ளன என்பதை ஆராய்கின்றது. நவீன பின்காலனிய திறனாய்வுச் சூழலில் பண்பாட்டு உளவியல் பல நிலைகளிலே எடுத்தாளப்படுகின்றது. மனித மனமும் பண்பாடும் வேறு பிரிக்க முடியாதவை. மேலைப்புல உளவியல் கோட்பாடுகள் இவர்களின் பண்பாடு தழுவிய நடத்தைக் கோலங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டமை. பின்காலனியத் திறனாய்வு இக்கருத்து முனைப்புடன் முன்வைக்கப்படுகின்றது.

இதன் நீட்சியாக பிரதேச இலக்கியம் தேசிய இலக்கியம் குறித்து ஆழமாக சிந்திப்பதற்கான பொருள்கோடல் செய்வதற்கான சாத்தியப்பாடுகளையும் அடையாளம் காட்டும் சிந்தனை முகிழ்ப்புக்கான பல்வேறு கூறுகளை யும் இந்நூல் தொகுத்துத் தருகின்றது.

சூழலியலின் பன்முகப் பரிமாணங்களையும் உளவியல் பரிமாணங்களையும் எடுத்துரைப்பதுடன் புதிய கலைவடிவங்கள் உருவாவதற்கான பின்புலங்களையும் அடையாளம் காட்டுவதில் இந்நூல் தனிச்சிறப்பு மிக்கதாக விளங்குகின்றது. திறனாய்வுச் சிந்தனையில் புதிய சாளரங்களை இந்நூல் நிச்சயம் திறந்துவிடும். இந்நூலை ஆக்கித்தந்த பேராசிரியர் சபா ஜெயராசா நன்றிக்குரியவர். ஏனெனில் தமிழில் புதுப்புது விடயங்களை அறிந்து தெளிந்து கொள்வதற்கு நமக்கு உதவி செய்கின்றார். இதுபோன்ற நூல்களை உடனுக்குடன் வெளியிட்டு வரும் சேமமடு பதிப்பகமும் பாராட்டுக்குரியது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

யுனெஸ்கோ தீர்மானத்தின்படி உலகப் புத்தக நாள் ஆண்டு தோறும் ஏப்ரல் 23ஆம் திகதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அறிவைப் பரப்புவதற்கும் உலகெங்கும் உள்ள பல்வேறு பண்பாடுகள் பற்றி விழிப்புணர்வைப் பெறுவதற்கும் புரிதல், சகிப்புத் தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தவும் புத்தகம் ஒரு சிறந்த கருவியாக உள்ளதால் உலக புத்தக தின அனுஷ்டிப்பு பிரகடனப்படுத்தப் பட்டது. உண்மையில் காதலர் தினம் ஆசிரியர் தினம், தந்தையர் தினம், தாய் தினம் போன்ற கொண்டாட்டங்களில் காட்டும் அக்கறையை புத்தக தினக் கொண்டாட்டங்களில் காணமுடிவதில்லை.

இன்று புத்தகத்திற்கும், நமக்குமான உறவு தூர விலகிச் சென்று கொண்டுதான் உள்ளது. ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் ஆயிரம் (1000) பிரதிகள் அச்சிட்ட நாம் படிப்படியாக ஐந்நூறு, முன்னூறு, இருநூறு என்று வந்து நிற்கிறோம். கடந்த ஒரு தசாப்த காலத்தில் இருநூறு பிரதிகளை உரிய வாசகர்களிடம் கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நூல் விநியோகம், நூல் பண்பாடு குறைந்து செல்லுமானால் நமது தரப்பின் வாசிப்பின் நிலை பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. போர் நெருக்கடி மிகுந்த காலத்தில் கூட



தெ.ரவீந்திரன்

## புத்தகங்களும் நாமும்...!

நல்ல நூல்களின் வருகையும் வாசிப்பும் ஓரளவு திருப்தி அளிப்பதாகவே இருந்தது. ஆனால் இன்று எவ்வளவு முன்னேற்றங்கள், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் இதற்குள் வாசிப்பு மட்டத்தில் உயர்ச்சியோ, பண்புசார் மாற்றமோ ஏற்படவில்லை. எதிராக சரிவு தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

'தரமான புத்தகத்தை வாசிக்காத மனிதர் எழுத்தறிவு இல்லாதவருக்குச் சமம்' என்கின்றனர். அப்படியானால் எங்கள் நிலை என்ன? மனிதருக்கும், புத்தகத்திற்குமான உறவு பற்றி அதன் அவசியம் பற்றி நாம் சிந்திக்க வேண்டாமா? அறிவின் தரம், வாசிப்பின் தரம் ஒரு சமூகத்தின் இருப்பை அடையாளப்படுத்தும் சுட்டிகளாக இருக்கின்றன. 'ஒருவர் விரும்பும் நூல்களைக் காட்டுங்கள் அவர் யாரென்று கூறலாம்' இப்படி தனிமனித தற்படிமத்தின் அளவுகோலாக இருந்து வந்த நிலையும், எம்மத்தியில் இருந்தது. ஆனால், இன்று புத்தகங்களையே தொட்டுப் பார்க்காத, வாசிக்காத நிலையில் தனி மனித தற்படிம ஆளுமையை எவ்வாறு நாம் மதிப்பிட முடியும்?

வாசிக்காத சோம்பேறித் தனம்- அறிவுச் சோம்பேறித் தனமாக மாறியுள்ள காலகட்டத்தில் நூல்களுக்கான முக்கியத்துவம் எமது சமூகத்தில் ஏற்படுமா? நாம் ஆழமாக, அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் நிற்கின்றோம்.

இன்றைய கல்வி அமைப்புக் கூட வாசிக்காத, படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தாத மாணவ சமூகத்தைத் தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. மாணவர்களின் படைப்பாற்றலை/ ஆற்றலை விருத்தி செய்வதற்கும் தேடல் உள்ள சமூகமாக மாறுவதற்கும் புத்தகங்கள் சிறந்த நண்பனாக, நல் ஆசானாக விளங்க முடியும். இந்தப் பண்பாட்டிற்கு மாறாகத் தான் எமது கல்விச்சூழல் இயங்கிக் கொண்டிருக்கிறது. மாணவர்களின் படைப்பாற்றலை வளர்த்தெடுப்பதில், வடிவமைப்பதில் நூல்களுக்கு முக்கிய பங்கு உண்டு. நூல்கள் சார்ந்த பரீட்சயமும் வாசிப்பும் தான் மாணவர்களை புதிய தேடல் மிக்கவர்களாகவும் புதிய கண்டுபிடிப்புக்களில் ஈடுபடுபவர்களாகவும் மாற்றும். இதற்குச் சாதகமாக பாடசாலைகளில் நூலகங்களை மேம்படுத்துவதில் அக்கறையுடன் செயற்படுவதில்லை எனலாம். பௌதிக கட்டங்களைக் கட்டுவதில் உள்ள ஈடுபாட்டை நூலகங்களை உருவாக்குவதில் காட்டுவதில்லை. மேலும் தரமான பாடநூல் ஆக்கத்திலும் சரிவு ஏற்பட்டு வருகின்றது. நல்ல உசாத்துணை நூல்களுடன் ஈடுபாடு காட்டாதவர்கள் பாடநூல் ஆக்குநராக வரும் அவலமும் நேர்ந்துள்ளது.

உலகப் புத்தக தினம் காட்டும், வெளிப்படுத்தும் நோக்கம் தமிழ்ச் சூழலில் சமூகமயப்பட வேண்டும். கல்விக்கும் நூல் வளத்திற்கும் இடையே இணைப்புக் காணப்பட வேண்டும். புத்தகப் பண் பாட்டின் உயிர்ப்பு சமூகத்தின் உயிர்ப்பாக வர வேண்டும். 'மூடிக்கிடக்கும் நூல்களே நமக்கு அதிக சோகத்தைத் தருவன' இந்த உணர்வு காட்டும் யதார்த்தம் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

ஒரு தரமான புத்தகத்தை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது தான் தீராத பிரச்சினை. ஒருவர் ஆரம்பத்தில் எப்படிப்பட்ட புத்தகத்தையும் படிக்கலாம். ஆனால் காலப்போக்கில் தன் கருத்தை மேம்படுத்திக் கொண்டே போக வேண்டும். பத்தாயிரம் புத்தகத்தைப் படித்த ஒருவரிலும் பார்க்க பத்து நல்ல புத்தகத்தைப் படித்தவர் உயர்ந்தவராக இருக்கலாம். சமூகப் பொறுப்பும் ஒழுக்கமும் உள்ளவராகவும் இருக்கலாம். ஆகவே நாம் எப்படிப்பட்டவர்களாக வாழப் போகின்றோம் என்ற உரிமையை நாமே எடுத்துக் கொள்வோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து விளையாட்டுச் செய்திகளும் உங்கள் விரல் நுனியில்




https://play.google.com/store/apps/details?id=com.virakesarisports.news&hl=en

The Sport app is being run by Express Newspapers (Cey) (Pvt) LTD

Google play



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No. 185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org